விலை : 20.00
website : www.valampurii.lk
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 வைகாசி 04 செவ்வாய்க்கிழமை (17.05.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 150

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

# அடைமழை காரணமாக இயல்புநிலை பாதிப்பு

## ■ வடக்கில் 15 ஆயிரத்துக்கும் அதிகமானோர் இடம்பெயர்வு
## ■ 374 வீடுகள் வெள்ளத்தில்; சூழல் காற்றினாலும் சேதம்

(யாழ்ப்பாணம்)

**நாடு முழுவதும் இரண்டு நாட்களாக தொர்டார்ச்சியாக பெய்து வரும் கடும் காற்றுடன் கூடிய அடைமழை காரணமாக வட மாகாணத்தில் இயல்புநிலை ஸ்தம்பித்ததுடன் 2 நாட்களில் 4ஆயிரத்து 414 குடும்பங்களைச்சேர்ந்த 15 ஆயிரத்து 833 பேர் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்துள்ளனர். இதில் கிளிநொச்சி மாவட்டமே அதிகளவான பாதிப்பை எதிர்நோக்கியுள்ள நிலையில் அங்கு 7 ஆயிரத்து 249 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.**





வடக்கு மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களிலும் நேற்றைய தினம் மாலை வரை பெற்றுக்கொள்ளப்பட்ட தரவின்படி அதிகளவான மக்கள் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் கடும் காற்றினால் பாரிய அளவில் பொருட்சேதங்களும் ஏற்பட்டுள்ளன. அத்துடன் வடக்கில் 374 வீடுகளும் வெள்ளம மற்றும் சுழல்காற்றின் காரணமாக பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

அந்த வகையில் அதிகப்படியாக கிளிநொச்சி மாவட்டத்தில் 2ஆயிரத்து 159 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 249 பேர் பாதிக்கப்பட்டதுடன் அவர்களில் 75 குடும்பங்களைச் சேர்ந்த 242 பேர் 5 நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளனர்.

அதே வேளை 274 குடும்பங்களைச் சேர்ந்த 934 பேர் உறவினர் வீடுகளில் தங்கியுள்ளனர். ஒரு வீடு முழுமையாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 106 வீடுகள் பகுதியளவில் பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மின்னல் தாக்கியதில் இருவர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

யாழ் மாவட்டத்தில் ஆயிரத்து 197 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 140 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அதில் யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் 892 குடும்பங்களைச்சேர்ந்த 3 ஆயிரத்து 943

23ஆம் பக்கம் பார்க்க....

## நாடு முழுவதும் சீரற்ற காலநிலை

(யாழ்ப்பாணம்)

நாட்டில் கடந்த இரு நாட்களாக நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக மலையகப் பகுதி உட்பட அனைத்து மாவட்டங்களிலும் மண்சரிவு, கடும் காற்று, வெள்ளம் மற்றும் நீர் மட்ட உயர்வு போன்ற அனர்த்தங்களினால் பல பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதோடு மக்களின் இயல்புநிலை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் வட மாகாணம்

04ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கின் ஆளுநர் கூரேயை ஜனாதிபதி பதவி நீக்க வேண்டும்

### சிரேஷ்ட சட்டத்தரணி ஸ்ரீகாந்தா காட்டம்

(யாழ்ப்பாணம்)

நாட்டின் அரசியல் சாசனத்தை மீறி, வடக்கு மாகாணசபையினையும், முதலமைச்சரினையும் விமர்சிக்கும் ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயை ஜனாதிபதி உடனடியாக பதவி நீக்கம் செய்ய வேண்டும். அல்லது நாங்களாக வெளியேற்ற வேண்டி ஏற்படும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பங்காளிகட்சியான தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) எச்சரிக்கை செய்துள்ளது.

புதிய ஆட்சியில் வடக்கு மக்களது கனவானாக எதிர்பார்க்கப்பட்டவர் ஆளுநர். வடக்கு மாகாண சபையினையும், முதலமைச்சரினையும் பொது வெளியில் விமர்சி

24ஆம் பக்கம் பார்க்க....

## கிளிநொச்சியில் அதிக மழைவீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

வடக்கில் நேற்று முன்தினம் காலை 8.30 மணி தொடக்கம் நேற்றைய தினம் காலை 8.30 மணி வரையான 24 மணித்தியாலங்களில் கிளிநொச்சி மாவட்டத்திலேயே 373.2 மில்லி மீற்றர் அதிகூடிய மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வானிலை அவதானிப்பு நிலையம் தெரிவித்துள்ளது

அந்த வகையில் வடமாகாணம்,

24ஆம் பக்கம் பார்க்க....

## அனர்த்தங்களை எதிர்கொள்ள சகல பிரிவுகளும் விழிப்புடன்

### ஜனாதிபதி மைத்திரி அறிவுறுத்து



(கொழும்பு)

சீரற்ற காலநிலை காரணமாக நாட்டில் ஏற்படும் அவசர நிலைமைகளுக்கு முகம்கொடுப்பதற்கு எந்நேரமும் விழிப்புடன் இருக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## "இறுதி யுத்தத்தின் இரத்தக் குளிப்புகள்"

## முள்ளிவாய்க்கால் நினைவுநாள் நாளை தமிழர் தாயகம் எங்கும் நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

இறுதிக்கட்ட யுத்தத்தில் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட உச்சகட்ட இனவழிப்பு நாளான மே 18 முள்ளிவாய்க்கால் தினம் நாளைய தினம் தமிழர் தாயகம் எங்கும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

நாளைய தினம் கறுப்பு கொடிகளை கட்டி துக்க தினமாக அனுஷ்டிக்குமாறும் பொது அமைப்புக்கள், கட்சிகள் என்பன கோரியுள்ளன.

வன்னியில் நடைபெற்ற யுத்தத்தில் பல இலட்சம் தமிழர்கள் கொலலப்பட்டு இந்த வருடத்துடன் எழு ஆண்டுகள் நிறைவுறுகின்றன. இதில் கொல்லப்பட்ட ஒட்டுமொத்த தமிழ் மக்கள் நினைவாக பொது நினைவு தினமாக மே 18 ஆம் திகதி பிரகடனப்படுத்தப்பட்டு அனுஷ்டிக்

23ஆம் பக்கம் பார்க்க....

# மகிந்த தரப்பின் இராணுவ நிகழ்வுக்கு அதிகாரிகள் எவரும் செல்ல முடியாது!

## பாதுகாப்பு அமைச்சின் செயலர் அறிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தரப்பினரால் குருநாகலில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இராணுவதினத்திற்கு, முப்படை பிரதானிகளின் அனுமதியின்றி எந்தவொரு அதிகாரியும் கலந்து கொள்ள முடியாது என, பாதுகாப்பு அமைச்சின்செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

குருநாகலில்இராணுவ தினத்தை கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தமக்கு தகவல்கிடைக்கப்பெற்றுள்ளது எனவும், முப்படை பிரதானிகளின் அனுமதியின்றி எந்தவொரு படை அதிகாரியும் அதில் கலந்து கொள்ள முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, அரசாங்கத்தால் உத்தியோகபூர்வமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தேசிய இராணுவ தின நிகழ்வுகள் நாளைபத்தர முலலையில் இடம்பெறவுள்ளதாக அவர சுட்டிக்காட்டியுள்ளார். (செ-11)

# சிறுநீரக வியாபாரம் குறித்து 6 இந்தியர்கள் மீது வழக்கு

(கொழும்பு)

சட்ட விரோத சிறுநீரக வியாபாரம் சம்பந்தமாக இலங்கையில் கைது செய்யப்பட்டுள்ள ஆறு இந்திய பிரஜைகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய உள்ளதாக பொலிஸார் கொழும்பு நீதவான் நீதிமன்றத்திடம் தெரிவித்தனர்.

மேலும், சட்ட விரோதமாக விசா அனுமதியின்றி இலங்கையில் தங்கியிருந்தது தொடர்பாக குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டத்தின்படி அவர்கள் மீது வழக்கு தாக்கல் செய்யப்படுமென்று கூறிய பொலிஸார் இது சம்பந்தமாக சட்ட மா அதிபரின் ஆலோசனைகள் பெறவுள்ளதாக தெரிவித்தனர்.

அதே போன்று இந்தக் குற்றச்சாட்டு தொடர்பாகக் கைது செய்யப்பட்டு கொழும்பு, மிரிகானை விசேட முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்திய பிரஜை ஒருவர் தப்பியோடியது குறித்து விளக்கமளிப்பதற்கு நேற்று நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு குடிவரவு திணைக்களத்தின் பணிப்பாளருக்கு கடந்த வழக்கு தினத்தில் நீதிபதி உத்தரவு பிறப்பித்திருந்தார். ஆனால், அந்த அதிகாரி நேற்று நீதிபதி முன் ஆஜராகவில்லை.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரியை எதிர் வரும் 26ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நீதிபதி மீண்டும் உத்தரவு பிறப்பித்தார்.

மேலும், தப்பியோடிய இந்திய பிரஜை இலங்கையை விட்டு வெளியேறியுள்ளாரா என்பதை ஆராய்ந்து அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறும் நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

சந்தேக நபர்களை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பித்த நீதிபதி அன்றைய தினம் அவற்றின் பிணை மனுக்கள் குறித்தும் ஆராயப்படும் என அறிவித்தார். (செ-11)


## கண்ணீர் அஞ்சலி



அதிபர் சேவை தரம் III இற்கு புதிய நியமனம் பெற்று முன் சேவைப் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் எமது கிளிநொச்சி நிலைய பயிற்சியாளர் த.டே.கிஸ்காட் அவர்களது அன்புத் தந்தை

அமரர்

**க.தணிகாசலம் டேவிட்**

அவர்கள்

இறைபதம் எய்தியமையையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

இணைப்பாளர், வளவாளர்கள்
தரம் III புதிய அதிபர்கள்
கிளிநொச்சி நிலையம்.

(C-4625)


# யாழ்.பல்கலைக் கழக முன்றலில் நாளை நினைவேந்தல் நிகழ்வு

## பல்கலை மாணவர் ஒன்றியம் தெரிவிப்பு

(முள்ளிவாய்க்கால்)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு எதிர்வரும் மே மாதம் 18 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக முன்றலில் நடைபெறவுள்ளதாக யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அவர்கள் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

யுத்த விதிகளை மீறி ஒரு தனி இனத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட மிகப்பெரிய மனிதப் படுகொலையின் ஏழாம் ஆண்டு நினைவுகள் இன்றும் காயாத குருதியாகி ஆறாத ரணங்களாக எங்கள் நெஞ்சங்களில் புரையோடிக் கிடக்க இந்த நாள் மீண்டும் ஒருமுறை நினைவில் எழுகிறது.

அந்நாளில் உயிர்துறந்த அப்பாவி உயிர்களுக்கு மறுக்கப்பட்ட நீதியானது இன்றும் மறைக்கபட்ட நீதியாகியுள்ளது. நல்லாட்சி என்ற பெயரிலான அரசு இன்று குற்றமிழைத்தோரை எவ்வித கேள்விக்கும் உட்படுத்தாமல் சுதந்திரமாக நடமாட விட்டிருக்க..!!

எம் இனிய உறவுகளே!

தமிழ் பேசும் ஒரே குற்றத்திற்காக வயது பேதமின்றி கருவுற்ற குழந்தை முதல் கட்டிலில் கிடந்த முதியோர் வரை ஈவிரக்கமில்லா பேரினவாதத்தால் படுகொலை செய்யப்பட்ட இந்த கறுப்பு நாளில் அத்தனை உறவுகளினதும் ஆத்ம சாந்திக்காகவும் அவர்களினது நீதிக்கான வேண்டுதலாகவும் உண்மையான உணர்வுகளோடு அஞ்சலி செலுத்துவோம்.

இவ் அஞ்சலி நிகழ்வில் அனைவருமகலந்து கொள்ளுமாறு யாழ்பல்கலைக்கழக மாணவர்ஒன்றியத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (செ-9)

# வித்தியானந்தனின் நினைவு பேருரை 19ஆந் திகதி

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் சு.வித்தியானந்தனின் நினைவுப் பேருரை நாளை மறுதினம் 19ஆம் திகதி வியாழக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ் துறைத்தலைவர்பேராசிரியர்எஸ்.சிவலிங்கராஜா, புலமைச் சிரத்தைக்கு உட்படாத தமிழ்ச் கவிதைப் பாரம்பரியம். தனிப்பாடல் திரட்டினை முன்னிறுத்திய நோக்கு, என்றபொருளில் நினைவுப்பேருரை நிகழ்த்தவுள்ளார். (ந)


## மணிவிழா வாழ்த்துக்கள்

17.05.2016



திரு.
**கயிலாசபிள்ளை விஜயகுமார்**
(உபதபால் கந்தோர் வீதி, அராலி தெற்கு, வட்டுக்கோட்டை)
அதிபர் -
யா/நவாலி ஸ்தான அ.மி.த க பாடசாலை, மானிப்பாய்.

அராலி ஈந்த விஜயகுமாரா !
அகவை அறுபது கண்டீர் அகமகிழ்ந்தோம்
வாழி வாழி ! பல்லாண்டு வாழி வாழி ! ஆரம்பகல்வி
ஆசானாய் திருமலையில், உயர்ந்து நின்ற கலைமகள் வித்தியிலே களிப்போடு
வித்திட்டீர். தொடர்சேவை பல நகரில் பக்குவமாய் ஆற்றிவிட்டு நிறைவான
சேவையதை நவாலி ஸ்தானம் கண்டதுவே. கறைபடியா சேவையதின் நாயகனே !
வாழி வாழி ! குறைவிலா சேவை செய்த குமாரனே நீ வாழி வாழி ! தரமுயர்பதவி
கூட தாமாக வந்த போதும் நேர்மையோடு மறுதலித்து எம்மண்ணில் புரிந்த
சேவை ஏழுலகும் போற்றி நிற்கும். எம்தலைவா வாழி வாழி ! முப்பத்து
எட்டு ஆண்டு முழுமையாக நிறைவு செய்தீர். குவலயத்து குரு மணியே
குடும்பமோடு பல்லாண்டு வாழி வாழி !

ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள்
யா/நவாலி ஸ்தான அ.மி.த.க பாடசாலை, மானிப்பாய்

(4586)



## சேவைநலன் பாராட்டும் பிறந்தநாள் வாழ்த்தும்

60 வது



**இ.சிவசுப்பிரமணியம்**

கட்டடங்கள் திணைக்களத்தின் நிறைவேற்று எந்திரியாக
இதுவரை காலமும் சேவையாற்றிய திரு.இராசையா சிவசுப்பிரமணியம்
அவர்கள் 17.05.2016 தனது 60-வது பிறந்தநாள்
அன்று தனது சேவையில் இருந்து ஓய்வு பெறுகின்றார்.
சேவைக்காலங்களில் மிகவும் ஒழுக்கத்துடனும் நேர்மையுடனும்
அர்ப்பணிப்புடனும் சேவையாற்றியதுடன் சக ஊழியர்களுடன்
அன்புடன் நடந்து கொள்பவர்.

இவரது சேவை நலனை பாராட்டுவதுடன் பிறந்தநாள் வாழ்த்துக்களைத்
தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகின்றோம்.

வாழ்த்துபவர்கள் :
நிறைவேற்று எந்திரி அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம்
கிளிநொச்சி.

(4595)

# அனைத்துலக அழுத்தங்களினால் போர் வெற்றி விழா இடைநிறுத்தம்

## பசில் ராஜபக்ஷ குற்றச்சாட்டு

(கொழும்பு)

அனைத்துலக அழுத்தங்களினால் தான், அரசாங்கம் போர் வெற்றி விழாவைத் தவிர்த்திருப்பதாக, முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ குற்றம்சாட்டியுள்ளார்.



கொழும்பில் செய்தியாளர்களிடம் நேற்று கருத்து வெளியிட்ட அவர்.

"எமது அரசாங்கம் ஆட்சியில் இருந்த போது. போர் வெற்றியை கொண்டாட வேண்டாம் என்று வெளிநாட்டுத் தூதுவர்கள் அழுத்தம் கொடுத்தனர்.

இந்நிலையில் மேற்குலக நாடுகளின் தயவைப் பெற முடியும் என்பதற்காகவே. போர் வெற்றியைக் கொண்டாட அரசாங்கம் விரும்பவில்லை." என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.(இ-5)


## 31 இலங்கை தமிழ் அகதிகள் 19ம் திகதி தாயகம் திரும்புவர்

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினுடைய (UNHCR) வசதிப்படுத்தலுடனும் ஒருங்கிணைப்புடனும் 31 இலங்கை தமிழ் அகதிகள் தமிழ்நாடு இந்தியாவிலிருந்து நாளை மறுதினம் 19 ஆம் திகதி இலங்கைக்கு வருகைதர உள்ளனர். இவர்கள் சென்னையிலிருந்து மிஹின் லங்கா விமானசேவை (MJ 130) இனூடாக மு.ப. 11.45 மணியளவில் வருகைதர உள்ளனர். சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு. புனர்வாழவளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதனின் முயற்சியால் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சும் மிஹின்லங்கா விமான சேவை நிறுவனமும் அவர்களது பயணப் பொதியின் அளவையும் அதிகரித்துள்ளது.

இவ் அகதிகள் 31 பேரில் 18 ஆண்களும் 13 பெண்களும் உள்ளடங்குகின்றனர். இவர்கள் திருகோணமலை. மன்னார். முல்லைத்தீவு. பொலனறுவை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கு மீள்குடியமர்வதற்காக வருகை தருகின்றனர் என சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு. புனர் வாழ்வளிப்பு. மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

இவர்களுக்கு இலங்கையை வந்தடைவதற்கு இலவசமாக விமான பயணச்சீட்டு அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் வழங்கப்படும். அத்துடன். மீள் சமூக ஒருங்கிணைப்பிற்கான நன்கொடையாக ஒவ்வொருவருக்கும் 75 அமெரிக்க டொலர்களும்.போக்குவரத்து நன்கொடையாக ஒவ்வொருவருக்கும் 19 அமெரிக்க டொலர்களும்.உணவு அல்லாத பண நன்கொடையாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் 75 அமெரிக்க டொலர்களும் வழங்கப்படுகின்றது என அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## 5 இலட்சத்து 50 ஆயிரம் பெறுமதியான கஞ்சா பொதியுடன் ஒருவர் கைதானார்



மன்னார் இலுப்பைக் கடவைப் பகுதியில் 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான கேரளா கஞ்சாப் பொதிகளுடன் சந்தேக நபர் ஒருவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு கைது செய்யப் பட்டுள்ளார் என மன்னார் பொலிஸ் நிலைய போதைப் பொருள் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

மன்னார் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சமன் ஜட்டவரவின் பணிப்புரைக்கு அமைய குறித்த கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


மீட்கப்பட்ட கஞ்சாப் பொதிகள் 5 கிலோ 450 கிராம் எனவும் அதன் பெறுமதி 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் , விசாரணைகளின் பின்னர் குறித்த நபர் மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப் படவுள்ளதாகவும் மன்னார் பொலிஸ் நிலையத்தின் போதைப் பொருள் தடுப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர். (இ-5-281)

## தனியார் பேருந்து-ஆட்டோ மோதி விபத்துக்குள்ளானது



படங்கள்: கு.கஜரூபன்



யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதி ஊடாக கொக்குவில் நோக்கி சென்று கொண்டிருந்த பாடசாலை சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்து ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து கொக்குவில் பூநாறி மடம் பகுதியில் தரித்து நின்ற ஆட்டோவை மோதித் தள்ளியது. நேற்று பிற்பகல் இடம்பெற்ற இந்த விபத்தில் பேருந்து மற்றும் ஆட்டோ பலத்த சேதத்திற்கு உள்ளாகின.

இதில் எவருக்கும் உயிர்ச்சேதம் ஏற்படவில்லை. மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாண பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7-9)

## பசுபிக் கட்டளைப் பீட உயரதிகாரியின் இலங்கைக்கான விஜயம் எதற்காக?

### அமெரிக்கா விளக்கம்

அமெரிக்கக் கடற்படையின் பசுபிக் கட்டளைப் பீடத்தின் கொள்கை மற்றும் மூலோபாயத் திட்டமிடல் பணிப்பாளர், மேஜர் ஜெனரல் ஸ்டீவன் ஆர் ருடர், இலங்கைக்கு மூன்று நாட்கள் பயணம் மேற்கொண்டமை தொடர்பான தகவல்களை அமெரிக்கா வெளியிட்டுள்ளது.இவர் கடந்த 11ஆம் திகதி இலங்கைக்கான பயணத்தை ஆரம்பித்து, 13ஆம் திகதி அதனை நிறைவு செய்திருந்தார்.

பசுபிக் கட்டளைத் தலைமையகத்தில் இருந்து மூத்த அதிகாரி ஒருவர் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டமை இதுவே முதல் முறையாகும். அண்மையில், ஏழாவது கப்பற்படையணியின் யுஎஸ்எஸ் புளூ ரிட்ஜ் போர்க் கப்பல் இலங்கைக்கு மேற்கொண்ட பயணத்தின் தொடர்ச்சியாக இந்தப் பயணம் இடம்பெற்றுள்ளது.

இலங்கை வந்திருந்த, மேஜர் ஜெனரல் ஸ்டீவன் ஆர் ருடர், இலங்கையின் கூட்டுப்படைகளின் தளபதி. முப்படைகளின் தளபதிகளைச் சந்தித்திருந்தார்.

உலகில் பரபரப்பான. கொள்கலன் துறைமுகங்களில் 14 ஆவது இடத்தில் உள்ள கொழும்புத் துறைமுகத்துக்கு வரும் கப்பல்களின் பாதைகளுக்குப் பாதுகாப்பு அளிக்கும் இலங்கை கடற்படையின் மேற்குப் பிராந்தியத் தலைமையகத்துக்கும் அவர் சென்றிருந்தார்.

கடற்பாதுகாப்பு. மனிதாபிமான உதவிகள். அனர்த்த மீட்பு. ஐ.நா அமைதி காப்பு நடவடிக்கைகள் போன்ற முக்கியமான விடயங்களில். எதிர்கால ஒத்துழைப்புக்கான பரப்பை அடையாளம் காண்பதற்காகவே. மேஜர் ஜெனரல் ஸ்டீவன் ஆர் ருடர். இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார்.

இந்தியப் பெருங்கடலில் இலங்கையின் மூலோபாய அமைவிடத்தைப் பொறுத்த வரையில், கடற்பாதுகாப்பு, இயற்கை அனர்த்தங்களை எதிர்கொள்வது, சுதந்திரமான கடற்பயணம் ஆகியவற்றை உறுதிப்படுத்தும் பிராந்திய முயற்சிகளில் முக்கிய பங்காளராக விளங்குகிறது என்று, அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)



## விவசாயக் கல்லூரி பரந்தனில் திறப்பு

வடமாகாணத்தில் விவசாயத்துறையை மேம்படுத்தும் நோக்கில் கிளிநொச்சி பரந்தன் பகுதியில் விவசாயக் கல்லூரி நேற்று முற்பகல் 11 மணியளவில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பரந்தன் பகுதியில் கடந்த 2010ஆம் ஆண்டு முதல் இராணுவத்தினரின் பயன்பாட்டில் இருந்து வந்த விவசாயக்கல்லூரியினை விடுவிக்குமாறு கல்லூரி அதிபர் விடுத்த கோரிக்கையை அடுத்து குறித்த கல்லூரி இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டதையடுத்து அதன் கற்பித்தல் செயற்பாடுகளுக்காக நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

விவசாயத் திணைக்களத்தின் கீழான மேற்படி விவசாயக்கல்லூரியினை விவசாய விரிவாக்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் ஆர்.எஸ்.விஜயசேகர வைபவரீதியாக திறந்து வைத்தார்.

பரந்தன் விவசாயக் கல்லூரியின் அதிபர் ஏ.சகிலாபானு தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிளிநொச்சி பிராந்திய இராணுவக்கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் அமல்கருணா சேகர. விவசாய விரிவாக்கல் மற்றும் ஆராய்ச்சி நிலையப் பணிப்பாளர் கலாநிதி அரசகேசரி, மாகாண விவசாயப்பணிப்பாளர் சிவகுமார் மற்றும் விவசாய விதை உற்பத்தி விதை அத்தாட்சிப் படுத்தல் திணைக்களத்தின் பணிப்பாளர்,உத்தியோகத்தர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.



நேற்று (16-05-2016) முற்பகல் 11 மணிக்கு திறந்து வைக்கப்பட்ட விவசாயக்கல்லூரியில் தற்போது 25 வரையான மாணவர்கள் தமது கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். (இ-5)

## சுவாரெஸ் ஹட்ரிக் கோல்
# பார்சிலோனா சம்பியன்



ஸ்பெயினில் நடைபெற்ற லா லிகா கால்பந்து லீக் தொடரில் பார்சிலோனா அணி சம்பியன் பட்டம் வென்றது.

மாட்ரிட் நகரில் நேற்று முன் தினம் நடைபெற்ற பரபரப்பான லீக் ஆட்டத்தில் கிரனடா அணியுடன் பார்சிலோனா மோதியது.

தலா 37 லீக் ஆட்டங்களில் விளையாடி இருந்த ரியல் மாட்ரிட் அணி 87 புள்ளிகளும் பார்சிலோனா 88 புள்ளிகளும் பெற்றிருந்த நிலையில், இந்த போட்டியில் வென்றால் மட்டுமே சம்பியன் பட்டத்தை வெல்ல முடியும் என்ற நெருக்கடியுடன் பார்சிலோனா களமிறங்கியது.

அந்த அணியின் மும்மூர்த்திகளான மெஸ்ஸி, சுவாரெஸ், நெய்மர் கூட்டணியின் ஒருங்கிணைந்த தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாமல் கிரனடா வீரர்கள் திணறினர்.

லூயிஸ் சுவாரெஸ் 22ஆவது, 28ஆவது மற்றும் 86ஆவது நிமிடத்தில் அபாரமாக கோல் அடித்து ஹட்ரிக் சாதனை நிகழ்த்த, பார்சிலோனா 3-0 என்ற கோல் கணக்கில் வென்று 91 புள்ளிகளுடன் சம்பியன் பட்டத்தை 24வது முறையாக கைப்பற்றி அசத்தியது.

நடப்பு சீசனில் 40 கோல் அடித்துள்ள சுவாரெஸ் தங்கக் காலணி விருதை தட்டிச் சென்றார். மெஸி, நெய்மர், சுவாரெஸ் இணைந்து 90 கோல்கள் அடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ரியல் மாட்ரிட் 90 புள்ளிகளுடன் 2வது இடமும், அத்லெடிகோ மாட்ரிட் அணி 88 புள்ளிகளுடன் 3வது இடமும் பிடித்தன. (க)

## இத்தாலி ஓபன் டென்னிஸ்
# சானியா - ஹிங்கிஸ் ஜோடி சம்பியன்


இத்தாலி சர்வதேச டென்னிஸ் போட்டியின் (ரோம் ஓபன்) மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சானியா மிர்சா - மார்டினா ஹிங்கிஸ் (சுவிஸ்) ஜோடி சம்பியன் பட்டம் வென்றது.

இறுதிப் போட்டியில் ரஷ்யாவின் எலினா வெஸ்னினா - எகடரினா மகரோவா ஜோடியுடன் மோதிய சானியா - ஹிங்கிஸ் ஜோடி 6-1, 6-7 (5-7), 10-3 என்ற செட் கணக்கில் ஒரு மணி 30 நிமிடம் போராடி வென்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இதேவேளை மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியில் சக அமெரிக்க வீராங்கனை மேடிசன் கீஸுடன் மோதிய செரீனா வில்லியம்ஸ் 7-6 (7-5), 6-3 என்ற நேர் செட்களில் வென்று சம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றார். (க)



## புதிய சாதனை படைத்தது
# டி வில்லியர்ஸ் - ஹோலி ஜோடி



ஐ.பி.எல். தொடரில் குஜராத் அணிக்கு எதிரான போட்டியில் டி வில்லியர்ஸ் (129), ஹோலி (109) ஜோடி அதிரடியில் விருந்து படைத்தது.

அதன்படி ஒரு இன்னிங்ஸில் இருவர் சதமடிப்பது இது 2ஆவது முறையாகும். டி வில்லியர்ஸ்-ஹோலி ஜோடி குவித்த 229 ஓட்டங்கள்தான் ரி20 போட்டிகளில் ஒரு ஜோடியால் 2ஆவது விக்கெட்டுக்காக எடுக்கப்பட்ட அதிக பட்ச இணைப்பாட்ட ஓட்டங்களாகும்.

ரி20 போட்டிகளில் இருமுறை 200 ஓட்டங்களுக்கு மேல் குவித்த ஒரே ஜோடி டி வில்லியர்ஸ்- ஹோலி ஜோடிதான் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# ரி20 உலகத் தொடர்களை அதிகரிக்க ஐ.சி.சி திட்டம்

கிரிக்கெட் ரசிகர்களிடையே ரி20 போட்டிகளுக்கு ஆர்வம் அதிகரித்துக்கொண்டே வருவதால் ரி20 உலகத் தொடர்களை அதிகரிப்பது குறித்து ஐ.சி.சி பரிசீலித்து வருகிறது.

ஒரு கிரிக்கெட் வீரரின் உண்மையான திறமையை நிரூபிக்க சிறந்த களமாக விளங்கியது டெஸ்ட் கிரிக்கெட்தான். ஐந்து நாட்கள் நடைபெறும் இந்த போட்டிக்கு சுமார் 10 ஆண்டுகளுக்கு முன் அதிக அளவில் ரசிகர்கள் குவிந்தார்கள். அதன்பின் கொஞ்சம் கொஞ்சமாக கூட்டம் குறையத் தொடங்கியது.

International Cricket Council

அதன்பின் 50 ஓவர்களாக நடத்தப்படும் ஒருநாள் போட்டிக்கு அதிக ஆதரவு இருந்தது. பின்னர் தற்போது ரி20 போட்டிக்குத்தான் அதிக அளவில் ரசிகர்கள் கூடுகிறார்கள்.

எனவே, கூடுதல் ரி20 போட்டிகளை நடத்துவதற்கான இடங்கள் குறித்து போட்டிகளை ஒளிபரப்பும் தொலைக்காட்சி நிறுவனத்துடன் ஐ.சி.சி பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக இங்கிலாந்து பத்திரிகை டெலிகிராப் செய்தி வெளியிட்டுள்ளது.

சமீபத்தில் இந்தியாவில் ரி20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் நடைபெற்றது. இதில் மேற்கிந்தியத் தீவுகள் 2ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்றது. அடுத்த தொடர் 2020ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடக்க இருக்கிறது.

ஐ.சி.சி. 2017ஆம் ஆண்டு சம்பியன்ஸ் டிராபி தொடரையும் 2019ஆம் ஆண்டு 50 ஓவர் உலகக் கிண்ணத்தையும் நடத்த உள்ளது. இந்த இரண்டு பெரிய தொடர்களும் இங்கிலாந்தில் நடைபெற இருக்கிறது.

இங்கிலாந்தில் அடுத்த மாதம் இறுதியில் ஐ.சி.சியின் ஆண்டு பொதுக்கூட்டம் நடைபெற இருக்கிறது. அப்போது இதுகுறித்து விரிவாக விவாதிக்கப்படும் என்று தெரிகிறது.

இந்தியாவில் நடைபெற்ற ரி20 உலகக் கிண்ண தொடர் மிகப் பெரிய அளவில் வரவேற்பு பெற்றதால் இந்த முடிவுக்கு ஐ.சி.சி வந்துள்ளது.

இங்கிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் மோதிய ரி20 உலகக் கிண்ண இறுதிப் போட்டியை ஸ்கை ஸ்போர்ட்ஸ் தொலைக்காட்சியில் 2.45 மில்லியன் ரசிகர்கள் பார்த்துள்ளனர். இதேபோல் இந்தியா - பாகிஸ்தான் போட்டியை 83 மில்லியன் மக்கள் பார்வையிட்டுள்ளனர். (க)

# நாடு முழுவதும்...

வட மத்திய மாகாணம், வடமேல் மாகாணங்களில் உள்ள பல்வேறு பிரதேசங்களில் பொதுவாக 180 மில்லி மீற்றருக்கு மேற்பட்ட மழைவீழ்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் இத் தாழ முக்கம் காரணமாக கடலோரப் பகுதிகளில் காற்றின் வேகம் மணிக்கு 70 தொடக்கம் 80 கிலோமீற்றர் வரை திடீரென அதிகரித்த காரணத்தால் பலபகுதிகளில் மீனவர்களின் படகுகள் பாரியளவில் சேதமடைநதுள்ளன. இன்றைய தினம் மழை வீழ்ச்சி குறைவடைந்து காணப்பட்டா லும் காற்றின் வேகம் சில நாட்களுக்கு தொடரும் என வானிலை அவதானிப்பு நிலையம் அறிவித்துள்ளது.

இந்த சீரற்ற கால நிலை காரணமாக மலையகப் பகுதிகளில் மண்சரிவினாலும் கடும் காற்றின் காரணமாக நாட்டில் உள்ள பல்வேறு பகுதிகளில் பெறுமதிமிக்க பல படகுகள் பாரிய சேதத்துக்கு உள்ளாகியதுடன் வீடுகள் பலசேதமடைந்துள்ளன.

நுவரெலியா, கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களிலுள்ள தோட்டங்களில் ஏற்பட்டுள்ள மண்சரிவு மற்றும் மண்சரிவு எச்சரிக்கை காரணமாக 500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமது வாழ்விடங்களை விட்டு வெளியேறிப் பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் பெற்றுள்ளன.

கடந்த இரு நாட்களாக நிலவும் மழையுடன் கூடிய சீரற்ற கால நிலை காரணமாக பிரதானநீர் அணைகளும், நீர் நிலைகளும் நீர் நிரம்பிப் பாய்வதால் அவைகளின் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன. இதன் காரணமாக சாலைகள் மற்றும் வீதிகளில் வெள்ளநீர் பாய்வதால் சில பகுதிகளில் போக்குவரத்து சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. வீதிகள், வீடுகள் என அனைத்தும் நீரில் மூழ்கியுள்ளதால் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். சில பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்கள் தற்காலிகமாக தங்குவதற்கு கூட இடம் இல்லாது தத்தளிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு நீர் கொழும்பு கடற்பரப்புக்கு மீன் பிடிக்கச் சென்றமீனவர்கள் நால்வர் காணாமல் போயிருந்த நிலையில் அவர்களுள் இருவரைக் காப்பாற்றியுள்ளதாகவும் குறித்த மீனவர்களை தேடும் நடவடிக்கையில் பெல் 212 ரக விமானம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டதாகவும் விமானப் படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேபோன்று நாட்டில் உள்ள அனைத்து பகுதிகளுக்கும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தால் சீரற்ற காலநிலை தொடர்பாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (செ-9)

# பாக் - மே.தீவுகள் தொடர் இலங்கையில்?

மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான தொடர் ஒன்றை இலங்கையில் நடத்துவதற்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ஆலோசித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.



பாகிஸ்தானில் நிலவுகின்ற பாதுகாப்பு குறைபாடுகள் காரணமாக சர்வதேச கிரிக்கெட் அணிகள் அங்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடுவதற்கு அச்சம் தெரிவித்து வருகின்றன. இதனால் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு ஏகப்பட்ட நஷ்டம் ஏற்பட்டு வருகின்றது.

இந்நிலையில் ஐக்கிய அரபு இராச்சியத்தில் பாகிஸ்தான் அணி தொடர்களை நடத்தி வருகிறது. எனினும் அங்கு போட்டிகளை நடத்துவதால் ஈட்டப்படுகின்ற வருமானம் போதாநிலை காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில இலங்கையில் எதிர்வரும ஒக்டோபர் மாதம் அளவில் மேற்கிந்தியத் தீவுகளுடனான கிரிக்கெட் தொடரை நடத்துவது குறித்து ஆராயபபடுவதாக கூறப்படுகிறது. (க)


# காணவில்லை



கள்ளப்பாடு தெற்கு,
முல்லைத்தீவை
வசிப்பிடமாகக் கொண்ட **தங்கராசா செல்வேந்திரன் (ஜீவன்)** ஆகிய நான் அறியத்தருவது, எனது படகில் 27.04.2016 புதன்கிழமையன்று காலை 6.00 மணியளவில் தொழிலுக்காகச் சென்ற **மோகனதாஸ் சஜந்தன் (வயது 24) திருக்கடலூர், திருகோணமலை, உலகநாதன் குமரேஸ் (திவாஸ்) (வயது - 23) கும்புறுபிட்டி திருகோணமலை** என்பவர்கள் பற்றி இதுவரை எந்தத் தொடர்பும் எமக்குக் கிடைக்கவில்லை.



இவர்களின் தகவல் அறிந்தவர்கள் எமக்கு உடன் தொடர்பினை ஏற்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்பு கொள்ள வேண்டிய T.P No :- 0773220027

**தங்கராசா செல்வேந்திரன் (ஜீவன்)**

(C-4626)

# ஈழத்து கலைஞர்கள் இருவருக்கு திருநாள் விருது வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

ஏழு கலை இலக்கியப் பேரவை ஏற்பாட்டில் வருடாந்தம் நடத்தப்படும் கவிப் பேரரசு வைரமுத்துவின் பிறந்த நாள் நிகழ்வின் ஒரு பகுதியாக ஈழத்துக் கவிஞர் இருவருக்கு திருநாள் விருது வழங்கப்படவுள்ளது என்று ஏழு கலை இலக்கியப் பேரவை அறிவித்துள்ளது.


கவிப்பேரரின் பிறந்த நாள் நிகழ்வாக கவிஞர்கள் திருநாளாகக் கொண்டாடப்பட்டு சிறந்த கவிதை நூல்களுக்கு விருதுகள் வழங்கப்படவுள்ளன.

வெற்றி பெறும் இரு கவிஞர்களுக்கும் இந்தியன் ரூபா பணப் பெறுமதியில் 50 ஆயிரம் ரூபா வீதம் ஒரு இலட்சம் ரூபா பணப் பரிசு வழங்கப்படவுள்ளது.

01.01.2015 முதல் 31.12.2015 வரை வெளிவந்த வடக்கு கிழக்கு சார்ந்த நூல்களாகவும் ஒரு படைப்பினது 3 பிரதிகளும் அனுப்புபவர்களின் தபால் முகவரி, மின்னஞ்சல், தொலைபேசி இலக்கம் என்பவற்றை எதிர்வரும் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் சி.நிசாகரன், கைதடி மேற்கு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு ஏற்பாடாளர்கள் குழு அறிவித்துள்ளது. (இ-7)

# வலசைப் பறவைகளின் வருகை வடக்கு மண்ணுக்கு வரப்பிரசாதம்

## சுற்றாடல் அமைச்சர் ஐங்கரநேசன் தெரிவிப்பு





பூமியின் வடக்குப்பகுதியில் பனிபடிய ஆரம்பிக்கும்போது அப்பிரதேசங்களில் வாழுகின்ற பறவைகள் இரைதேடுவதற்காக வெப்பப்பிரதேசங்களை நோக்கி கூட்டம் கூட்டமாகக் குடிபெயர்கின்றன. குளிர் விலகும் போது தங்கள் சொந்த இடங்களுக்கு பாதை தவறாமல் திரும்பிச் செல்கின்றன. வலசை போகும் இந்தப் பறவைகள் வந்து தங்கிச் செல்லும் இடமாக இலங்கையில் வடக்கு மாகாணத்தில் பல இடங்கள் உள்ளன. இது வடக்கு மண்ணுக்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதம் என வடக்கு சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

வடக்கு சுற்றாடல் அமைச்சு வலசைப் பறவைகள் பற்றிய மூன்று நாள் செயலமர்வையும் வெளிக்களப் பயிற்சியையும் உலக வலசைப் பறவைகள் தினத்தையொட்டி யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்திருந்தது.

வடக்கின் ஐந்து மாவட்டங்களில் இருந்தும் 100 மாணவர்கள் பங்கேற்ற இந்தச் செயலமர்வு மற்றும் வெளிக்களப் பயிற்சியின் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்ச்சி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து உரையாற்றும்போதே அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

வடக்கு இயற்கையால் ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு மாகாணம். யாழ்.குடாநாட்டில் காணப்படும் தொண்டைமானாற்றுக் கடல் நீரேரி, உப்பாற்றுக் கடல்நீரேரி, யாழ்ப்பாணக் கடல்நீரேரிகளின் கரைகளில் கண்டல் மரங்கள் செழித்து வளர்கின்றன. இந்தச் சூழல் பறவைகள் இரைதேடவும், தங்கிச்செல்லவும் வாய்ப்பாக இருப்பதால் உள்நாட்டில் இருந்தும் வெளிநாட்டில் இருந்தும் ஏராளமான பறவை இனங்கள் இங்குவந்து சேர்கின்றன.

வடக்கில் பிளமிங்கோ எனப்படும் பூநாரைகளின் வருகை அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது. இதனால் பறவை ஆய்வாளர்களின் கவனமும் சுற்றுலாப் பயணிகளின் கவனமும் வடக்குக்கு வருகின்ற வலசைப்பறவைகள் மீது இப்போது திரும்ப ஆரம்பித்துள்ளது.

வலசைப்பறவைகள் வெறுமனே எமது பொழுதுபோக்குக்காகவும், ஆய்வுக்கான ஒரு துறையாகவும் மட்டும் அல்லாமல் வடக்கு மாகாணத்துக்கான பொருளாதார வருவாயை ஈட்டித்தரும் சூழற் சுற்றுலாவை விருத்தி செய்யவும் உதவும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில் வடக்கு மாகாணசபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, விவசாய அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், யாழ்.பல்கலைக்கழக விலங்கியல்துறைத் தலைவர் இரா.ஞானேஸ்வரன் மற்றும் பிரதிக்கல்விப்பணிப்பாளர் அ.அகிலதாஸ் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (இ-5)

# மழை வெள்ளம் உட்புகுந்ததால் கிளி.இந்து மாணவர்கள் பாதிப்பு





கிளிநொச்சிப் பகுதியில் தொடர்ச்சியாக பெய்துவரும் கனமழை காரணமாக பல்வேறு பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகள் பாதிப்படைந்துள்ளன.

மாணவர்களின் வரவுகள் வெகுவாக குறைந்து காணப்பட்டதுடன் வீதிகள் பலவற்றின் ஊடாக நீர் ஊடறுத்துப் பாய்வதால் மக்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் பலரும் பல துன்பங்களை எதிர்கொண்டுள்ளனர். கிளிநொச்சிப் பகுதியில் தொடர்ச்சியாக கன மழை காரணமாக கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் காரியாலயம் உட்பட அனைத்து வகுப்பறைகளினுள்ளும் இரண்டு அடிக்கு மேலாக நீர் உட்புகுந்துள்ளது. ஆசிரியர்கள், மாணவர்கள் பாடசாலை வளாகத்தினுள் செல்ல முடியாமல் அவதியுற்றனர். பாடசாலைகள் பலவற்றின் நிலைகள் தொடர்பாக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் முருகவேல் சென்று பார்வையிட்டார். (இ-309)

# சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவது குறித்து கலந்துரையாடல்

## ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்றது

(கொழும்பு)

நாட்டில் நிலவுகின்ற சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குதல் மற்றும் அதுபற்றி ஆராய்தல் தொடர்பாக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுடன் விசேட கலந்துரையாடல் ஒன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பணிப்புரைக்கமைய ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.அபேகோன் தலைமையில் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணங்களை வழங்குமாறு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கிய ஜனாதிபதி மக்களுக்கு தேவையான உணவு மற்றும் ஏனைய வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்காக தேவையான நிதியினை ஒதுக்கீடு செய்யுமாறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு ஆலோசனை வழங்கினார்.

அத்துடன் ஏற்படக்கூடிய அனர்த்த நிலைமைகள் பற்றி தொடர்ந்தும் அவதானிப்புடன் இருக்க வேண்டுமென அனர்த்த முகாமைத்துவ அமைச்சர், பாதுகாப்பு செயலாளர் உள்ளிட்ட முப்படை தளபதிகளுக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் ஏற்படக்கூடிய அனர்த்தங்கள் பற்றி பொது மக்களுக்கு அறியத்தருவதற்கும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் முறையான வேலைத்திட்டங்களை துரிதமாக செயற்படுத்துமாறும், முகங்கொடுக்க நேர்கின்ற அசௌகரியங்கள் தொடர்பில் மக்களை அறிவூட்டக்கூடிய வகையில் அதிகாரிகளுக்கு தகவல்களை வழங்கக்கூடிய வசதிகளை ஏற்படுத்துமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார். (இ-5)

# இராசி பலன்

17.05.2016

(வைகாசி 04, செவ்வாய்க்கிழமை)

சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு
ஏகாதசி முன்னிரவு 7.28 மணிவரை
உத்தரம் முற்பகல் 9.37 மணிவரை
சுபநேரம் 10.23-11.53 மணிவரை
இராகுகாலம் 2.53-4.23 மணிவரை
ஏகாதசி விரதம், அமிர்த சித்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | சுக் புத | சூரி | |
| கேது | கிரகநிலை | | |
| | சந்திராஷ்டமம் பூரட்டாதி | | குரு ராகு |
| | சனி செவ் | | சந் |

**மீனம்:** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், பொருளாதார நிலையில் திருப்தி காண்பீர்கள், போசன சுகமுண்டு.

**மேடம்:** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சிகள் கைகூடும், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும்.

**இடபம்:** பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, பிள்ளைகள் வழியில் சுப செலவுககள் ஏற்படலாம், அரசு வழியில் அனுகூலமுண்டு, சிந்தனை மிகுதியான நாள்.

**மிதுனம்:** தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், பண வரவு திருப்திதரும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பொதுக் காரியங்களில் நாட்டம் காட்டுவீர்கள்.

**கும்பம்:** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், மற்றவர்களிடம் பேசும் போது நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது, முயற்சிகளில் தாமதங்கள் ஏற்படலாம்.

**கடகம்:** கனிவாகப்பேசி காரியம் சாதிப்பீர்கள், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பொது நல ஈடுபாட்டில் அக்கறை காட்டுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு.

**மகரம்:** மருத்துவச் செலவுகள் குறைந்து மனநிம்மதியைக் கொடுக்கும், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டி நாள், மாற்றினத்தவர்கள் மூலம் மகிழ்ச்சிக்குரிய தகவல்கள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும் நாள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு.


**தனுசு:** செய்தொழிலை விருத்தி செய்ய அதிக பிரயாசை காட்டுவீர்கள், ஆரோக்கியமான நாள், தூரதேசத்திலிருந்து சுப தகவல்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், கௌரவமான நாள், காரிய அனுகூலமுண்டு.

**துலாம்:** புண்ணிய காரியங்களுக்காக சிறிது செலவு செய்து மகிழ்வீர்கள், ஒருசில வேலைகளுக்காக நீண்டநேரம் காத்திருக்கும் நிலை ஏற்படலாம், சயன சுகக்குறைவான நாள்.

**கன்னி:** கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், குடும்பத்தினருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

# சிறுநீரக மாற்று இயந்திரம் (CRT) யாழ்.வைத்தியசாலைக்கு அன்பளிப்பு



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கு சிங்கர் நிறுவனத்தினால் சிறுநீரக மாற்று இயந்திரம் (Continuous Renal Replacement Therapy Machine) ஒன்று நேற்றையதினம் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. சுமார் 5 மில்லியன் பெறுமதியான இந்த உபகரணக் கையளிப்பு நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் எஸ்.சத்தியமூர்த்தி, வைத்தியர் பேரானந்தராஜா மற்றும் சிங்கர் நிறுவன அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:-கஜரூபன்)

## குடும்பஸ்தர் மீது தாக்குதல் ஏழாவது நபரும் கைது

உடுப்பிட்டி வீரபத்திரர் கோவிலடிப் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவரை தாக்கிய ஏழாவது சந்தேக நபரினை நேற்று முந்தினம் ஞாயிற்றுக் கிழமை (15.05.2016) கைது செய்ததாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு வாரங்களிற்கு முன்னர் அவர் தாக்கப்பட்டமை தொடர்பில் ஆறு பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-60)

## நான்கில் மூன்று படகுகள் மீட்பு

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு மணற்காட்டுப் பகுதியில் கடலில் அடித்துச் செல்லப்பட்ட 4 படகுகளில் மூன்று மீனவர்களினால் மீட்கப்பட்டுள்ளன.

காலையில் கடலிற்குச் சென்ற மீனவர்கள் படகினைக் காணாததையடுத்து பெரும் தேடுதல் மேற்கொண்டதில் நேற்று மூன்று படகுகள் மீட்கப்பட்டுள்ளன.(இ-5-60)

# வடமராட்சிப் பகுதியில் கடற்றொழிலாளர்கள் கடுமையாகப் பாதிப்பு

## 6 படகுகளை காணவில்லை, 3 படகுகள், 104 வலைகள் சேதம்

(கரணவாய்)

**சீரற்ற காலநிலை காரணமாக வடமராட்சி கிழக்குப் பகுதியில் 6 படகுகள், இரண்டு வலைகள் காணாமற் போயுள்ளதுடன் 3 படகுகள், 104 வலைகள் சேதமடைந்துள்ளதாக மருதங்கேணி பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

நேற்று முந்தினம் ஞாயிற்றுக் கிழமை ஏற்பட்ட காலநிலை மாற்றம் காரணமாக கடும் மழையும் காற்றும் வீசி வருகின்றது. இதனால் கடற்றொழிலாளர்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

மணற்காட்டுப் பகுதியில் இராசதுரை எட்வின் ஜெயசீலன் என்பவரது படகு வலையுடன் காணாமற் போயுள்ளது. மேலும் நாகர் கோயில் கிழக்குப்பகுதியில் ஒரு வலை காண்ணாமற் போயுள்ளது.

நாகர்கோயில் மேற்கில் ஐந்து படகுகள் காணாமற் போயுள்ளதுடன் இரண்டு படகுகள் சேதமடைந்துள்ளன. அத்துடன் 3 வலைகளும் சேதமடைந்துள்ளன.

நாகர்கோவில் தெற்கில் ஒரு படகும் ஒரு வலையும் சேதமடைந்துள்ளது. வத்தராயன் பகுதியில் 100 வலைகள் சேதமடைந்துள்ளதாக கிராம அலுவலரினால் பிரதேச செயலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-60)

# மழைநீர் சேகரிப்புத்திட்டம்

(யாழ்ப்பாணம்)

ஆசிய பசுபிக் பிராந்தியத்திற்கான அனர்த்த முகாமைத்துவக் கூட்டமைப்பினால் (APAD) ஊர்காவற்றுறைப் பகுதியில் மழைநீர் சேகரிப்புதிட்டங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் தீவகப் பகுதிகளின் நீர்ப் பற்றாக்குறையை நிவ



ர்த்தி செய்யும் முகமாக ஆசிய பசுபிக் பிராந்தியத்திற்கான அனர்த்தமுகா மைத்துவக் கூட்டமைப்பு தனியார் துறையினருடன் இணைந்து மேற்கொண்டுவரும் மழைநீர் சேகரிப்புத் திட்டத்தினூடாக 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமளவில் ஊர்காவற்றுறையின் தம்பாட்டி பிரதேசத்தில் முன்னோடிதிட்டம் ஒன்று நிறுவப்பட்டது.

அதன் தொடர்ச்சியான அவதானிப்புக்களின் அடிப்படையில் கடந்த பெப்ரவரி மாதம் அதே பிரதேச செயலர் பிரிவில் தம்பாட்டி, மெலிஞ்சி முனை, கரம்பன், புளியங்கூடல் கிராம சேவகர் பிரிவுகளில் 15 மழைநீர் சேகரிப்பு திட்டங்களும் (நீர்த்தாங்கிகள்) இம்மாதம் 12.13 ஆம் திகதிகளில் மெலிஞ்சி முனை, அனலைதீவு பிரதேசங்களில் 30 மழைநீர் சேகரிப் புத்திட்டங்களும் (நீர்த்தாங்கிகள்) பயனாளிகளுக்கு கையளிக்கப்பட்டன.

இம் மழைநீர் சேகரிப்புத் திட்டமானது மழை நீரற்ற காலங்களில் பவுசர்கள் மூலம் நீரை மீள்நிரப்பி பாவனைக் குட்படுத்த ஏதுவாகவும் காணப்படுகிறது. அத்துடன் இத் தாங்கிகளின் பயனாக மக்கள் நாளாந்தம் குடிநீர் சேகரிப்பிற்காக எதிர் கொள்ளும் சவால்கள் குறைக்கப்பட்டுள்ளதுடன் நாளாந்த வேலைகளும் சுலபமாக்கப்பட்டுள்ளதாக பயனாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலதிகமாக இம் மழைநீர் சேகரிப்புதிட்டங்களில் சிலவற்றை கடந்த மார்ச் மாதம் மூன்றாம் திகதி இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் கெனிசிசுகனுமடுகுடா நாட்டு விஜயத்தின் போது நேரில் சென்றுபார்வையிட்டதுடன் நீர் தொடர்பாக அப் பிரதேச மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் அப்பிரதேசத்திற்கான நீர் வழங்கல் முறைகளையும் கேட்டறிந்தது குறிப்பிடத்தக்கது. (இ-9-7)




# வலிகளால்தான் தமிழினம் தலைநிமிர்ந்து நிற்கின்றது

## வடமாகாணசபை உறுப்பினர் சுகிர்தன் சுட்டிக்காட்டு

தமிழினம் இன்று ஓரளவு தலைநிமிர்ந்து நிற்கின்ற நிலை ஏற்பட்டுள்ளதென்றால் அது நிச்சயமாக எமது உறவுகளின் இரத்தத்தாலும் உறவுகளின் கதைகளினால் ஏற்பட்ட வலிகளால்தான் தலைநிமிர்ந்து நிற்கக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது என்று வடமாகாண சபை உறுப்பினர் எஸ்.சுகிர்தன் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலை செய்யப்பட்ட மக்களின் நினைவுவாரத்தின்நான்காம்நாளான நேற்று முந்தினம் ஞாயிற்றுக் கிழமை பருத்தித்துறை முனைக் கடற்கரையில் இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இதனைக் கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இனப்படுகொலை வாரத்தின் நான்காம் நாள் பருத்தித்துறை முனைப்பகுதியில் ஒவ்வொரு வருடமும் தொடர்ச்சியாகச் செய்ய வேண்டும். இது எமக்குரிய கடமையாகும்.

இவ் உறவுகள் எமக்காக இறந்தார்கள். எம்மில் கொண்ட பற்றின் காரணமாக இனப்படுகொலை செய்யப்பட்டார்கள். இதனால் இலங்கையின் தலையாய இடம் என்பதால் இங்கே அவ் அஞ்சலி நிகழ்வினை நடத்தத் தீர்மானித்ததாகத் தெரிவித்த அவர், இவ் இனப்படுகொலைக்கு இலங்கை அரசே காரணமாகும். இவ்விடயம் சர்வதேசம் வரையில் சென்றுள்ளது. இதற்கு நிச்சயம் இலங்கை அரசு பதில் கூற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# முன்பள்ளி மழலைகளின் கண்காட்சி நிகழ்வு இன்று

ஆவரங்கால் மேற்கு மத்திய முன்பள்ளி மழலைகளின் கண்காட்சி நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு மத்திய முன்பள்ளி மண்டபத்தில் முன்பள்ளிதலைவர் கா.சிவசோதி தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.வலயக்கல்வி அலுவலக முன்பள்ளி பணிப்பாளர் க.விமலநாதன் கலந்து கொள்ளவுள்ளதுடன் சிறப்பு விருந்தினராக ஓய்வுபெற்ற பிரதிக்கல்விப் பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியம், ஜே/277 கிராம உத்தியோகத்தர் த.குலலோஜினி ஆகியோரும் கௌரவ விருந்தினராக புத்தூர் வடக்கு மத்திய முன்பள்ளி அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சு.சுபாகினி கலந்து சிறப்பிக்கவுள்ளார். (இ-5-7)

# மகிந்தவுக்கு வெளிவிவகார அமைச்சு செய்த செலவு பற்றிக்கூற முடியாது

## பிரதியமைச்சர் மறுப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உகண்டா பயணத்திற்கு வெளிவிவகார அமைச்சின் ஊடாக பணம் வழங்கப்பட்டமை குறித்து தன்னால் எதனையும் கூற முடியாது என பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பேச்சாளரிடம் கேட்டறிந்து கொள்ளுமாறும் அவர் கூறியுள்ளார். எவ்வாறாயினும் இந்த விடயம் குறித்து பதிலளிக்க தன்னிடம் விபரங்கள் இல்லை என வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மஹேஷி கொலன்ன தெரிவித்தார்.

அத்துடன் வெளிவிவகார அமைச்சின் வெளிநாட்டு தூதரகப் பிரிவும் மகிந்தவின் பயணம் தொடர்பிலான தகவல்கள் இதுவரை தமக்கு கிடைக்கவில்லை எனக் கூறியுள்ளது.

எது எப்படி இருந்த போதிலும் முன்னாள் ஜனாதிபதியின் உகண்டா பயணத்திற்கான செலவுகளை இலங்கை வெளிவிவகார அமைச்சே செய்துள்ளதாக ஏற்கனவே உறுதியான தகவல்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# ஆர்மி சம்பத் ரி.ஐ.டியிடம்

கொழும்பு வடக்கை அச்சுறுத்தி வந்த பிரபல பாதாள உலகக் குழுவின் தலைவனான ஆமி சம்பத் பொலிஸ் விசேட அதிர டிப்படையினரால் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளார். பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவின் உத்தரவுக்கு அமைய மேலதிக விசாரணைகளை முன் னெடுக்கும் முகமாக ஆமி சம்பத் இவ்வாறு விசேட அதிரடிப்படையின் கட்டளைத் தளபதி பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜே.கே.ஆர். ஏ.பெரேரேவின் ஆலோசனைக்கு அமைய பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

ஆமிசம்பத் எனப்படும் சாமர பொன்சேகா (வயது-35), அவருடன் கைது செய்யபபட்ட அவரது மனைவி சஞ்ஜீ வனீ ஜீவந்தி, ஆமி சம்பத் தின் உதவியாளரான 29 வயதுடைய பிரதீப் குமார சுதர்ஷன ஆகியோரே இவ்வாறு விசேட அதிரடிப்படையினரால் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டவர்களாவர்.

கடந்த சனிக்கிழமை மாலை கொம்பனி வீதியில் உள்ள பிரபல தனியார் வைத்தியசாலைக்கு தனது மனைவி, உதவியாளர் சகிதம் ஆமி சம்பத் வருகை தந்ததையடுத்து விசேட அதிரடிப்படையின் உளவுப் பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலின் படி ஆமி சம்பத் கைது செய்யப்பட்டிருந்தார்.

கடந்த 2015 பொதுத் தேர் தலின் போது கொட்டாஞ் சேனை பொலிஸ் பிரிவின் புளூமெண்டல் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் பெண் ஒருவர் கொல் லப்பட்ட விவகாரத்துடன் தொடர்பு உள்ளதாக ஆமி சம்பத் தொடர்பில் குற்றச்சாட்டு உள்ளது. அத்துடன் அவரது எதிரி பாதாள உலகக் குழுவான தெமட்டகொட சமிந்தவை மாளிகாவத்தை முஸ் லிம் மையவாடி பகுதியில் வைத்து சிறைச்சாலை பேருந்து மீது தாக்குதல் நடத்திக் கொல்ல முற்பட்டமை தொடர்பிலும் ஆமி சம்பத்தை பொலிஸார் தேடி வந்தனர்.

இதனைவிட பல்வேறு கொள்ளை, கடத்தல், கொலை, கப்பம் கோரல்களுடன் ஆமி சம்பத்துக்கு தொடர்பிருப்ப தாகவும் போதைப் பொருள் வர்த்தகத்திலும் பங்கிருப் பதாகவும் கூறப்படும் நிலை யிலேயே அவை தொடர்பில் பூரணமாக விசாரணை செய்யும் பொறுப்பு பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத புலனாய்வுப் பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்ன, அதன்பணிப்பாளர் நாலக டி சில்வா ஆகியோரின் மேற்பார்வையில் சிறப்பு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதனிடையே கைதான ஆமி சம்பத், அவரது மனைவி மற்றும் உதவியாளரிடம் தொடர்ச்சியான விசாரணைகள் இடம் பெறுகின்றன. நேறறு முன் தினம் வரை முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் ஆமி சம்பத்தின் கொட்டு கொட, ரஜவத்த பகுதியில் உள்ள வீட்டில் இருந்து 9 மல்லி மீற்றர் கைத் துப்பாக்கியொன்றும் 14 தோட்டாக்களும் 9 கையடக்கத் தொலைபேசிகளும் கைப்பற்றப் பட்டுள்ளன.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் ஆமி சம்பத்திடம் தொடர் விசாரணைகள் இடம பெறும் நிலையில், அவனது தொலை பேசி, வங்கிக் கணக்கு தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-5)

# பேருந்து அனுமதிப்பத்திரம் வழங்குவதில் பணமோசடி!

பேருந்துகளுக்கான மாதாந்த அனுமதிப்பத்திரம் வழங்கும் பொருட்டு மேல்மாகாண வீதி போக்குவரத்து ஆணையக அதிகாரிகள் பணம் பெற்று அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டினை மேல்மாகாண பேருந்து உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். இதன்காரணமாக 250 ரூபாய் மேலதிகமாக செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக பேருந்து உரிமையாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஆனால் இவ்வாறானதொரு எந்த செயற்பாடுகளும் இதுவரை இடம்பெறவில்லை என தேசிய போக்குவரத்து ஆணையகத்தின் தலைவர் எம்.ஏ.பீ.பிரேமசந்திர தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்த விடயம் தொடர்பாக வீதி பரிசோதகர்களை பணியில் அதிகமாக இணைத்துக் கொள்வதற்கு நடடிவக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)


**ஏல விற்பனை**

யாழ்.சென்ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தல் பாவித்த உபகரணங்கள் 2016.05.27 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் ஏல விற்பனைக்கு விடப்படவுள்ளது.

(4424) அதிபர்

**வீட்டுப் பணிப்பெண் தேவை**

தங்கி நின்று வேலை செய்பவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

(4574)

தொடர்பு:- 077 956 8272

**கல்யாண மாலை**

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா:40 செவ் 12 இல்
உயரம்: 165cm
தகைமை/தொழில்:BA/சொந்த தொழில்
தொ.இ: B/5820

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 15
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:Eng/சொந்த தொழில்
தொ.இ: B/5821

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 14
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:O/Lகனடா PR
தொ.இ: B/5822

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 32
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: B/5823

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 60
உயரம்: 5'
தகைமை/தொழில்:HNDA, M.COM/அரசதொழில்
தொ.இ: G/5843

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 11
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:BA/ஆசிரியர்
தொ.இ: G/5844

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 40செவ் 1 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:NHDA/அரசதொழில்
தொ.இ: G/5847

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 38சூரிசெவ் 3 இல்
உயரம்: 5'3 "
தகைமை/தொழில்:BA/அரசதொழில்
தொ.இ: G/5850

**கல்யாண மாலை**

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு: 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.



**வன்னிவிளாங்குளம் ஸ்ரீமுத்துமாரி அம்மன்**
**ஆலய வருடாந்த பொங்கல் விழா**
**20.05.2016 வெள்ளிக்கிழமை**

அம்பிகை அடியார்களே!

வன்னிவிளாங்குளம் பதியில் பன்நெடுங்காலமாக கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீமுத்துமாரி அம்பாளின் வருடாந்த பொங்கல் விழா நிகழும் துர்முகி வருஷம் வைகாசித்திங்கள் 7ஆம் நாள் 20.05.2016-ம் திகதி வெள்ளிக்கிழமை வழமைபோல் நடைபெற திருவருள் கைகூடியுள்ளது.

அன்று நண்பகல் அம்பாளுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் விசேட அபிஷேகமும் அலங்கார பூசைகளும் நடைபெறும். இரவு 9.00 மணியளவில் மடைப்பண்டம் எடுக்கும் நிகழ்வும் தொடர்ந்து பொங்கல் விழா நிகழ்வுகளும் நடைபெறும்.

குறிப்பு:-
1.பொங்கல் தினத்தன்று விசேட போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன.
2.பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.
3.பொங்கல் தினத்தன்று வியாபார நிலையங்கள் அமைக்க விரும்புவோர் 18.05.2016 நண்பகல் 12.00 மணி தொடக்கம் தங்கள் பெயர்களை பதிவு செய்து உரிய பணத்தினை செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொண்டால் மட்டுமே வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படுவீர்கள் என்பதை அறியத்தருகின்றோம்.

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

077 5956 909
077 6126 744

சுபம்

ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய
திருப்பணிச்சபை
வன்னிவிளாங்குளம், மாங்குளம்.

(C-4620)

# கடற்படையினரின் தளத்தை தாக்கிய கனமழை


(முல்லைத்தீவு)

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக நாடு முழுவதிலும் கனமழை பெய்து வருகிறது.

இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு தொடக்கம் நேற்றுக் காலை 8 மணிவரை கனமழை பெய்தது.

கனமழையின் தீவிரத்தால் போக்குவரத்து தடைப்பட்டுள்ளதால் மக்கள் சிரமங்களை எதிர்நோக்கினர்.

இந்நிலையில் இலங்கை கடற்படையினர் முள்ளிவாய்க்கால் நோக்கி நகர்த்திய நிரந்தர வேலி அமைப்பு நடவடிக்கை தடைப்பட்டுள்ளது.



நள்ளிரவு பெய்த கனமழை வெள்ளம் கடற்படையினரின் 100 மீற்றர் நீளமான நிரந்தர வேலியை வீழ்த்திச் சென்றுள்ளது.

எனினும் கடற்படையினர் மீண்டும் தமது வேலி அமைப்பு நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர். (இ-5)

# ஆக்கிரமித்துள்ள குளப்பகுதிகளை மீண்டும் ஒப்படைக்க மக்கள் முடிவு

(குருமன்காடு)

வவுனியா, தாண்டிக்குளம் குளத்தில் ஆக்கிரமித்துள்ள பகுதிகளை கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் பரிந்துரைக்கமைய மீள ஒப்படைக்கவுள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

யுத்த காலத்தில் இடப்பெயர்வுகளை சந்தித்த சிலர் வவுனியா தாண்டிக்குளத்தின் நீரேந்து பிரதேசங்கள் சிலவற்றை ஆக்கிரமித்து கட்டடங்களை அமைத்திருந்தனர்.

இந் நிலையில் வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் குளங்களை அடையாளப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் தாண்டிக்குளத்தில் வசிக்கும் மக்கள் கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரை நேரடியாக சந்தித்து தாண்டிக்குளத்தில் தாம் ஆக்கிரமித்துள்ள பகுதிகளை அடையாளப்படுத்தி தருமாறும் அதனை தாம் மீள குளத்தின் தேவைக்காக ஒப்படைப்பதாகவும் தெரிவித்திருந்தனர்.

இதன் நிமிர்த்தம் குளப்பகுதியை பார்வையிட்ட வவுனியா கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் பி.விஜயகுமார் மக்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பகுதிகளை அடையாளப்படுத்தியதுடன் அதனுள் உள்ளடங்கிய கட்டடங்கள்,மரங்கள் என்பவற்றை அகற்றவும் உத்தரவிட்டிருந்தார்.

இதனையடுத்து அப்பகுதி மக்கள் தாம் ஒத்துழைப்பு வழங்குவதாக தெரிவித்ததுடன் குளப் பகுதிக்குள் உள்ள கட்டடங்கள் மற்றும் கிணறுகள், மலசலகூடங்கள், மரங்களை ஒரு வாரத்தில் அப்புறப்படுத்தி தருவதாகவும் உறுதி மொழியளித்துள்ளனர். (இ-250)




# மதவாச்சியில் வாகன விபத்து; கைதிகள் மூன்றுபேர் படுகாயம்

மன்னார் - மதவாச்சி பிரதான வீதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் 3 சிறைக் கைதிகள் காயமடைந்துள்ளனர்.

மன்னாரில் இருந்து 8 சிறைக் கைதிகளை ஏற்றிக்கொண்டு வவுனியா சிறைச்சாலைக்கு சென்ற சிறைச்சாலைக்கு சொந்தமான பேருந்தே விபத்திற்குள்ளாகியுள்ளது.

இதில் 3 சந்தேக நபர்கள் படுகாயமடைந்த நிலையில் மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மன்னாரில் இருந்து கைதிகளை ஏற்றிக்கொண்டு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை வவுனியா சிறைச்சாலை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த குறித்த பேருந்து மன்னார்-மதவாச்சி பிரதான வீதி சிறுநாவற்குளம் சந்தியில் கட்டுப்பாட்டை இழந்து விபத்திற்கு உள்ளாகியது.

இதன்போது காயமடைந்த 3 கைதிகள் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதோடு, ஏனைய 5 பேர் வவுனியாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சியாக பெய்து வரும் அடைமழையின் காரணமாக குறித்த விபத்து ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் அப்பகுதியில் கூடி நின்ற மக்களுடன் கலந்துரையாடியதோடு, விபத்து குறித்து உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்றார். (இ-5)

# வீதியை மேவிப் பாய்ந்த வெள்ளம்


முள்ளியவளை நாவற்காடு வீதி


முள்ளியவளை மடைப்பண்ட வீதி


முள்ளியவளை வற்றாப்பளை வீதி

படங்கள்: வற்றாப்பளை செய்தியாளர்

# ஆறாத துயரத்தைத் தந்துள்ள முள்ளிவாய்க்கால் படுகொலை

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி. கவலை

மாறாத வடுவையும், ஆறாத துயரத்தையும் முள்ளிவாய்க்கால் படுகொலை தந்துள்ளது என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவு நாள் தொடர்பில் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் அதில் மேலும் தெரிவித்ததாவது,

கொல்லப்பட்டவர்களுக்கு மரணம் ஒரு முடிவு. ஆனால் உயிருடன் இருக்கும் அவர்களது உறவுகளுக்கு அதுவே துயரத்தின் ஊற்று. கொல்லப்பட்டவர்கள் பற்றிய துன்பச் சுமையையும் அவ்வாறு கொல்லப்பட்டோர்கள் விட்டுச் சென்றுள்ள அவர்களுக்குரிய குடும்பச் சுமையையும் சேர்த்து சுமக்க வேண்டிய நிலையில் அவர்களது உறவினர்களின் இடர்கள் உள்ளன.

ஒரு இலட்சத்துக்கும் மேல் பெரும் தொகையில் தமிழ் மக்கள் கொல்லப்பட்டுள்ள நிலையில் அது சமூக கட்டமைப்பில் பாரிய குலைவை யும் பெரும் இடைவெளியையும் ஏற்படுத்தியுள்ளது.

முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட இப்பெருந்தொகையான மக்களின் பெரும்பாலானோர் சிறுவர்களும், குழந்தைகளும், பெண்களுமாவர். பெண்களின் கையிலேயே பிள்ளைகளின் பாதுகாப்பு இருப்பது இயல்பு.

ஆனால் பிள்ளைகள் பதுங்கு குழிகளுள் ஆகக்கூடியது 20 நிமிடத்திற்கு மேல் இருக்கமாட்டார்கள்.

அதுவும் சிறிய பதுங்கு குழிகளுள் அதன் கொள்ளளவைவிடவும் அதிகமானோர் பதுங்குவதால் கரியமில வாயு வேகமாக அப்பதுங்கு குழிகளை நிரப்ப சிறுவர்கள் அதனால் இலகுவில் பாதிப்புற்று தலைவலிக்கு உள்ளாகி பதுங்கு குழிகளை விட்டு சிறிது நேரத்திலேயே வெளியேறுவர்.

அப்போது பிள்ளைகளின் பாதுகாப்பிற்காக பெண்கள் கூடவே வெளியேறிவிடுவர்.

வெளியேறிய பிள்ளைகள் அங்கிங்காய் ஓடும் போது அவர்கள் எறிகணை தாக்குதலுக்கு இலக்காகுவர்.

அப்போது குறிப்பாக பெண்கள் பிள்ளைகளை நோக்கி ஓடும் போது பிள்ளைகளும் பெண்களும் எறிகணை வீச்சிற்கு சிக்குண்டு மாழ்வது இயல்பாகவே நிகழ்ந்தது.



இதனால் பெண்களும், சிறுவர்களுமே அதிகம் மாண்டனர் என்பது உண்மை.


ஆசியாவிலேயே கருவில் இருந்து கல்லறைவரை ஒருவரின் விபரக் கோவையை பேரிதும் பதிவுசெய்து வைத்திருக்கும் நாடு இலங்கை என்ற பெருமை பேசப்படுவதுண்டு. அப்படியென்றால் அப்பதிவேடுகளின் துணைகொண்டு மேற்படி கொல்லப்பட்ட அனைவரின் விபரங்களை அரசினால் இலகுவில் திரட்டி வெளியிட முடியும். ஆனால் அதற்கு இந்த அரசு தயாரில்லை என்பது வேதனைக்குரியது.

நல்லாட்சி அரசாங்கம் பதவிக்கு வந்ததும் முள்ளிவாய்க்கால் பற்றிய அனைத்து அநீதிகளும் களையப்படும் என்றும் அவ்வாறு மக்களைக் கொன்றவர்கள் மீது விசாரணை நடத்தி கண்டிக்கப்படுவார்கள் என்றும் பல வாக்குறுதிகள் அளிக்கப்பட்டு அதன் அடிப்படையில் தமிழ் மக்களின் வாக்குகளால் பதவிக்கு வந்தது இந்த அரசாங்கம்.

ஆனால் அவ்வாறு பதவிக்கு வந்தும் அதனால் நன்மை அடைந்தது தமிழ் மக்களை பாதித்த தரப்பினரே தவிர தமிழ் மக்கள் அல்ல என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-250)

# கனமழை வெள்ளத்தால் மக்கள் அவதி









கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் முதல் பெய்து வரும் கனமழை காரணமாக மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது. தொடர் மழை காரணமாக மாவட்டத்தின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. முறிகண்டி ஊடாக அக்கராயன் செல்லும் வீதி ஊடான போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. முறிகண்டி பிள்ளையார் ஆலயத்திற்குள் இரவு வெள்ள நீர் உட்புகுந்ததாக தெரிவிக்கப்படும் அதேவேளை, கோவிலை அண்மித்த முறிகண்டி, செல்வபுரம் கிராமங்களை சேர்ந்த மக்களின் குடியிருப்புக்கள் சிலவற்றினுள் வெள்ள நீர் உட் சென்றுள்ளது. இதேவேளை கிளிநொச்சி பொன்னகர், ஆனந்தபுரம் உள்ளிட்ட பல கிராமங்களை சேர்ந்த மக்களின் குடியிருப்புகளுக்குள்ளும் வெள்ளம் புகுந்துள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். தொடர் மழை காரணமாக பாடசாலைக்கு மாணவர்களின் வருகை குறைவடைந்துள்ள அதேவேளை, கிளி.சிவபாத கலையகம் பாடசாலையில் வெள்ளம் தேங்கிக் காணப்பட்டது. கடும் மழை காரணமாக மக்களின் போக்குவரத்துகள் பாதிக்கப்பட்டுள்ளது.டன், இதுவரை நலன்புரி நிலையங்கள் எதுவும் உருவாகவில்லை என மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவிக்கின்றது. இருப்பினும் தொடர்ந்தும் அவதானத்துடன் செயற்பட்டு வருவதாக மாவட்ட இடர் முகாமைத்துவ நிலைய அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (இ-15-312)

## கடும் காற்றுடன் கூடிய மழையால் பல வீடுகள் சேதமடைந்துள்ளன

(முள்ளியவளை)

நீண்ட காலத்திற்குப் பின்னர் முள்ளியவளைப் பகுதியில் பெய்த காற்றுடன் கூடிய பெரும் மழையினால் மக்கள் பெரும் இன்னல்களை எதிர்நோக்கியுள்ளனர்.

நேற்று முன்தினம் 15 ஆம் திகதி காலை ஆரம்பித்த மழை இரவு உக்கிரம் கொண்டு பெரும் காற்றுடன் பெய்தது. இதனால் வீடுகள் பல சேதமானதோடு அவர்களின் உடமைகளும் சேதமாக்கப்பட்டுள்ளன.

இதில் முள்ளியவளை 3ம் வட்டாரத்திலுள்ள முள்ளியவளை தெற்கு கிராம சேவகர் பிரிவில் பல வீடுகள் காற்றினால் அள்ளிச் சென்றுள்ளதோடு நள்ளிரவு 1.30 மணிக்குப் பின்னர் இது நிகழ்ந்தது என மக்களால் கூறப்படுகின்றது. தங்களால் மற்றவர்களிற்கு தொலைபேசி ஊடாகக் கூட அறிவிக்கப் பயந்ததாகவும் ஏனெனில் இடி மின்னல் தொடர்ந்து இருந்தது எனவும் தெரிவித்தனர். (இ-433)

## தொடர் சங்கிலி அறுப்பில் ஈடுபட்ட இருவர் கைதாகி விளக்கமறியலில்

வவுனியாவில் கடந்த சில மாதங்களாக இடம்பெற்று வந்த சங்கிலி அறுப்புச் சம்பவங்களுடன் தொடர்புடைய இருவர் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியாவில் கடந்த சில மாதங்களாக தனிமையில் செல்லும் பெண்களை இடைமறித்து வீட்டு முகவரி கேட்பது போல் பாசாங்கு செய்துவிட்டு அவர்கள் அணிந்திருந்த சங்கிலியை அறுத்துச் சென்ற சம்பவங்கள் தொடர்பில் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வந்த வவுனியா குற்றத் தடுப்பு பிரிவைச் சேர்ந்த உப பொலிஸ் பரிசோதகர் ரத்நாயக்கா, பொலிஸ் கான்ஸ்டபிள்களான ஜெயப்பிரகாஸ், லவன், சில்வா, ஜெயதிலக, லங்காதிலக ஆகியோர் அடங்கிய குழுவினரே இச் சம்பவங்களுடன் தொடர்புடைய வவுனியா வைரவபுளியங்குளம் மற்றும் வேப்பங்குளம் பகுதியைச்சேர்ந்த இருவரை கைது செய்துள்ளனர்.

இவர்களிடம் இருந்து கடந்த வருடம் செப்டெம்பர் 14 ஆம் திகதி வவுனியா, உக்கிளாங்குளம் பகுதியில் வைத்து வீதியில் சென்ற பெண்ணிடம் அறுக்கப்பட்ட சங்கிலி மற்றும் கடந்த மார்ச் மாதம் 19 ஆம் திகதி வவுனியா, சாந்தசோலை சந்தியில் கர்ப்பிணிப் பெண்ணிடம் இருந்து அறுக்கப்பட்ட சங்கிலி என்பனவும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் வவுனியா நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டு 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர். (இ-250)





# மழை வெள்ளத்தால் மக்கள் பாதிப்பு



யாழ்.குடாநாட்டில் நேற்றைய தினமும் தொடர்ச்சியாகப் பெய்த கடும் மழையால் குருநகர், நாவாந்துறை,கொட்டடி ,காக்கதீவு ,கொக்குவில் ,தாவடி, போன்ற இடங்களில் கடும் வெள்ளம் ஏற்பட்டது.இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டிருந்தது. (படங்கள்-கு.கஜரூபன்)

## 2017 இல் மதுபானசாலைகள் 8 மணித்தியாலங்கள்

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல்நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து மதுபானசாலைகளும் தினந்தோறும் 8 மணித்தியாலங்கள் மாத்திரமே திறக்கப்படும் என்றும் நாட்டில் மேற்கொள்ளப்படும் புகையிலை உற்பத்திக்கு அரசாங்கம் நீர்ப்பாசனம் வழங்காது என்றும் காலி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேசிய போதையொழிப்புத்திட்டம் என்றவொரு கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

புதிதாக திறக்கப்படவுள்ள மதுபானசாலைகளுக்கான அனுமதிப்பத்திரம், புகையிலை உற்பத்தி மற்றும் மதுபான உற்பத்தி போன்றவற்றுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. மேலும் போதைப்பொருள் தொடர்பான குற்றங்களில் ஈடுபடும் அரசாங்க மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களில் பணிபுரியும் அதிகாரிகளுக்கு பதவியுயர்வோ அல்லது வருடாந்த சம்பள உயர்வோ வழங்கப்படமாட்டாது.

2020 ஆம் ஆண்டளவில் நாட்டில் இடம்பெறும் சட்டரீதியற்ற மதுபான உற்பத்திகளை 80 சதவீதமாகக் குறைப்பதே இந்தக் கருத்தரங்கின் நோக்கம் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (இ

## கேகாலையில் பாரிய மண்சரிவு மூவர் காணாமற் போயுள்ளனர்



கேகாலை - தெஹியோவட்ட ஹால்தோட்ட, டெனிஸ் தோட்ட பகுதியில் ஏற்பட்டுள்ள நிலச்சரிவில் சிக்கி மூவர் காணமற போயுள்ளனர்

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் இதனை தெரிவித்துள்ளது.

அத்துடன், காணாமற் போனவரகளை மீட்பதற்கான விசேட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், குறித்த பகுதியில் மண் சரிவு ஏற்பட்டுள்ளதன் காரணமாக போக்குவரத்து தடைப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இதேவேளை, சீரற்ற காலநிலை காரணமாக கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்க வேண்டிய மூன்று விமானங்களை இந் தியாவின் கொச்சின் மற்றும் மத்தள விமான நிலையங் களுக்கு அனுப்பி வைக்க ப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்நிலையில், தற்போது ஏற்பட்டுள்ள கடும் மழையுடனகூடிய காலநிலை தொடரவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இதன் காரணமாக பதுளை, மொனராகலை, கண்டி, இரத்திரபுரி, குருநாகல், நுவரெலியா, கேகாலை மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## விமலசுரேந்திர நீர்த்தேக்கத்தின் அனைத்து வான்கதவுகளும் திறப்பு



தொடரும் கன மழை காரணமாக நோட்டன் பிரிட்ஜ் விமலசுரேந்திர் நீர்த்தேக்கத்தில் நீர் மட்டம் உயர்வடைந்துள்ளமையால் குறித்த நீர்த்தேக்கத்தின் அனைத்து வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளதாக மின்சார சபை அதிகாரிகள் தெரிவித்ததுடன் நீர்த்தேக்க கரையோர பிரதேசத்தில் நடமாடுபவர்கள் அவதானத்துடன் செயற்படுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-5)

# பிரதமருக்கான வாகனக் கொள்வனவு குறித்து நாடாளுமன்றில் விளக்கம் - சாகல ரத்நாயக்க

பிரதமருக்கான வாகனக் கொள்வனவு தொடர்பில், வெளியிடப்பட்டுள்ள எதிர்ப்பு குறித்து நாடாளுமன்றத்தில் கருத்து வெளியிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதமருக்கான வாகனக் கொள்வனவு தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸாநாயக்கவினால் எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனவே குறித்த விடயம் தொடர்பில் ஏற்பட்டுள்ள சர்சைகள் குறித்து மக்களுக்கு உண்மை நிலையை தெளிவுபடுத்த தீர்மானித்துள்ளதாக அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டு பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்ற சந்தர்ப்பத்தில் பிரதமர் அலுவலகத்தால் அவரது பயன்பாட்டிற்காக எந்தவொரு உத்தியோகபூர்வ வாகனமோ பாதுகாப்பு வாகனமோ வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ள அந்த அறிக்கையில், ஜனாதிபதி செயலகத்தால் வழங்கப்பட்ட இரு பாதுகாப்பு வாகனங்கள் மற்றும் ஜீப் வண்டி ஒன்றையுமே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பயன்படுத்தி வந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் பிரதமர் பயன்படுத்தும் வாகனங்கள்



பழுதடைந்து காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள அதே வேளை, அதனை நாளுக்கு நாள் பழுது பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சாகல ரத்நாயக்கவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த வாகனங்களுக்காக 2015 ஆம்ஆண்டு முதல் புனரமைப்பு மற்றும் பராமரிப்புக்காக 9.8 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் பாதுகாப்பு வாகனங்கள் இரண்டைக் கொள்வனவு செய்வதற்கு 128 மில்லியன் செலவாகும் என தெரிவித்த சாகல ரத்நாயக்க, ஏனைய 468 மில்லியன் ரூபா பணம் அரசாங்கத்தின் ஒரு கணக்கில் இருந்து மற்றொரு கணக்குக்கு மாற்றப்படுபவை எனவும். அவை உண்மையாக செலவிடப்படும் பணம் அல்ல எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-5)

# மகிந்தவின் பாதுகாப்பிற்காக காவியுடையை களையத்தயார் புத்த பிக்கு சூளுரை

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக காவி உடையைக் களையவும் தயாராக இருப்பதாக புத்தபிக்கு ஒருவர் சூளுரைத் துள்ளார்.

பௌத்த வரலாற்றில் தேர புத்தாய பிக்கு என்பவர் பௌத்தத்திற்கு பெருந் தொண்டாற்றிய மன்னர் ஒருவரின் பாதுகாப்புக் கடமையை முன்னிட்டு காவி உடையைக் களைந்து மன்னரின் பாதுகாப்பு ஊழியராக சேவையாற்றியுள்ளார்.

இந்நிலையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் நவீன காலத்தில் பௌத்தத்திற்கு பெருந்தொண்டாற்றியிருப்பதாகவும் அவரது பாதுகாப்பிற்காக காவி உடை களைந்து மகிந்தவுக்குத் தொண்டாற்றவும் தான் தயாராக இருப்பதாக பிக்கு ஒருவர் தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை மாவட்ட ஐக்கிய பிக்குமார் சம்மேளனம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போது சூரியவெவ. பெந்திவெவ பிரேமசிறி தேரரே இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தான் மட்டுமன்றி மகிந்தவின் பாதுகாப்புக்காக சுமார் நூறு பிக்குமார்காவிஉடையை களையத் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

# சட்டவிரோதமாக ஆட்களை அனுப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டவர் கைது

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு கடல் வழியாக ஆட்களை அனுப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்ததாகக் கூறப்படும் ஒருவரை ஏறாவூர் நகரில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

48 வயதுடைய இந்தச் சந்தேக நபர் ஏறாவூர் நகரில் நடமாடுவதாகக் கிடைத்த புலனாய்வுத் தகவலைத் தொடர்ந்து இவரைக் கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு, கல்லடி இசை நடனக் கல்லூரி வீதியைச் சேர்ந்த இவர், மீன் வியாபாரி போன்றும் சாரதி போன்றும் தன்னை வெளிப்படுத்தி வந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

2013ஆம் ஆண்டு காலப் பகுதியில் இந்தச் சந்தேக நபர் அவுஸ்திரேலியாவுக்கு ஆட்களை அனுப்பும் நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டு வந்ததாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-5)

# புகையிரத கட்டணங்கள் அதிகரிக்கப்படமாட்டாது

வற் வரி 15 வீதத்தினால் உயர்த்தப்பட்ட போதிலும் புகையிரத கட்டணங்கள் உயர்த்தப்படமாட்டாது என புகையிரத திணைக்கள பொது முகாமையாளர் ஏ.பீ.ஆரியரட்ன தெரிவித்துள்ளார்.

சிங்களப் பத்திரிகையொன்றுக்கு கருத்து வெளியிடுகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

புகையிரதக் கட்டணங்களில் மாற்றமில்லை. ஏதேனும் காரணங்களுக்காக புகையிரத கட்டணங்கள் உயர்த்தப்பட வேண்டுமாயின் அதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். இதுவரையில் அவ்வாறு ஓர் தீர்மானம் எடுக்கப்படவில்லை.

புகையிரத பயணங்களுக்காக செலவிடப்படும் பணத்தில் 50 வீதமான பணம் எரிபொருளுக்காக செலவிடப்படுகின்றது.

எரிபொருள் விலைகள் குறைவடைந்த காரணத்தினால் செலவுகள் குறைவாகவே காணப்படுகின்றன.

புகையிரத திணைக்களம் தற்போது வருடாந்தம் 6000 மில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டி வருவதாக தெரிவித்தார். (இ-5)

# காது வலிக்கு நாம் செய்ய வேண்டியவை, கூடாதவை

காது வலிக்கு நாம் செய்ய வேண்டியவை, கூடாதவை. காதினுள் உள்ள மென்மையான உறுப்புகளில் ஏதேனும் ஒன்று பழுதுபட்டால் கூட நம்மால் ஒலியுணர்வை முழுமையாகப் பெறமுடியாமல் போகிறது. எதிர்பாராத நிலையில் காது பழுதுபடுவதால் செவிடாக நேரிடுகிறது.

உரக்கப்பேசினால் மட்டுமே சிலருக்குக் கேட்கும். குடும்பத்தில் பிறவிச் செவிடர்கள் இருந்தால் இரத்த உறவில் திருமணம் செய்து கொள்வதைத் தவிர்க்க வேண்டும். ஏனெனில் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கும் காது கேளாமலிருக்கவாய்ப்புண்டு.

மூக்கின் பின் பகுதியில் இருந்து காதுக்குச் செல்லும் குழாயில் (யுஷ்டெசியன்) அடைப்பு ஏற்பட்டு நோய்த் தொற்று உண்டாவதே காதுவலிக்குக் காரணம். மேலும்,


❖ தொண்டையில் அழற்சி காரணமாகவும் காதுவலிஏற்படலாம் நோய்க் கிருமிகள் தாக்கத்தின் விளைவாகவும் காது வலி ஏற்படலாம். இதற்காக காது, மூக்கு, தொண்டை மருத்துவ நிபுணரை அணுகி சிகிச்சைப் பெறுவது நல்லது.

❖ சுவாசிப்பதில் தவறான முறையில்மூச்சு வெளியேற்றுவதும் காது வலிக்கு ஒரு காரணமாக இருக்கலாம். மூச்சு உறுப்புகளில் தொற்றுநோய் ஏற்பட்டிருந்தாலும் காதுவலி ஏற்படலாம்.

❖ நீர்நிலைகளில் குதித்துக் குளிப்பதாலும், கடல் நீரில் குளிப்பதாலும் நோய் தொற்று நடுச்செவிக்குழல் மூலம் காதுக்குள் சென்று கடுமையான காது வலியை ஏற்படுத்தக்கூடும்.

❖ சளியும் மூக்கடைப்பும் அதிகமாகும் போதும் காதுவலி வரும். அதிகமாக சிரத்தை எடுத்து மூக்கு சிந்தினாலும் காதில் வலி ஏற்படும்.

❖ பற்சொத்தை, கடைவாய்ப்பல் வெளிவராதிருத்தல், நாக்கு மற்றும் வாய்ப் புண்கள், டொன்சில் சதை வளர்ச்சி , கழுத்தெலும்புத் தேய்வு, புற்றுநோய் போன்ற நலிவுகள் மற்ற உறுப்புக் களைப் பாதிப்பதனால் காதில் வலி ஏற்படக்கூடும்.




### செய்யக் கூடாதவை

காதுக்குள் இயற்கையாகவே வாக்ஸ் என்கிற திரவம் சுரப்பதால் அழுக்குத் தானே வெளியேறிவிடும். அதனால் காதுக்குள் குச்சி, பட்ஸ் விட்டு சுத்தம் செய்யக் கூடாது.

80 முதல் 85 டெசிபல் வரைதான் நம் காது சப்தத்தைத் தாங்கும். அதற்கு மேல்என்றால் சவ்வு கிழிந்து விடும். அதனால் அதிக சப்தத்தைத் தவிர்க்கவும்.

காதில்இயர்போன்வைத்துக் கொண்டு, அதிக சத்தத்தில் வீடியோ கேம்ஸ், படம் பார்ப்பது செல்போன் பேசினால் காது வலிக்கு அதிக காரணமாகும்.

நீண்ட நேரம்செல்போன் பேசினால் காது வலிக்கும். அதனால் காது மாற்றி மாற்றிப் பேசப் பழகிக் கொள்ள வேண்டும்.

சைனஸ்,பொன்கிஸ் தாடை எலும்பில் பிரச்சினை என்றால்காது வலிக்கும். உடனே அது தொடர்பான சிகிச்சை எடுத்துக் கொண்டால் காது வலி நிற்கும்.

### காதில் எண்ணெய் ஊற்றலாமா?

கூடவே கூடாது. அந்த வலி எதனால் வந்தது என்று தெரியாமல் எண்ணெய் ஊற்றுவதால் விபரீதமாகிவிடும். காதுமருத்துவரின் ஆலோசனைக்குப் பின்னரே, எண்ணெய் ஊற்றலாமா? சொட்டு மருந்து இடலாமா? என்பதை முடிவு செய்ய வேண்டும்.

### காதில் பூச்சி நுழைந்து விட்டால்

பூச்சி காதுக்குள் நுழைந்தால், சில சொட்டு சுத்தமான தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணெய் விட்டால் அது பூச்சியைக் கொன்றுவிடும்எண்ணெயை காய்ச்சி ஊற்றக் கூடாது. குச்சி வைத்துக் குடைவது கூடாது.

தலையைச் சாய்த்தால் பூச்சி தானே வந்துவிடும். அப்படியும் வராவிட்டால் மருத்துவர் மூலம் புனல் வைத்து நீக்கிவிடலாம்.

### காது வலிக்கு

விரல்களால் மூக்கைப் பிடித்துக் கொண்டு, வாயை மூடி, வாயில் காற்றை நிரப்புங்கள். கன்னங்கள் உப்பலாகும். அப்போது காற்றை காது வழியாக மெதுவாக வெளியேற்றுங்கள். காது சமநிலைக்கு வந்து காது வலி நின்றுவிடலாம். காது அடைப்பும் சரியாகிவிடும்.

காதுவலிதானே என்று அலட்சியமாக இருந்து விடாதீர்கள். ஏனென்றால் அது காது செவிடாக வழிவகுத்து விடும்.

Health Care
மருத்துவ உலகம்
உங்கள் நலம் உங்கள் கைகளில்

# ஐ.எஸ்.தீவிரவாதிகளின் தாக்குதலில் 25 பேர் பலி!

## பொலிஸ் ஆட்சேர்ப்பு நிலையத்தில் பயங்கரம்



(சனா)

தென் கிழக்கு ஏமனிய துறைமுக நகரான முகல்லாவில் நேற்றுக் காலை தற்கொலைக் குண்டுதாரியொருவர் நடத்திய தாக்குதலில் பொலிஸ் படையணிக்கு புதிதாக ஆட்சேர்க்கப்பட்ட 25 பேர் பலியாகியுள்ளனர்.

இந்தத் தாக்குதலுக்கு ஐ.எஸ். தீவிரவாதிகள் உரிமை கோரியுள்ளனர்.

கடந்த மாதம் மேற்படி நகரை பொலிஸார் மீளக் கைப்பற்றியிருந்த நிலையில் அந்நகரின் புறநகரப் பகுதியிலிருந்த பொலிஸ் ஆட்சேர்ப்பு நிலையத்தில் பெருமளவானோர் புதிதாக பொலிஸ் படையணியில் இணைந்து கொள்ள வரிசையாக காத்திருந்த போது, அவர்கள் மத்தியில் பிரவேசித்த தற்கொலைக் குண்டுதாரி தனது குண்டுகள் பொருத்தப்பட்டிருந்த பட்டியை வெடிக்க வைத்ததாக கூறப்படுகிறது.

புவாஹ் மாவட்டத்தில் இடம்பெற்ற மேற்படி தாக்குதலில் 60 பேருக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

அந்தப் பிராந்தியத்தில் ஐ.எஸ். தீவிரவாதிகள் தாக்குதல் நடத்துவது கடந்த ஒரு வார காலப் பகுதியில் இது இரண்டாவது தடவையாகும்.

தமது தீவிரவாத குழுவைச் சேர்ந்த அபு அல் பரா அல் அன்ஸாரி என்பவரால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக ஐ.எஸ். தீவிரவாதிகள் தெரிவித்துள்ளனர். (இ-5)

## ஈராக்கில் ஐ.எஸ்.தீவிரவாதிகள் நடத்திய வெடிகுண்டுத் தாக்குதலில் 29 பேர் பலி



ஈராக் தலைநகர் பக்தாத் அருகே உள்ள இயற்கை எரிவாயு உலையில் ஐ.எஸ் தீவிரவாதிகள் காரில் வெடிகுண்டுகளை வைத்து தாக்குதல் நடத்தியதில் 14 பேர் உயிரிழந்தனர். இதேபோன்று அந்நகரின் மற்றொரு பகுதியில் தற்கொலைப்படை வெடிகுண்டு தாக்குதல் நடத்தியதில் 15 பேர் பலியானார்கள். கடந்த புதன்கிழமை முதல் இதுவரை ஈராக்கில் ஐ.எஸ். தவிரவாதிகள்நடத்திய பல்வேறு வெடிகுண்டு தாக்குதலகளில் 140 பேர் கொல்லப்பட்டுள்ளனமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## விமானத்தில் குண்டு பற்றி வாக்குவாதம் நோர்வே விமான நிலையத்தில் இலங்கையர் தடுத்து வைப்பு

(ஒஸ்லோ)

ரயன் எயர் விமானத்தில் சந்தேகத்துக்கிடமாக நடந்து கொண்ட இலங்கையர் ஒருவர், நோர்வேயின் மொஸ் விமான நிலையத்தில், நோர்வே பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டார்.

இலங்கையர் ஒருவரும், மற்றொரு வெளிநாட்டவரும் சந்தேகத்துக்கிடமான வகையில் நடந்து கொண்டதையடுத்தே, தடுத்து வைக்கப்பட்டதாக நோர்வே ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

மன்செஸ்டர் நோக்கி நேற்று விமானம் புறப்பட்டுச் சென்று கொண்டிருந்த போது, இவர்கள் வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, இவர்கள் பரிமாறிய வார்த்தைகளில், குண்டு என்ற சொல் பயன்படுத்தப்பட்டதை பயணிகள் சிலர் செவிமடுத்ததாகவும் இதையடுத்து, விமானம் மொஸ் விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டு, குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினர் விமானத்தில் தேடுதல் நடத்தினர். எனினும், குண்டு எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை.

இதையடுத்து. இரண்டு பயணிகளும் விடுவிக்கப்பட்டனர். இதனால் விமானம் ஒரு மணிநேரம் தாமதமாகவே மன்செஸ்டர் நகரைச் சென்றடைந்தது. (இ-5)

# ராணுவம் தொடர்பான பென்டகன் அறிக்கை பரஸ்பர நம்பிக்கையை சேதப்படுத்திவிட்டது

## சீனா கடும் கண்டனம்


சீன இராணுவம் தொடர்பான அமெரிக்காவின் பாதுகாப்பு மையமான பென்டகன் அறிக்கை "பரஸ்பர நம்பிக்கையை சேதப்படுத்தி விட்டது" என்று சீனா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

**அமெரிக்கா எச்சரிக்கை**

அமெரிக்க பாராளுமன்றத்தில் '2016ஆம் ஆண்டுக்கான சீனாவின் இராணுவம், பாதுகாப்பு வளர்ச்சி அறிக்கை' தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதைத் தொடர்ந்து அந்த நாட்டின் இராணுவ தலைமையகம் பென்டகனில், கிழக்கு ஆசிய நாடுகளுக்கான இராணுவ உதவி அமைச்சர் ஆபிரகாம் டென்மார்க் நிருபர்களை சந்தித்தார். அப்போது அவர், "இந்திய எல்லையின் அருகே சீனா படைக் குவிப்பை அதிகரித்து வருகிறது. இது குறித்து எங்கள் கவனத்துக்கு தகவல்கள் வந்துள்ளன. ஆனால இதன் உணமையான நோக்கம் என்ன என்று முடிவுக்கு வந்து கூறு வது கடினமான ஒன்று" என்றார்.

அமெரிக்க இராணுவ அமைச்சர் ஆஷ்டன் கார்ட்டரின் இந்திய பயணம் குறித்து நிருபர்கள் எழுப்பிய கேள்விக்கு அவர், "அது நல்ல பலனை அளித்துள்ளது. இந்தியாவுடன் எங்கள் இருதரப்பு உறவை மேம்படுத்தப் போகிறோம். சீனாவை முன்னிட்டு அல்ல. இந்தியா ஒரு முக்கியமான நாடு என்பதன் அடிப்படையில்தான். இந்தியா மீதான மதிப்பீட்டை புரிந்துகொண்டவர்களாக அந்த நாட்டுடனான உறவுகளை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோம்" என பதில் அளித்தார். உலகின் பல்வேறு பகுதிகளில் உள்ள தனது தளங்களில், அதிலும் குறிப்பாக பாகிஸ்தானில் சீனா படைகளை குவித்துள்ளதாகக் கூறி, அமெரிக்கா எச்சரித்துள்ளது.




**சீனா கண்டனம**

அமெரிக்க பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு உள்ள '2016ஆம் ஆண்டுக்கான சீனாவின் இராணுவம், பாதுகாப்பு வளர்ச்சி அறிக்கை'யில்

சீனா தென்சீன கடலில் உருவாக்கி உள்ள சர்ச்சைக்குரிய செயற்கை தீவில் இவ்வாண்டு கணிசமான இராணுவ உள்கட்டமைப்பு, தக்வல் தொடர்பு மற்றும் கண்காணிப்பு அமைப்புகளை பலப்படுத்த திட்டமிட்டு உள்ளது என்று கூறப்பட்டு உள்ளது. இந்நிலையில் பென்டகனின் அறிக்கைக்கு சீனா தன்னுடைய வலிமையான அதிருப்தியை தெரிவித்து உள்ளது. பென்டகன் அறிக்கைக்கு கடும் எதிர்ப்பையும் தெரிவித்து உள்ளது. பென்டகன் அறிக்கை "பரஸ்பர நம்பிக்கையை சேதப்படுத்திவிட்டது" என்று சீன பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. (இ-5)

# தமிழக சட்டசபைத் தேர்தல் வாக்களிப்பு நேற்று












தமிழகத்தில் சட்ட சபைத் தேர்தல் வாக்களிப்பு நேற்று நடைபெற்றது. காலை 7 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு மாலை 6 மணி வரை நடைபெற்றது. அனைத்து கட்சித்தலைவர்கள், நட்சத்திரங்கள் மக்கள் என அனைவரும் தங்களது வாக்குப் பதிவினை மேற்கொண்டனர். (இ-5)

## முதல் ஆளாக வாக்களித்த சுப்பர் ஸ்டார்



சென்னை ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியில் உள்ள வாக்குச் சாவடியில் நடிகர் சுப்பர் ஸ்டார் ரஜனிகாந்த் வாக்களித்தார்.

நேற்று பரபரப்பாக நடந்த தமிழக சட்டமன்ற தேர்தலில் வாக்குப் பதிவு தொடங்கிய சில நிமிடங்களிலேயே வாக்குச் சாவடிக்குள் நுழைந்து முதல் நட்சத்திரமாக தனது வாக்கை பதிவு செய்து விட்டார் நடிகர் ரஜனிகாந்த். (இ-5)

## சாக்கடைக்குள் விழுந்த எம்.பி. வைத்தியசாலையில் அனுமதி

குஜராத் மாநிலத்தில் சாக்கடைக்குள் விழுந்த பாரதீய ஜனதா பெண் எம்.பி. வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குஜராத் மாநிலம் ஜாம்நகர் சிட்டி தொகுதி எம்.பி.யான பூனம்பென் தன்னுடைய தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் நேற்றுக் காலை குடிசைகளை பார்வையிட் டார்.

அப்பகுதியில் சட்டவிரோதமாக கட்டப்பட்ட கட்டடங்கள் இடிக்கப்பட்டதை தொடர்ந்து, குடிசைவாழ் மக்கள் தங்களுக்கு உதவிசெய்ய வேண்டும் என்று எம்.பியிடம் உதவி கோரியுள்ளனர். கிராமத்தில் உள்ள திறந்த வெளி சாக்கடையில் உள்ள சிமெண்ட்



'சிலாப்'பில் நின்று கொண்டு மக்களிடம் பிரச்சினையை கேட்டுள்ளார். பின்னர் செய்தியாளரிடம் பேசியுள்ளார். அப்போது சிலாப் உடைந்து எம்.பி. சாக்கடைக்குள் விழுந்து விட்டார். அவருடன் நின்றவர்களும் கும்பலாக உள்ளே விழுந்து விட்டனர்.

இதனால் எம்.பியின் தலை மற்றும் கை, கால் களில் பலத்த காயம் ஏற்பட்டு உள்ளது. இதனையடுத்து கிராம மக்கள் அவரை உடனடியாக மீட்டு வைத்திய சாலைக்கு அனுப்பி வைத்தனர். வைத்தியசாலையில் பூனம்பென் மாதமிற்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. (இ-5)

## தேர்தலை புறக்கணித்த கிராமம் ஒரு வாக்கு கூட பதிவாகவில்லை

திருவள்ளூர்மாவட்டத்தில்உள்ள ஒரு கிராமத்தினர் வாக்கு பதிவு செய்யாமல்தேர்தலை புறக்கணித்துள்ளனர். திருத்தணி தொகுதிக்கு உட்பட்ட மிட்டகண்டிகை கிராமத்தில், 586 வாக்குகள் உள்ளன. அங்கு காலை முதல் ஒருவர் கூட வாக்குச் செலுத்தவில்லை.

கடந்த 20 ஆண்டுகளாக தங்கள் கிராமத்திற்கு குடிநீர், வீதி, பேருந்து உள்ளிட்ட எந்த வசதியும் செய்து தரப் படவில்லை என அவர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

வாக்களிப்பதற்கு யாரும் வரவில்லை என்பதை அறிந்து, திருததணி வட்டாட்சியர் ஆசீர்வாதம் அங்கு விரைந்து சென்று கிராம மக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். அடிப்படை வசதிகள்செய்து கொடுக்கப்படும் என எழுத்து பூர்வமாக உறுதி அளித்தால் மட்டுமே, வாக் களிக்கப் போவதாக மிட்ட கண்டிகை கிராமத்தினர் தெரிவித்துள்ளனர். (இ-5)

# பிரதமராக மகன் பதவியேற்ற இரண்டாண்டுகளுக்கு பிறகு அரசு வீட்டில் முதன்முறையாக மோடியை சந்தித்த தாயார்






இந்தியாவின் பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்ற சுமார் இரண்டாண்டுகளுக்கு பின்னர் டில்லியில் உள்ள பிரதமரின் அதிகாரபூர்வ அரசு இல்லத்தில் அவரது தாயார் ஹீராபென் நேற்று முன்தினம் முதன்முதலாக சந்தித்தார்.

டில்லி 2014 பாராளுமன்ற தேர்தலில் ஜனநாயக கூட்டணி வெற்றிபெற்றதையடுத்து, நாட்டின் பிரதமராக 26-5-2014 அன்று நரேந்திர மோடி பதவியேற்றார்.

மோடியின் தாயாரான ஹீரா பென், குஜராத் மாநிலம், மேஹ் சானா மாவட்டம, வட்நகர் பகுதியில் உள்ள தங்களது பூர்வீக வீட்டில் தனது மூத்த மகனுடன் வாழ்ந்து வருகிறார்.

பிரதமரான பின்னர் ஓரிருமுறை அரசுமுறை பயணமாக குஜராத் மாநிலத்துக்கு சென்ற பிரதமர் மோடி, தனது பூர்வீக வீட்டுக்கு சென்று தாயாரை சந்தித்துள்ளார்.

இதுதவிர, தனது பிறந்த நாட்களின்போது தாயா ரிடம் ஆசி பெறுவதற்காகவும் அவர் சென்றுள்ளார்.

எனினும், டில்லி, ரேஸ் கோர்ஸ் வீதியில் உள்ள பிரதமரின் அதிகாரபூர்வ அரசு இல்லத்தில் வசித்து வரும் மோடியை சந்திக்க அவர்து தாயார் ஒருமுறை கூட வந்ததில்லை.

இந்நிலையில், டில்லி இல்லத்தில் தனது தாயாருடன் இருக்கும் புகைப்படங்களை தனது டுவிட்டர் பக்கத்தில் பிரதமர் மோடி நேற்று முன்தினம் பதிவிட்டுள்ளார்.

தன்னுடன் டில்லியில் தங்கியிருந்த தாயார், குஜராத்துக்கு புறப்பட்டு சென்ற பின் இந்த புகைப்படங்களை பதிவேற்றம் செய்துள்ள மோடி, நீண்ட நாட்களுக்கு பிறகு டில்லியில் உள்ள தனது இல்லத்துக்கு முதன் முறையாக வருகை தந்த தாயாருடன் மகிழ்ச்சிகரமாக சிறிது நேரத்தை அனுபவிக்க நேர்ந்ததாக குறிப்பிட்டுள்ளார். (இ-5)




# குரங்கு வைத்தியம்

குரு நாதா! இனிமேல் நாம் மருத்துவத் தொழில் செய்தால் என்ன?எனக் கேட்டான், முட்டாள்.

"அதனால் நமக்கு என்ன பயன்?" என்று பரமார்த்த குரு கேட்டார்.

"பணம் கிடைக்கும். அத்துடன் புண்ணியமும் கிடைக்கும்" என்றான், மூடன்.

"அப்படியே செய்வோம்" என்றார் குரு.

"மனிதர்களுக்கு மட்டும் தானா?" என்று கேட்டான் மண்டு.

"மனிதர்க்கும் வைத்தியம் செய்வோம் மாட்டுக்கும் செய்வோம் குழந்தைக்கும் செய்வோம் குரங்குக்கும் செய்வோம்!" என்றான் மட்டி.

பரமார்த்தரும் அவரது ஐந்து சீடர்களும் மருத்துவம் செய்யும் செய்தி ஊர் முழுதும் பரவியது.

காய்ச்சலால் அவதிப்பட்ட ஒருவன் வந்தான். அவன் உடலைத் தொட்டுப் பார்த்த மடையன், "குருவே! இவன் உடம்பு நெருப்பாகச் சுடுகிறது!" என்றான்.

"அப்படியானால் உடனே உடம்பைக் குளிர்ச்சி அடையச் செய்ய வேண்டும்!" என்றார் பரமார்த்தர்.

"அதற்கு என்ன செய்வது?" எனக் கேட்டான் முட்டாள்.

"இந்த ஆளைக் கொண்டுபோய்த் தொட்டியில் உள்ள தண்ணீரில் அழுத்தி வையுங்கள். ஒரு மணி நேரம் அப்படியே கிடக்கட்டும்" என்றார் குரு.



உடனே மட்டியும் மடையனும் அந்த நோயாளியைத் தூக்கிக் கொண்டுபோய், தொட்டி நீரில் போட்டனர். முட்டாளும் மூடனும் மாற்றி மாற்றி அவனை நீரில் அழுத்தினார்கள்.

நோயாளியோ "ஐயோ, அம்மா!" என்று அலறிய படி விழுந்தடித்து ஓடி னான்.

கொஞ்ச நேரம் கழித்து ஒரு கிழவி வந்தாள். "கண் வலிக்கிறது" என்றாள்.

"இப்போது நேரமில்லை. உண் கண்ணை மட்டும் தோண்டி எடுத்துக் கொடுத்து விட்டுப்போ. சரி செய்து வைக்கிறோம்!" என்றான் முட்டாள்.

கிழவியோ. "ஐயையோ" என்று கத்திக் கொண்டு ஓடினாள்.

சிறிது நேரம் சென்றது. "உடம்பெல்லாம் வெட வெட என்று நடுங்குகிறது என்றபடி ஒருவன் வந்தான்.

"சும்மா இருப்பதால்தான் ஆடுகிறது. உடம்பு முழுவதும் கயிறு போட்டுக் கட்டி விடுங்கள்! அப்போது எல்லாம் சரியாகிவிடும்" என்றார் பரமார்த்தர்.

முட்டாளும் மூடனும், வந்தவனை இழுத்துக் கொண்டு சென்று தூணில் கட்டி வைத்தனர்.

கட்டி வைத்த பிறகும் அவன் உடம்பு நடுங்குவதைக் கண்ட மட்டி, "குருதேவா! இது குளிரால் வந்த நோய். இது தீர வேண்டுமானால், இவன் உடம்பைச் சூடாக்க வேண்டும்!" என்றான்.

அதைக் கேட்ட முட்டாள் தன் கையிலிருந்த கொள்ளிக் கட்டையால் நோயாளியின் உடல் முழுவதும் வரிவரியாகச் சூடு போட்டான்.

வலி தாங்காத நோயாளி சுருண்டு விழுந்தான்.

(தொடரும்)

## 05.2016 17 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1498 - வாஸ்கொடகாமா இந்தியாவின் கோழிக்கோட்டை அடைந்தார்.
- 1521 - பக்கிங்ஹாமின் மூன்றாவது நிலை சீமானான (Duke) எட்வேர்ட் ஸ்டாஃபேர்ட் தூக்கிலிடப்பட்டான்.
- 1590 - டென்மார்க்கின் ஆன் ஸ்கொட்லாந்து அரசியாக முடி சூடினாள்.
- 1792 - நியூ யோர்க் பங்குச் சந்தை ஆரம்பிக்கப்பட்டது.
- 1809 - பிரெஞ்சுப் பேரரசுடன் இத்தாலியின் திருச்சபை நாடுகளை இணைக்க முதலாம் நெப்போலியன் ஆணையிட்டான்.
- 1814 - நோர்வே நாட்டின் அரசியல் நிர்ணயம் அமைக்கப்பட்டது.
- 1846 - அடொல்ஃப் சாக்ஸ் என்பவரால் சாக்சபோன் வடிவமைக்கப்பட்டது.
- 1865 - அனைத்துலகத் தொலைத் தொடர்பு மையம் ஏற்படுத்தப்பட்டது. இது பின்னர் அனைத்துலகத் தொலைத்தகவல் தொடர்பு மையம் எனப் பெயர் மாற்றம் பெற்றது.
- 1915 - பிரித்தானியாவின் கடைசி லிபரல் கட்சி ஆட்சி வீழ்ந்தது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: ஜெர்மனி பெல்ஜியத்தின் பிரசல்ஸ் நகரைக் கைப்பற்றியது.
- 1969 - சோவியத்தின் வெனேரா 6 விண்கலம் வீனஸ் கோளின் வளிமண்டலத்துள் சென்று வீனசில் மோத முன்னர் வளிமண்டலத் தரவுகளை பூமிக்கு அனுப்பியது.
- 1974 - அயர்லாந்தில் டப்ளினில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 33 பேர் கொல்லபபட்டனர்.
- 1983 - லெபனானில் இருந்து இஸ்ரேல் வெளியேறுவதற்கான உடன்பாடு லெபனான், இஸ்ரேல், ஐக்கிய அமெரிக்கா ஆகியவற்றுககிடையில் எட்டப்பட்டது.
- 1998 - தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்ப்பாண நகர முதல்வர் சரோஜினி யோகேஸ்வரன் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.
- 2006 - தமிழ்த் தொலைக்காட்சி நடிகை ஷ்ரத்தா விஸ்வநாதன் தூக்கிட்டுத் தற கொலை செய்துகொண்டார்.
- 2009 - தமிழினப் படுகொலை நாள். வன்னிப் போரில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் இலங்கை அரசபடைகளால் படுகொலை செய்யப்பட்டனர். நான்காம் கட்ட ஈழப்போர் முடிவுக்கு வந்தது.

### பிறப்புகள்

- 1749 - எட்வர்ட் ஜென்னர் - ஆங்கில மருத்துவ ஆராய்ச்சியாளர். (இ. 1823)
- 1888 - டைச் பிரிமென், ஆங்கிலேயத் துடுப்பாளர். (இ. 1965)
- 1920 - பி. சாந்தகுமாரி, நடிகை, பாடகி.
- 1945 - பி. சி. சந்திரசேகர், இந்தியத் துடுப்பாளர்.
- 1967 - முகமது நசீது, மாலைதீவின் 4வது அரசுத்தலைவர்.
- 1974 - செந்தில் ராமமூர்த்தி, அமெரிக்க நடிகர்.

### இறப்புகள்

- 1961 - மைசூர் வாசுதேவாச்சாரியார், கருநாடக இசைப் பாடகர். (பி. 1865)
- 2006 - ஷ்ரத்தா விஸ்வநாதன், தமிழ்த் தொலைக்காட்சி நடிகை.
- 2007 - நகுலன், தமிழ் எழுத்தாளர்.
- 2014 - சி. கோவிந்தன், தமிழறிஞர், புலவர.

### சிறப்பு நாள்

- உலகத் தொலைத்தகவல் தொடர்பு நாள்.
- நோர்வே - அரசியல் நிர்ணய நாள்.

## உலகத் தொலைத்தகவல் தொடர்பு நாள

உலக தகவல் சமூக நாள் (World Information Society Day) என்று ஒவ்வொரு ஆண்டும் மே 17ஆம் நாள் கொண்டாடப்படுகிறது. இது குறித்து அறிவிப்பு 2005 ஆம் ஆண்டு தூனிசில் நடந்த தகவல் சமூகத்திற்கான உலக மாநாட்டை அடுத்து ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் தீர்மானம் மூலம் அறிவிக்கப்பட்டது.

இதற்கு முன்னதாக பன்னாட்டுத் தொலைத்தொடர்பு ஒன்றியம் 1865 ஆம் ஆண்டு இந்த நாளன்று நிறுவப்பட்டதைக் கொண்டாடும் விதமாக உலகத் தொலைத்தகவல் தொடர்பு நாள் என அறியப்பட்டு வந்தது. 1973ஆம் ஆண்டு இதற்கான தீர்மானம் மாலேகா-டொர்ரெமோலினோசில் நடந்த முழு அதிகாரம் கொண்ட மாநாட்டில் நிறைவேற்றப்பட்டிருந்தது.

உலக தகவல் சமூக நாளின் முகனையான நோக்கம் உலகளவில் புதிய தகவல் தொழில்நுட்பங்களாலும் இணையத்தாலும் ஏற்பட்டுள்ள சமுதாய மாற்றங்களைக் குறித்த விழிப்புணர்ச்சியை வளர்ப்பதாகும். மேலும் இது எண்ணிம இடைவெளியைக் குறைப்பதற்கு உதவிடும் இலக்கையும் கொண்டுள்ளது.நவம்பர் 2005இல் நடந்த தகவல் சமூகத்திற்கான உலக மாநாடு தகவல் தொலைத்தொடர்பு தொழில்நுட்பங்களின் (ICT) இன்றியமையாமை மற்றும் மாநாட்டில் முன்வைக்கப்பட்ட பல்வேறு எழுவினாக்களைக் குறித்துமான குவியத்தை ஏற்படுத்த மே 17ஆம் நாளை உலக தகவல் சமூக நாள் என்று அறிவிக்க ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக்கு வேண்டுகோள் விடுத்தது. மார்ச்சு 2006 அன்று பொதுச்சபை அவ்வாறே தீர்மானம் (A/RES/60/252) நிறைவேற்றியது. முதல் உலக தகவல் சமூக நாள் மே 17, 2006ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது. உலக தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சமூக நாள் நவம்பர் 2006 துருக்கியில் உள்ள அன்டால்யாவில் நடந்த பன்னாட்டுத் தொலைதொடர்பு ஒன்றியத்தின் முழு அதிகாரம் கொண்ட மாநாடு இரு நிகழ்வுகளையும் ஒன்றுபடுத்தி உலகத் தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சமூக நாளாகக் கொண்டாட தீர்மானித்தது. இற்றைப்படுத்தப்பட்ட தீர்மானம் 68 உறுப்பினர் நாடுகளையும் துறை உறுப்பினர்களையும் ஆண்டுதோறும் தேசியளவில் தகுந்த நிகழ்ச்சிகளை வடிவமைத்துக் கொண்டாடுமாறு அழைப்பு விடுத்தது.

# சிவாஜிலிங்கத்தை கைது செய்யுங்கள்

## பிரசன்ன ரணதுங்க எம்.பி.

(கொழும்பு)

**விடுதலைப் புலிகளை நினைவுகூருவதற்கு பகிரங்கமாக அழைப்பு விடும் வட மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கத்தை கைது செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க , விடுதலைப் புலிகள் இயக்கம் இலங்கையில் இன்றும் தடை செய்யப்பட்ட ஒரு இயக்கம் என்பதை அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.**

இராஜகிரியவில் அமைந்துள்ள என்.எம்.பெரேரா நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே பாராளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.





வட மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் இன்று பகிரங்கமாக விடுதலை புலிகளை நினைவுகூர அழைப்பு விடுகின்றார். ஆனால் இதற்கு எதிராக அரசாங்கம் ஒரு வார்த்தை கூட பேசவில்லை.

தேசிய பாதுகாப்பையும் நாட்டின் இறையாண்மையையும்பாதுகாப்பதாக கூறியே இவர்கள் சத்தியப்பிரமாணம் செய்கின்றனர். ஆனால் தற்போது பிரிவினைவாதம் பேசி நாட்டை மீண்டும் பிளவுபடுத்த முயற்சிக்கின்றனர்.

எனவே அரசாங்கம் உடனடியாக வட மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் .

விடுதலைப் புலிகள் முற்றிலும் இலங்கையில் அழிக்கப்பட்டாலும் . இன்றும் புலிகள் இயக்கம் இலங்கையில் தடை செய்யப்பட்ட இயக்கமாகவே காணப்படுகின்றது.

எனவே அவர்களை நினைவுகூர மக்களுக்கு பகிரங்க அழைப்பு விடுவது சட்டத்திற்கும் தேசிய பாதுகாப்பிற்கும் முரணான விடயமாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# சிறுமியை துஷ்பிரயோகம் செய்ய முயன்ற இராணுவ அதிகாரியின் மீது தாக்குதல்

(கொழும்பு)

சிறுமியொருத்தியை துஷ்பிரயோகம் செய்ய முயன்ற இராணுவ அதிகாரியொருவரின் மீது கடுமையான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் நேற்றுக் காலை ஹோமாகம பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

குறித்த இராணுவ அதிகாரி தனது வீட்டில் வைத்தே இவ்வாறு சிறுமியொருத்தியை துஷ்பிரயோகம் செய்ய முயன்றுள்ளார்.

சிறுமி அவரது மைத்துனர் ஒருவரின் மகள் என்று தெரிய வந்துள்ளது. அத்துடன் சிறுமியின் தந்தையும் இராணுவத்தில் ஒரு அதிகாரியாக பணியாற்றி வருகின்றார.

அச்சிறுமி அதற்கு இணங்க மறுத்து சத்தமிட்டதையடுத்து, உறவினர்கள் இராணுவ அதிகாரியை கடுமையான காயங்கள் ஏற்படும் வரை தாக்கியுள்ளனர்.

இதன் பின்னர் தாக்குதலுக்குள்ளான இராணுவ அதிகாரி சிகிச்சைக்காக வைத்தியசாலையொன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, சிறுமியொருத்தியிடம் தகாத முறையில் நடந்து கொள்ள முயன்ற குற்றச்சாட்டின் பேரில் குறித்த அதிகாரியை கைது செய்ய நடவடிக்கை எடுத்திருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-5)

# கச்சதீவில் தேவாலயம் நிர்மாணிப்பதை உடன் நிறுத்த வேண்டும்- கருணாநிதி

கச்சதீவில் புதிய தேவாலயம் நிர்மாணிக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என இலங்கை அரசிடம் தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

நீண்ட காலமாகவே பிரச்சினைக்குரிய பாக் ஜலசந்தியில் உள்ள கச்சதீவில் பழமை வாய்ந்த அந்தோனியார் கோவிலை 1930 இல் தொண்டி அருகே உள்ள நம்புதாலையில் பிறந்த இந்து மதத்தைச் சேர்ந்த சீனிகுப்பன் என்பவர் எழுப்பினார்.

அதற்கு இராமேஸ்வரம் ஓலைக்குடா மீனவர்கள், கள்ளிக்கோட்டில் இருந்து கொண்டு வந்த ஓடுகளை 1951 இல் வேய்ந்தனர்.

மத நல்லிணக்கத்திற்கு அடையாளமாக இந்தக் கோவில் திகழ்ந்து வருகிறது. இந்த கோவிலுக்கு ஒவ்வொரு பெப்ரவரி மாத இறுதியில், கிறிஸ்தவர்கள் மட்டுமல்லாமல் மற்றவர்களும் கச்சதீவுக்கு சென்று, அந்தோனியார் திருவிழாவில் கலந்து கொள்வார்கள்.

பழமை வாய்ந்த ஓடுகளால் வேயப்பட்ட இந்த அந்தோனியார் கோவில் திருவிழாவில் தமிழகத்தில் இருந்தும் இலங்கையில் இருந்தும் மக்கள் வந்து கலந்து கொள்வது வாடிக்கையாக இருந்து வருகிறது.

பழமையும், பெருமையும் வாய்ந்த இந்தக் கோவில் இருக்கும் போது இன்னொரு கோவில் புதிதாகக் கட்ட வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டிருக்கிறது என்று புரியவில்லை.

பழமைவாய்ந்தஇக்கோவிலையே விரிவுபடுத்தலாம். இருநாட்டு மக்களும் இந்தக் கோவிலை புனிதமாகக் கருதுகிறார்கள்.

இந்நிலையில் இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜயகுணவர்த்தனவிடம் கத்தோலிக்கத் திருச்சபை விடுத்த கோரிக்கையினையொட்டி புதிய கோவிலுக்கான கட்டுமானப் பணிகளைத் தொடங்கியிருப்பதாக இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது.

புதிய கோவில் கட்டுமானம் குறித்து தமிழக மீனவர்களிடமும், குறிப்பாக தென் மாவட்டங்களில் உள்ள மீனவர்களிடமும், இந்திய அரசிடமும் கலந்தாலோசிக்காமல் முடிவு செய்யப்பட்டுள்ளது.



ஏற்கனவே பிரச்சினையிலும், சட்டச் சிக்கலிலும் உள்ள இந்த கச்சதீவு விவகாரத்தில் மேலும் சிக்கலை உருவாக்கி விடுமோ என்கிற ஐயப்பாடு எழுந்துள்ளது.

தமிழகத்தின் பகுதியான கச்சதீவை இலங்கைக்கு வழங்கியதையே ஏற்றுக் கொள்ள முடியாத நிலை இருக்கும் பொழுது, அங்கு புதிதாக ஒரு தேவாலயம் கட்டுவது ஒரு இணக்கமான நிலை ஏற்படுவதற்கு உதவிடுமா என்பதில் தான் நமக்குக் கவலை ஏற்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## இன்று ஒரு தகவல்

### நீங்கள் விருந்தாளியாக ஆகும் போது...

நீங்கள் ரொம்பவும் உபசரிக்கப்பட வேண்டும் என்றோ, மித மிஞ்சிக் கவனிக்கப்பட வேண்டும் என்றோ எதிர்பார்க்காதீர்கள். அந்த வீட்டின் சூழ்நிலை, அங்குள்ளவர்களின் மன நிலை எப்படி இருக்குமோ?

உள்ளூராக இருக்கும் பட்சத்தில் நீங்கள் குறைந்த நேரமே எடுத்துக் கொள்ள வேண்டும்.நுழையும் போதே இவர் நம் நேரத்தை வீணாக்கமாட்டார் ; கண்டதைப்பேசி போரடிக்க மாட்டார் என்ற நம்பிக்கை உரியவர்களுக்கு ஏற்பட்டால் வரவேற்பே பலமாக அமையும்.

சூழ்நிலை சரியில்லாவிட்டால் அப்புறம் வருகிறேன் என்று கிளம்பிவிடுங்கள்.

சொந்த வீட்டில் எவ்வளவு சௌகரியங்கள் இருந்தாலும் போகும் இடங்களில் எல்லாம் அதை எதிர்பார்க்காதீர்கள். உங்களுக்குப் போதுமான வசதிகள் செய்து தரப்படவில்லையே என்று அவர்கள் வருந்தலாமே தவிர , நீங்கள் வருந்தக் கூடாது.

அந்த வீட்டில் உள்ளவர்களின் நல்ல அம்சங்களைப் பாராட்டத் தயங்காதீர்கள். எவ்வளவு வேண்டியவர்களானாலும் குறைகளைச் சுட்டிக்காட்டாதீர்கள்.

முடிந்த வரையில் அவர்களுக்கு செலவு வைக்காதீர்கள்.சூழ் நிலையையும் தேவையையும் மனத்தில் கொண்டு தங்கும் வீட்டினருக்கு உபயோகமாய் ஏதேனும் வாங்கிக் கொண்டு போங்கள். ஹோட்டலில் தங்கினால் எவ்வளவு பில் வரும் என்பதை அனுசரித்து என்ன வாங்கிச் செல்வது என்பதை முடிவு செய்யுங்கள்.

என்னத்திற்கு இதெல்லாம்? என்று எல்லோரும் சொன்னாலும் வெறுங்கையுடன் வீட்டினுள் நுழையும் விருந்தாளிகளை மனித மனம் குறைத்தே மதிப்பிடும். இதற்கு விதிவிலக்காக ஒரு சிலர் இருக்கலாமே தவிர ஓராயிரம் பேர் இருக்க முடியாது.

சொந்த ஊருக்குக் கொண்டு போக எண்ணி ஏதேனும் வாங்கினால் உள்ளூரில் இருப்பவர்களுக்கு கொஞ்சமாவது வாங்குங்கள்.

மற்றவர்கள் வீட்டிற்குப் போனால் ஓய்வெடுப்பது தான் வேலை என்பதான கொள்கையை உதறிவிட்டு அவர்களுக்கு உபயோகமாய் இருங்கள்.பெண் விருந்தாளிகள் சமையலறையினுள் நுழைந்து காய்கறி நறுக்கிக் கொடுப்பது போன்ற வேலைகளைச் செய்யலாம்.

உங்களை வேற்று மனிதராக நினைக்காத படியும் அவர்களுடைய சகஜ வாழ்க்கை பாதிக்காத படியும் நடந்து கொள்ளுங்கள். இன்னும் கொஞ்ச நாள் தங்க மாட்டீர்களா என்ற எண்ணம் சிறு குழந்தை முதல் குடும்பத் தலைவர் வரை அனைவருக்கும் ஏற்படும் நேரத்தில் மூட்டை கட்டி விடுங்கள்.

நன்கு உபசரிக்கப்பட்டதற்கு (உபசரிக்கப்பட்டிராவிட்டாலும்)நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவிக்க யோசிக்காதீர்கள்.ஊர் போய்ச் சேர்ந்தவுடன் நாலுவரி எழுதிப் போடுங்கள்.

இப்படியெல்லாம் நடந்து கொண்டால் எத்தனைமுறை நீங்கள் சென்றாலும் அவர்கள் உங்களை இரு கரம் நீட்டி வரவேற்க மகிழ்வுடன் காத்திருப்பார்கள்.!

**லேனா தமிழ்வாணன்**

# இறுதி யுத்தகால நெருக்கீடுகளும் அவற்றினாலேற்படும் தாக்கங்களும்

வன்னி நிலப்பரப்பின் எஞ்சிய இறுதிப்பகுதியையும் கைப்பற்ற வேண்டும் என்ற பேரவாவில் மூர்க்கமாக முன்னேறியபடியிருந்தது இலங்கை இராணுவம். என்ன விலை கொடுத்தேனும் எவ்வளவு விரைவாக கைப்பற்ற முடியுமோ அவ்வளவு விரைவாக ஒட்டுமொத்த பலத்தையும் ஒன்று திரட்டி வேகமாக முன்னேறிக்கொண்டிருந்தவர்களின் கண்களுக்கு அப்பாவிப் பொதுமக்களது இழப்புகள் பெரிதாக படவில்லை. ஒருபுறம் இருதரப்பினரும் நேருக்கு நேர் கடும் போர் புரிந்து கொண்டிருக்கின்றனர். மறுபுறம் யுத்தத்தில் சம்பந்தப்படாத பெருமளவிலான அப்பாவிக் குழந்தைகள் சிறுவர்கள் பெண்கள் முதியோர் என ஏராளமான பொதுமக்கள் செத்து மடிந்தும் காயமடைந்தும் கொண்டிருக்கின்றனர். காயமடைந்து உயிருக்கு போராடுபவர்களைக்கூட மீட்க முடியாதளவிற்கு போரின் உக்கிரம் வன்னி மண்ணை உலுக்கியது. எத்தனையோ தமது உறவுகள், பிள்ளைகள், அயல் மக்கள் , கண்ணெதிரே உதவியின்றி உயிர்விட்டதையும் அப்போது கையறுநிலையில் இருந்த எம்மால் காப்பாற்ற முடியவில்லையே என்ற கழிவிரக்கத்துடன் தற்போது மீள நினைக்கையிலும் எந்த மனம் தான் கலங்காது? இருதரப்புகளுமே தமிழ் மக்களை கணக்கில் எடுத்துக் கொள்ளத்தேவையில்லாத சனக்கூட்டமாக கருதி பயன்பாட்டுவாத எல்லைக்குள் நின்று இத்தாக்குதல் நடவடிக்கைகள் நிகழ்த்தப்பட்டன. மக்களது வாழ்வுரிமை பறிக்கப்பட்டதுடன் அவர்களது உணர்வுகளும் எதிர்காலக் கனவுகளும் இலட்சியங்களும் சிதைக்கப்பட்டுவிட்டன.யுத்தம் முடிவுற்றுப் பல வருடங்கள் கடந்தோடிவிட்ட நிலையிலும் அதன் குரூர நிழலானது தற்போதும் தொடர்ந்தபடியிருக்கும் நிலையில் மக்களின் வாழ்வியற் கட்டமைப்பானது இன்று வரையும் இயல்பு நிலையிலிருந்து மீளவில்லை எனலாம்.

மனிதன் என்ற சமூகப் பிராணி என்றைக்கு உருவானதோ அன்றைக்கே இத்தகைய நெருக்கீடுகளும் உருவாகின எனலாம். நெருக்கீடு என்று கூறுகின்றபோது ஒரு சம்பவத்தின் தொடர்ச்சியாகவோ அல்லது ஒரு பிரச்சினையின் நீட்சியாகவோ எற்படும் உடல், உள ரீதியாக ஏற்படும் பாதிப்புகளுடன் நடத்தை ரீதியாகவும் ஒருவரின் அன்றாட செயற்பாடுகளும் பாதிப்படையும் போது அதனை நெருக்கீடு என அழைக்கப்படும். தனிநபர் ஆளுமையின் பல்வேறு கூறுகளுக்கிடையில் ஏற்படக்கூடிய பரஸ்பர தாக்கங்கள் மற்றும் அவற்றின் உள இயக்கப்பாடுகளுக்கிடையில் ஏற்படும் பிறழ்வுகளை நோக்கினால் யுத்தமானது மக்களது மனநிலையில் தீவிர நெருக்கீட்டை ஏற்படுத்தியுள்ளது.




ஏற்கனவே ஸ்திரமான ஆளுமையுடையவர்களைக்கூட யுத்தப்பாதிப்புகள் விட்டுவைக்கவில்லை. காரணம், ஏராளமான மரணங்களையும் இழப்புக்களையும் பேரழிவுகளையும் கண்ணெதிரே காண நேர்கையில் ஒருவருக்கு ஆளுமைப் பிறழ்வுகள் தீவிரம் பெறுவதை தவிர்க்க முடியாது. எந்த நிலையிலும் சாவைத்தழுவலாம் என்ற அதீத பய உணர்வு, வாழ்வு பற்றிய நிச்சயமற்ற தன்மை, விரக்தி என்பவை இவ்வித ஆளுமைப் பிறழ்ச்சிகளை ஏற்படுத்தும் சூழமைவைத் தோற்றுவிக்கும். சாதாரணமாக ஒவ்வொருவருமே வாழ்க்கையில் ஏதோவொருவகையில் நெருக்கீடுகளை எதிர்கொண்டு வருகின்றனர். ஆனால் அத்தகைய நெருக்கீடுகளானவை எம்மை வாழ்க்கையில் முன்னேற்றப்பாதைக்கிட்டுச் செல்வதற்கான பொறிமுறைகளாகவே கொள்ளப்படுகின்றன. இங்ஙனமாக ஒருவர் வாழ்விலே அனுபவிக்கும் நெருக்கீடுகள் பெரும்பாலும் தற்காலிகமானவையாகவும் பாரிய உளத்தாக்கங்களை ஏற்படுத்தாதவையாகவும் காணப்படுகின்றன. இவை ஒருவிதத்தில் மனித வாழ்க்கைக்கு மிக அவசியமானவையே.

ஆனால் இப்பத்தியிலே குறிப்பிட்டுள்ள நெருக்கீடுகள் அவ்வகையினதல்ல. அவற்றை சரிவர எதிர்கொள்ளாவிட்டால் பாரிய உளப்புறழ்வுகளுக்கு முகம்கொடுக்க நேரிடும். நெருக்கீட்டுத் தாக்கமானது பின்வரும் விடயங்களிலிருந்து அதன் தாக்கத்தினை அளவிட முடியும். நெருக்கீட்டை ஏற்படுத்தும் சம்பவத்தின் தன்மை, அதன் அளவு, தீவிரம், காலம், எதிர்கொள்பவரது உளத் தாங்குதிறன் என்பவற்றைப் பொறுத்தும் நெருக்கீட்டின் தாக்கவேகங்களும் வேறுபடும்.

மேலும் சாதாரணமாக ஏற்படும் நெருக்கீடுகளானவை அதாவது தனிநபர், குடும்பம் அல்லது குறித்த சிலர் எதிர்கொள்ளும் நெருக்கீடுகள் பெரிதும் சம்பந்தப்பட்டவர்களுக்கேயுரிய பாதிப்பாக அமையும். ஆனால் ஒரு சமூகம் அல்லது இனம் அல்லது நாடுதழுவிய ரீதியில் ஏற்படுகின்ற பே(ா)ரழிவுகள் மிக முக்கியமான உளவியல் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். எமது நாட்டைப்பொறுத்தவரையில் இயற்கையிடர்களால் ஏற்பட்ட அழிவுகளை விட இனப் போரால் மூண்ட அழிவுகளே அதிகமாகும். தமிழ் சமூகத்தை பொறுத்தவரை கடந்த 30 வருட கால யுத்த சூழலுக்குள் வாழ்ந்து பழக்கப்பட்ட படியால் நெருக்கடியான சூழலொன்றில் எவ்வாறு முகம் கொடுப்பது? என்ற அடிப்படையையும் பல்வேறு படிப்பினைகளையும் அனுபவ ரீதியாக எமக்கு நன்குணர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலம் போர்ச்சூழலுக்கேற்ப எம்மை தகவமைக்கும் பண்புக்கூறை வளர்த்துக் கொண்டமையால் மனரீதியான அழுத்தங்கள் இலகுவில் எம்மை பாதிப்பதில்லை.

இருந்தும் இறுதி யுத்தமானது இதுவரையில் அனுபவித்திராத மிக மோசமான தாக்கங்களை-அழிவுகளை மனங்களில் குரூரமான வலிகளை சுமக்க முடியாது தவிர்த்தனர். ஒரு குடும்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்டவர்களையிழந்த சோகம் ஒருபுறம். இதுவரைகாலமும் ஒன்றாக இருந்து கூடிக்குலவிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் தம் கண்ணெதிரே இந்த காணக்கூடாத நெஞ்சினை பிழியும் காட்சிகளை கண்ட ஏக்கம் மறுபுறம். .

இவ்வாறு எங்கு பார்க்கினும் சாவுகளும் மரண ஓலங்களும் அவை தந்த மரண வலிகளும் இறக்கி வைக்க முடியாத சோகங்களை எம்முள் ஏற்படுத்தியுள்ளமையினால் கூட்டு மனவடுவுக்கு தமிழ்ச் சமூகம் உட்பட்டுள்ளமையை மறுதலிக்க முடியாது. அதுமட்டுமன்றி இறந்த உறவுகளுக்காக கண்ணீர் விட்டழக்கூட முடியாது தமது மனவலிகளை மௌனமாக மனதுள் அடக்கி, அமுக்கி வைத்திருப்பதனால் நீண்ட காலத்தில் அவை குமுறித் தகர்ந்து பாரிய உளப்பேரதிர்வை உண்டாக்கவல்லன.

போரென்றால் அழிவுகளும் நிச்சயமிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. தர்மம், நீதி என்ற பேச்சுக்கே இடமிருக்காது. முற்காலத்தில் போர் நடைபெறும் இடங்களில் அப்பாவி மக்களை அப்புறப்படுத்திவிட்டே யுத்தத்தில் ஈடுபட்டமையை பழந்தமிழ் நூல்களின் வாயிலாக அறியக்கிடக்கிறது. அதாவது யுத்த களத்தில் யுத்தத்தில் ஈடுபடும் தரப்புகளைத் தவிர ஏனையோரைக் காணமுடியாது. குறிப்பாக பெண்கள் குழந்தைகள் முதியோர்கள், நோயாளர்கள் போன்றவர்களை பாதுகாப்பாக வெளியேற்றியதன் பிற்பாடே போர் நடைபெற்றது. அன்றைய போர் நடவடிக்கைகளில் யுத்த தர்மம் இறுக்கமாகக கடைப்பிடிக் கப்பட்டது. ஆனால், இன்றைய நிலைமையோ தலைகீழாக இருப்பது வெளிப்படையாகும். அதாவது தற்கால யுத்தங்களில் இவை வெறும் கொள்கை யளவில் மட்டுமே கடைப்பிடிக்க ப்படுகிறது. எப்படியெனில் யுத்தத்தில் சம்பந்தப்படாத அப்பாவி மக்களை கோவில்கள், தேவாலயங்கள், பாடசாலைகள் முதலிய பொது இடங்களில் தஞ்சமடையுமாறு கூறுவது பின்னர் அவ்விதம் தஞ்சமடைந்தோர் மீது குண்டுகளை வீசுவது மற்றும் மக்களை காப்பரண்களாகக் கருதிப் போரிடல், கைது மற்றும் காணாமற்போகச் செய்யப்படல், பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமைகள் முதலிய இன்னோரன்ன நிட்டூரங்களைப் புரிதல் சாதாரணமாகிவிட்டது. மனிதர்களுடன் ஆடு, மாடுகள் முதலிய வாய்பேசாத ஜீவன்கள் கூட மடிவது வேதனையிலும் வேதனை. இத்தகைய விலங்குகளின் வாழ்வுரிமைகளும் பறிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறாக, யுத்தம் நடைபெறும் இடங்களில் உயிர், உடமை இழப்புகளுடன் சொல்லொணாத் துன்பங்களையும் காலம் காலமாகச் சுமக்க வேண்டிய சோகங்களும் தொடரும் அவலம் இதன் தொடர்ச்சியாக ஏற்படும் உள நெருக்கீட்டுத் தாக்கங்களும் அதிகரிக்கும் என்பதையும் மறந்துவிடமுடியாது. இவ்விதமாக உள நெருக்கீட்டுத் தாக்கத்திற்குட்பட்டோரை ஆற்றுப்படுத்தும் பொறிமுறைகள் உருவாக்கப்பட வேண்டியது கட்டாயமாகும். இதற்கு அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், சமய, சமூகத் தலைவர்கள், உளவியலாளர்கள், மருத்துவர்கள் போன்றவர்களின் தன்னலமற்ற பங்களிப்பானது மிகவும் வேண்டப்படுகிறது. மேலும் பாதிப்புற்ற மக்கள் பெரும்பாலும் சம்பவம் நடைபெற்ற தினம் வரும்போது அதனை நினைவு கூர முற்படுவது அவர்களது மன அழுத்தத்தை மனப் பாரத்தை ஓரளவுக்காவது இறக்கி வைக்க முடியும். அதாவது பாதிக்கப்பட்டவர்கள் வருடா வருடம் அத்தினம் வரும்போது தமது மனத்தாக்கங்களை தணிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுவர்.

(18 ஆம் பக்கம் பார்க்க...)

# வடக்கு மாகாண ஆளுநரை பணி நீக்குமாறு கோரிக்கை

## மகிந்தவின் தீவிர விசுவாசி

(கொழும்பு)

**வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரேயை பணி நீக்குமாறு முன்னாள்நாடாளுமன்ற உறுப்பினர் ரியர் அட்மிரல் சரத் வீர சேகர அரசாங்கத்திடம் கோரியுள்ளார்.**



தேசிய படைவீரர் ஒன்றியத்தினால் நேற்று முன்தினம் பத்தரமுல்ல நெலும் வீதியில் அமைந்துள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் காரியாலயத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர் இந்த நாட்டை துண்டாட முயற்சிக்கும் தமிழ் இனவாதிகளுக்கு சாதகமான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார். இவ்வாறான கருத்துக்களை அனுமதிக்க முடியாது.

ஒழுக்கமான படையினர் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியவையாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் 11000 போராளிகள் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகத்துடன் மீள இணைக்கப்பட்டுள்ளனர். கடந்த காலங்களில் மூன்று தடவைகள் பயங்கரவாதிகள் தலைதூக்க முயற்சித்தனர்.

எனினும் படையினர் வலுவான நிலையில் காணப்பட்டமையினால் இந்த முயற்சிகள் முறியடிக்கப்பட்டன.

எனினும் தற்போது புலனாய்வுப் பிரிவினரை மலினப்படுத்தி மீளவும் பயங்கரவாதம் தலைதூக்க சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

ரெஜினோல்ட் குரேயின் பலவீனம் காரணமாக வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளார் என சரத் வீரசேகர தெரிவித்துள்ளார். (இ-5)

## சட்டவிரோத மணல் அகழ்வு; ஐவருக்கு அபராதம் விதிப்பு

### தலா 25 ஆயிரம்

(மல்லாவி)

கிளிநொச்சி பன்னங்கண்டி பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட ஐந்து பேருக்கும் தலா 25 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன் மணல் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பன்னங்கண்டிப் பகுதியில் பயிர்ச்செய்கை நிலங்களில் தொடர்ந்தும் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுவதாக பொலிஸாருக்கு பொதுமக்கள் வழங்கிய தகவலைத் தொடர்ந்து கடந்த 12ஆம் திகதி சம்பவ இடத்திற்குச் சென்ற கிளிநொச்சிப் பொலிஸார் மணல் அகழ்வில் ஈடுபட்ட 5 உழவு இயந்திரங்களைப் பறிமுதல் செய்ததோடு சாரதிகளையும் கைது செய்துகடந்த 13ஆம் திகதி கிளி நொச்சி மாவட்ட நீதவான் நீதி மன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புபட்ட சாரதிகளுக்கு தலா 25 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன் மணல் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை சாரதி அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய உழவு இயந்திரத்தை செலுத்திச் சென்றவருக்கு 6ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சட்டவிரோத மணல் அக்ழ்வில் ஈடுபட்ட ஐந்து பேருக்கு தலா 25 ஆயிரம்ரூபா வீதம் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. (இ-15)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 723

**தர்மசீலன்**

மகன்: அம்மா, அப்பா இன்னைக்கு பஸ்ல ஒரு பொண்ணுக்காக எழுந்து இடம் கொடுக்க சொன்னாரு!

அம்மா : நல்ல விசயம் தானே!


மகன்: நான் உட்காந்திருந்தது அப்பாவோட மடியில!

# செத்தான்டா சேகரு..

**ஜீவி**



**கம்சி**




**புகழ்**




**லொலிப்பப் விதுஷ்**




**நிஷாந்தன்**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

...உடனே ராதா துப்பாக்கியை தன் தலையில் வைத்து விசையை அழுத்தினார். குண்டு அவர் நெற்றியில் பாய்ந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# தமிழ் சினிமா வரலாறு

160

## எம்.ஜி.ஆர். சுடப்பட்டார்! எம்.ஆர்.ராதா கைது

சுடப்பட்ட எம்.ஜி.ஆர். ராயப்பேட்டை வைத்தியசாலைக்கு கொண்டு போகப்பட்டார். முதல் சிகிச்சைக்குப்பிறகு சென்னை ஜெனரல் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

**கழுத்தில் குண்டு**

எம்.ஆர்.ராதாவும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அவர் நெற்றியில் பாய்ந்த குண்டு அகற்றப்பட்டது. ஆனால் எம்.ஜி.ஆர். கழுத்தில் பாய்ந்த குண்டு மூன்று முக்கிய நரம்புகளுக்கிடையே பதிந்திருந்தது. அதை அகற்றினால் நரம்புகளுக்குச் சேதம் ஏற்பட்டு உயிருக்கே ஆபத்து ஏற்படலாம் என்ற நிலை.

பிரான்ஸ் நாட்டு நெற்போலியன் உடலில் பாய்ந்த குண்டை வெளியே எடுக்க முடியாமல் அப்படியே வைத்துத் தையல் போட்டதாக வரலாறுகள் உண்டு. நாளடைவில் அந்த உலோகம் கரைந்து சதையோடு சேர்ந்துவிடும். எனவே மருத்துவர்கள் இந்தக் குண்டை அப்படியே விட்டு விட்டுத் தையல் போட்டனர்.

**தேர்தலில் வெற்றி**

பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்டு பரங்கி மலைத் தொகுதியில் தி.மு.க. வேட்பாளராக எம்.ஜி.ஆர். போட்டியிட்ட நேரத்தில்தான் அவர் சுடப்பட்டார். தேர்தல் பிரசாரத்துக்குப் போகாமலேயே வைத்தியசாலையில் படுத்தபடி அவர் வெற்றி பெற்றார்.

சிகிச்சைக்குப்பின் எம்.ஜி.ஆரும். எம்.ஆர்.ராதாவும் குணம் அடைந்தார்கள். எம்.ஜி.ஆரை சுட்டதாக ராதா மீது சைதாப்பேட்டைக் நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது. இந்த வழக்கில் 1967 மே மாதம் 22 ஆம் திகதி எம்.ஜி.ஆர். நீதிமன்றத்துக்கு வந்து சாட்சியம் அளித்தார்.

வழக்கில் ராதாவுக்கு 7 ஆண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

உச்ச நீதிமன்றத்தில் இது 5 ஆண்டு கடுங்காவல் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

**குண்டு வெளியேறியது**

எம்.ஜி.ஆருக்கு அடிக்கடி தும்மல் வரும் ஒருநாள் தும்மல் தும்மியபோது கழுத்தில் நரம்புகளுக்கிடையே பதுங்கியிருந்த குண்டு மெல்ல நகர்ந்து, தொண்டைக்கு வந்து விட்டது. தொண்டையின் மெல்லிய ஜவ்வுக்குள் குண்டு இருந்தது. நன்றாகத் தெரிந்தது.



உடனே எம்.ஜி.ஆர். வைத்தியசாலைக்கு கொண்டு போகப்பட்டார். சத்திர சிகிச்சை மூலம் குண்டு அகற்றப்பட்டது.

குண்டு வெளியேறியபின் எம்.ஜி.ஆரின் குரல் வளம் பாதிக்கப்பட்டது. மெல்லிய குரலில் பேசினார்.

எம்.ஜி.ஆர். சுடப்பட்ட பிறகு நடித்து வெளிவந்த காவல் காரன் பெரிய வெற்றிப்படமாக அமைந்தது. வசனம் பேசுவதில் குறை தெரிந்தாலும் சென்னையிலும் மற்ற ஊர்களிலும் நுறு நாட்களுக்கு மேல் ஓடியது.

எம்.ஜி.ஆர் சுடப்பட்ட போது தயாரிப்பில் இருந்த படங்கள் சத்தியராஜா பிக்சர்ஸ் அரச கட்டளை, சத்யா மூவிஸ் காவல்காரன் ஆகியவையாகும்.

அரச கட்டளையில் எம்.ஜி.ஆருடன் ஜெயலலிதா, சரோஜாதேவி ஆகியோர் நடித்தனர். படப்பிடிப்பு ஏற்கனவே முடிந்து விட்டது. எடிட்டிங், மீள் ஒளிப்பதிவு போன்ற ஒரு சில வேலைகளே பாக்கி. அந்தப்பணிகள் முடிந்து படம் 19.05.1967 அன்று வெளிவந்தது. படம் வெற்றிகரமாக ஓடியது.

இந்தப்படத்தை எம்.ஜி.ஆரின் அண்ணன் எம்.ஜி. சக்ரபாணி டைரக்ட் செய்திருந்தார். வசனம்:சொர்ணம். இசை: கே.வி.மகாதேவன்.

**குரல் பாதிப்பு**

சத்யா மூவிஸ் காவல் காரன் படத்தில் எம்.ஜி.ஆரும், ஜெயலலிதாவும் இணைந்து நடித்தனர். வசனம்: வித்வான் வே.லட்சுமணன். இசை: எம்.எஸ்.விஸ்வநாதன். (தொடரும்)

# இறுதி யுத்தகால நெருக்கீடுகளும்...

(16 ஆம் பக்கத்தொடர்ச்சி...)

இது வழமையான தொன்று. அதை ஒரு நினைவு நாளாக சமய காலாசார சடங்கு முறைகளாகவே பார்க்கப்பட வேண்டியதாகும். மாறாக அவற்றுக்கு அரசியல் சாயம் பூசி அவறினைத் தடுத்து நிறுத்துவதானது மனிதப் பண்புகளுக்கு, நாகரிகத்திற்கு ஒவ்வாத செயலாகும் என்பதை சம்பந்தப்பட்ட தரப்பு உணர வேண்டும்.

போரனர்த்தத்தால் தமிழ் சமூகத்தில் கணிசமானோர் ஒட்டுமொத்தமாக பாதிக்கப்பட்டுள்ளதால் அங்ங னம் பாதிக்கப்பட்ட தினத்தை ஒரு பொது நினைவு தினமாக அனுட்டிப்பதானது அவர்களது உள நெருக்கீட்டுத் தாக்கங்களை தணிக்க முடியும் என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும்.

ஒருவர் தமது உளப்பிரச்சினைகளை மனம் விட்டு மற்றொருவருடன் பகிர்ந்து கொண்டாலே பாதித்துன்பம் போய்விடும். இதற்கு உறவினர்கள் நண்பர்களை போல் உதவுபவர்கள் வேறுயாரும் இருக்க முடியாது. உளப் புண்களால் அவதிப்படுபவர்கள் இவர்களது ஆற்றுப்படுத்தல்களால் உளவமைதி பெறுவர். ஆனால் இவர்களது இடத்தினை தற்போது உளவள்த் துணையாளர்களும் உள சமூகப்பணியாளர்களும் இட்டு நிரப்பிக்கெண்டுள்ளனர். காரணம் இத்தகைய உறவினர்கள் நண்பர்களே மனத்தாக்கத்திற்குட்பட்டுள்ளனர். தமது பிரச்சினைகளுக்கே வடிகால் தேடும்போது மற்றையவர் துன்பங்களைக் கேட்டு தேற்ற முடியுமா? அத்துடன் தற்காலத்தில் ஒருவரையொருவர் புரிந்து கொள்வதே கடினம். நம்பிக்கையீனங்கள் சமூகத்தில் மலிந்துவிட்ட நிலையில் தமது பிரச்சினைகளை மற்றொருவருடன் பகிர்ந்து கொள்வதில் அச்ச நிலையும் காணப்படுகிறது. எனவே உள சமூகத் தொண்டர்களின் தேவைப் பாடும் மேலெழுந்துள்ள நிலையில் அவர்கள் தமது அர்ப்பணிப்புள்ள செயற்பாடுகளை மக்களுக்கு வழங்க வேண்டியது அவசியமனதாகும். அத்துடன் உளமருத்துவ நிபுணர்களும் பணம் புகழிற்கு அடிமைப்படாத மனிதாபிமான சேவைகளை வழங்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.



மனிதாபிமானத்தையும் உண்மையையும் மறுப்பதாலேயே போரே உருவாகிறது என்ற முன்னாள் பாரதப் பிரதமர் நேருவின் கூற்றை இங்கு குறிப்பிடுவது பொருத்துடையதாகும்.

எவற்றை மறுப்பதால் போருருவாகிறதோ அவற்றை வழங்குவதன் மூலம் போரை வன்முறையை நிறுத்தலாம் என்பதே இவரது கருத்தாகும். எனவே போரனர்தங்களாலும் அதன்வழி உளநெருக்கீடுகளாலும் சீரழிந்து போயுள்ள சமூகக்கட்டமைப்புகளை மீளக்கட்டியெழுப்புவதற்கும் சமூகச் சீரழிவுகளை சீர் செய்வதற்கும் மனிதாபிமானம் மிக்க பணிகள் முக்கியத்துவம் பெறுவதுடன் சமய சமூகத் தலைவர்களின் சேவைகளும் வேண்டப்படுகின்றது. அவர்களது ஒழுக்க விழுமியப் போதனைகளும் அறநெறிவழுவாத வாழ்க்கை முறையினாலெழும் நன்மைகள் பற்றிய எடுத்துரைப்பும் மனிதப் பெறுமானம் பற்றிய அறிவை போதிப்பதும் வேண்டற்பாலதாகும்.

எனவே எந்தவொரு நோய் அல்லது உள நெருக்கீட்டைப் பொறுத்தவரையில் அதன் காரணத்தை கண்டறிந்து அதனை அகற்றலே சிகிச்சையின் முதற்படியாகும். போரினால் ஏற்பட்ட உள அதிர்ச்சிகளும் நீண்ட காலத்தில் பாரிய உள நோய்களுக்கு வித்திடக்கூடியதாக இருப்பதனால் அவை சுகாதார மருத்துவ ரீதியிலும் முக்கியத்துவம் பெறுகின்றன.

எனவே அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் மாத்திரமன்றி உலக சுகாதார நிறுவனத்திற்கும் இது விடயத்தில் கவனம் செலுத்த பாரிய பொறுப்புண்டு. போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டிருப்பினும் எதிர்காலம் பற்றிய அச்சநிலை, வாழ்வில் நம்பிக்கையின்மை, பீதி முதலியவை மக்களை விட்டு இன்னும் முற்றாக நீங்கவில்லை.

அத்துடன் கைது மற்றும் காணாமற் போகச் செய்யப்பட்டவர்களது உறவுகளின் நிலையோ சொல்லி மாளாது. சாதாரணமாக புனர்வாழ்வின் போது மரண இழப்பீடுகளும் உடைந்த வீடுகளுக்கு பதிலாக புதிய வீடுகள் அமைத்துக் கொடுத்தலுமே நடைபெற்று வருகையில் உளரீதியான பாதிப்படைந்தவர்களை பராமரிப்பதில் உரிய கவனம் செலுத்தப்படுவதில்லை.

எனவே முதற்படியாக உளவியல் முதலுதவிகளை வழங்கி உள நெருக்கீட்டின் தீவிரத் தன்மையைக் குறைக்கும் நடவடிக்கையில் இறங்கி மக்களது இயல்பான வாழ்வியல் கட்டமைப்பை மீளுருவாக்கம் செய்ய வேண்டிய பொறுப்பும் கடமையும் அனைவர் முன்பாகவும் விரிந்திருக்கின்றன. அவற்றை காலமிட்ட கட்டளையாக கருதித் தட்டிக்கழிக்காது சமூகப் பொறுப்புணர்ந்து விரைந்து செயற்படுவோம்.

ஸ்ரீ.நதிபரன்

# போதைப்பொருளுடன் மீண்டும் கைதான முன்னாள் உதவிப் பொலிஸ் பரிசோதகர்

(கொழும்பு)

**ஹெரோயின் போதைப்பொருளை வைத்திருந்த குற்றத்திற்காக கைதாகி பின்னர் பொலிஸ் சேவையிலிருந்து பணி நீக்கம் செய்யப்பட்ட முன்னாள் உதவிப் பொலிஸ் பரிசோதகர் ஒருவர் மீண்டும் போதைப் பொருட்களுடன் கைது செய்யப்பட்ட சம்பவம் கண்டியில் இடம்பெற்றுள்ளது.**

ஹெரோயின் போதைப் பொருள் 20 மில்லி கிராமை உடன்வைத்திருந்த குற்றத்திற்காக கடந்த 2009 ஆம் ஆண்டுகைதாகியகுற்றவாளியான மேற்படி பொலிஸ் உதவிப்பரிசோதகர் மீண்டும் 3070 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன்நேற்று முன்தினம் கண்டிப் பொலிஸாரால்கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மேற்படி சந்தேக நபர் லொறி சாரதியாகத் தொழில் புரிந்து வந்துள்ளதுடன் குண்டசாலை கெங்கல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயது நபராவார்.

இவரை கண்டி தென்னக்கும்புர பிரதேசத்தின் இலுக்மோதரை என்ற இடத்தில் வைத்து பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கண்டி பொலிஸ் தலைமையகத்திற்கு கிடைத்த தகவல் ஒன்றின்படியே குறித்த நபர் கைதானதாக தெரிவிக்கப்படுகின்றது. குறித்த சந்தேக நபரை பொலிஸார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-5)

# இலங்கையின் தீவொன்றைக் கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டும் அரேபிய இளவரசர்

(கொழும்பு)

, இலங்கைக்கு உரித்தான தீவொன்றைக் குத்தகைக்குப் பெற்றுக் கொள்வதில் அரேபிய இளவரசர் ஒருவர் ஆர்வம் காட்டுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையின் கரையோரத்தில் இருந்து சற்றுத்தள்ளி கடலுக்குள் அமைந்திருக்கும் குறித்த தீவை நீண்ட காலக் குத்தகை அடிப்படையில் தனக்கு வழங்குமாறு அவர் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்துடன் தீவின் மத்தியில் பாரிய மாளிகை ஒன்றை அமைக்கவும் அரேபிய இளவரசர் ஆர்வம் கொண் டிருப்பதாக தெரிய வந்துள்ளது.

எனினும் தான் குத்தகைக்குப் பெற்றுக்கொள்ளும் தீவு மற்றும் அதன் மத்தியில் அமைக்கவுள்ள மாளிகை என்பவற்றை சுற்றுலா நோக்கங்களுக்காக அவர் பயன்படுத்தப் போவதில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

அதற்குப் பதிலாக தமது மன்னர் பரம்பரையினர் வந்து தங்கி, ஓய்வெடுத்துச் செல்வதற்கு மட்டுமே குறித்த மாளிகை பயன்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தியுள்ள அரசாங்கத்தின் முக்கிய அதிகாரியொருவர் அது குறித்த மேலதிக தகவல்களை தெரிவிக்க மறுப்புத் தெரிவித்துள்ளார். (இ-5)

# பேராதனை தாவரவியல் பூங்காவின் ஏப்ரல் மாத வருமானம் 43மில்.ரூபா



கண்டி பேராதனை தாவரவியல் பூங்காவின் கடந்த ஏப்ரல் மாத வருமானம் 43 மில்லியன் ரூபா என பூங்கா அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு, வெளிநாட்டு பார்வையாளர்களிடம் அறவீடு செய்யப்பட்ட நுழைவுச் சீட்டுக் கட்டணங்களின் ஊடாக இந்த வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

வசந்த காலத்தின் போது பேராதனை தாவரவியல் பூங்காவிற்கு சுமார் மூன்று இலட்சத்து முப்பதாயிரம் உள்நாட்டு, வெளிநாட்டு பார்வையாளர்கள் வருகை தந்துள்ளனர்.

இதில் 30 ஆயிரம் பேர் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# தனது வீட்டின் அழகு பாதிக்கும் என்பதால் தந்தையின் வீட்டை தரைமட்டமாக்கிய மகள்

காலி மாவட்டம், கரந்தெனிய பிரதேசத்தில் தந்தையின் வீட்டை மகள் ஒருவர் இடித்து தரைமட்டமாக்கிய சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

தந்தை சிறிய பழைய வீட்டில் வசித்து வருவதனை கௌரவக் குறைவாக கருதிய மகள் தந்தை வீட்டில் இல்லாத போது வீட்டை புல்டோசர் கொண்டு தரைமட்டமாக்கியுள்ளார்.

கரந்தெனிய, பஹலமானன என்னும் பிரதேசத்தில் அண்மையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மகள் திருமண பந்தத்தில் இணைந்து கொண்டதன் பின்னர் மகளுக்கு வீடு அமைத்துக் கொள்ள தந்தை காணியை மகளின் பெயரில் எழுதி, ஒரு பகுதி காணியில் சிறிய வீட்டில் வாழ்ந்து வந்துள்ளார்.

குறித்த மகள், தந்தை வழங்கிய காணியில் அதி சொகுசு அழகிய வீடு ஒன்றை நிர்மாணித்துள்ளார்.

தந்தையின் பழைய சிறிய வீட்டினால் தமது ஆடம்பர வீடின் அழகு கெடுவதனால, தந்தையின் வீட்டை இடித்துவிட மகள் திட்டமிட்டார்.

தந்தை வீட்டில் இல்லாத போது அவரது உடைமைகள், உடைகள் உள்ளிட்ட அனைத்துப் பொருட்களும் சிறிய வீட்டில் இருந்த நிலையில் புல்டோசர் ஒன்றை தருவித்து அந்த வீட்டை தரைமட்டமாக்கியுள்ளார்.

வீடு திரும்பிய தந்தை இதனை கண்டு அதிர்ச்சியடைந்துள்ளார். இது குறித்து மகளிடம் தந்தை கேள்வி எழுப்பியுள்ளார்,

சிறிய பழைய வீடு தமது வீட்டின் அழகை பாதிப்பதாகவும் அதனால் வீட்டை இடித்து தரைமட்டமாக்கியதாகவும் மகள் பதிலளித்துள்ளார்.

இதனால் சமாதானம் அடையாத தந்தை, இது குறித்து கரந்தெனிய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

தந்தையை தமது வீட்டில் வந்து குடியேறுமாறு மகள் கோரியுள்ளார். எனினும் அந்தக் கோரிக்கையை குறித்த தந்தை ஏற்றுக்கொள்ளவில்லை.

மகளை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லால் சந்திரசிறி, இந்தப் பிரச்சினையை மகளுக்கு தெளிவுபடுத்தியுள்ளார்.

பின்னர், புதிய வீடு ஒன்றை நிர்மாணிக்க நான்கு இலட்சம் ரூபா தந்தைக்கு வழங்குவதாக மகள் உறுதியளித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து வழக்குப் பதிவு செய்யாமல் இணக்கப்பாட்டின் அடிப்படையில் தந்தையும் மகளும் வீடு திரும்பியுள்ளனர். (இ-5)

# செய்தித்துளி

## மின்னல் தாக்கி பத்துப்பேர் பலி!

இந்த ஆண்டில் மின்னல் தாக்குதல்களுக்கு இலக்காகி பத்துப்பேர் உயிரிழந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிறுவனம் அறிவித்துள்ளது. கடந்த ஜனவரி மாதம் முதல் இதுவரையில் பத்துப் பேர் மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளனர். தற்போது நாட்டில் நிலவி வரும் சீரற்ற காலநிலையை கருத்திற் கொண்டு இடி மின்னல் தாக்குதல்கள் ஏற்படக் கூடுமெனவும், மக்கள் இது தொடர்பில் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டுமெனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மின்னல் தாக்கத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ள மக்கள் பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்ற வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ-5)

## மாணிக்கக்கல் அகழ்வு; ஐவர் கைது

இரத்தினபுரி பிரதேசத்தைச் சேர்ந்த ஐந்து பேர் சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டமையினால் கைது செய்யப்பட்டுள்ளனர். பொகவந்தலாவ - ஆல்டி தோட்டவனப் பகுதியில் சட்ட விரோத மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டிருந்த ஐவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் இந்தச் சம்பவம் தொடர்பாக பொகவந்த லாவைப் பொலிஸார் மேலதிக விசாரணையினை மேற்கொண்டு வருகின்றனர். (இ-5)

## சுபநேரம் பார்த்து கோவில் பொறுப்பாளர் படுகொலை

சுபநேரம் பார்த்து கோயில் பொறுப்பாளர் ஒருவரை படுகொலை செய்த கொலையாளிகள் இருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். புளத்சிங்கள பிரதேசத்தில் உள்ள ஹல்வதுரை கிராமத்தின் பத்திர காளி கோயில் பொறுப்பாளரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார். கோயிலின் பூசாரி மற்றும் கொழும்பு மட்டக்குளி பிரதேசத்தைச் சேர்ந்த பழைய இரும்பு சேகரிப்பாளர் ஒருவரும் இணைந்து இந்தக் கொலையைச் செய்து ள்ளனர். (இ-5)

## நீரில் மூழ்கிய மீன் சந்தை

பேலியாகொடை மத்திய மீன் சந்தையின் வாயிற் பகுதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக நேற்று அதிகாலை பொருட்களை கொண்டு வந்த லொறிகளும், மீன்கள் கொண்டுவந்த லொறிகளும் சந்தையின் உட்பகுதிக்குள் உள்நுழைய முடியாத நிலை காணப்பட்டதாக பேலியாகொடை மீன் சந்தை சங்கத்தின் தலைவர் ஜயசிறி விக்கிரமஆராச்சி தெரிவித்துள்ளார். (இ-5)

## களனி கங்கையின் நீர் மட்டம் உயர்வு

தொடரும் அடைமழை காரணமாக களனிகங்கையின் நீர் மட்டம் அதிகரித்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

களனிகங்கையின் கரையோரப் பகுதியில் குடியிருக்கும் மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அதேவேளை களுகங்கை, மாதுறு ஓயா மற்றும் மகாவலிகங்கையிலும் கூட கடும் மழைகாரணமாக நீர் நிரம்பி வழிந்தோடுவதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது. (இ-5)

# 3000குடும்பங்களுக்கு சீமெந்து வழங்கப்படும்

தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் இந்த வருடம் யாழ். மாவட்டத்தில் உள்ள 3 ஆயிரம் குடும்பங்களுக்கு வீட்டின் பூச்சு வேலைகளுக்காக தலா 10 சீமெந்து பக்கெற்றுகள் வழங்கப்படவுள்ளதாக தேசிய வீடமைப்பு சபையின் யாழ்.மாவட்ட முகாமையாளர் எம். ரவீந்திரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர்மேலும்தெரிவிக்கையில்,

தேசிய வீடமைப்பு அதிகார சபையால் பயனாளிகளுக்கு பல்வேறு உதவித் திட்டங்கள், கடன் திட்டங்களை வழங்கி வருகின்றது.

அந்தவகையில் இம்முறை யாழ். மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவு ஊடாகவும் தெரிவு செய்யப்பட்ட 3 ஆயிரம் குடும்பங்களுக்கு அவர்களின் வீடுகளின் பூச்சுவேலைக்காக சீமெந்து பக்கெற்றுகள் வழங்கப்படவுள்ளன.

இதன் ஆரம்ப கட்டமாக கரவெட்டி, நல்லூர் ஆகிய பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட 100 பயனாளிகளுக்கு தலா 10 சீமெந்து பக்கெற்றுகள் நேற்றுமுன்தினம் யாழ். மாவட்ட அரச அதிபரால் தேசிய வீடமைப்பு அதிகார சபை யின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

எதிர்வரும் 2 வாரங்களுக்குள் தெரிவு செய்யப்பட்ட ஆயிரம் குடும்பங்களுக்கு இத்திட்டத்தின் கீழ் சீமெந்து பைக்கெற்றுகள் வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# முள்ளிவாய்க்கால்

மானிடம் மானமிழந் தொழிந்து
மாண்ட தாய்மடி
உலக அசிங்கத்தை அரங்கேற்றி
உயிர் உருகவைத்தவுலை
கொலைவெறியர் கொண்டாடிய
கொலைக்களம்
குருதி ஆறோடிக் குடி நீரிற்கலந்த
குற்றுயிராய்த் துடித்த நிலம்
கடவுளாற்கூட கால்பதிக்கவியலா
கரும்புகை மூண்ட இடம்
பொஸ்பரஸ் குண்டெரித்து உடல் கருக்கிய
பொறிமூட்டிய சூளை
தமிழர் தாயகத்தில் கண்ணீரின்
தனியடையாளம்
மானிடம் துறந்து விலங்குகளாய்
மாமிசம் புசித்த புல்வெளி
தரணி தடுத்தும் வானம் அழுதொழிந்தும்
தனியோரினம் புதையுண்ட புதைகுழி
தாய்மடியறியா தாழினத்தின் பிறப்புக்கள்
தான்வந்த இடமதிலே தறிகெட்டுப்போன இடம்
கல்லறையில் ஜனித்தவர்கள் எமக்களித்த
கண்ணீரின் கருவறைமுள்ளிவாய்க்கால்

அ.அஜந்தன்
கந்தர்மடம்

# நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-16.05.2016

| நாடு | நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| அமெரிக்கா | டொலர் | 143.81 | 147.61 |
| பிரிட்டன் | பவுண்ட் | 205.79 | 213.10 |
| ஐரோப்பிய ஒன்றியம் | ஈரோ | 161.64 | 168.08 |
| சுவிட்சர்லாந்து | பிராங் | 146.34 | 152.45 |
| கனடா | டொலர் | 110.37 | 114.97 |
| அவுஸ்திரேலியா | டொலர் | 103.71 | 108.62 |
| சிங்கப்பூர் | டொலர் | 104.35 | 108.35 |
| இந்தியா | ரூபா | 2.1777 | ------- |
| சீனா | யுவான் | 22.3284 | -------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 386.6090 |
| குவைத் | டினார் | 483.5114 |
| ஓமான் | ரியால் | 378.5504 |
| கட்டார் | ரியால் | 40.0357 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.8588 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.6777 |

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சுன்னாகம் | மருதனார் மடம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 70 | 100 | 140 | 120 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 200 | 140 | 100 | 250 | 200 |
| தக்காளி | 190 | 180 | 200 | 240 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 60 | 60 | 80 |
| கோவா | 140 | 100 | 80 | 100 | 160 |
| கரட் | 100 | 100 | 100 | 120 | 120 |
| பூசணி | 60 | 20 | 40 | 40 | 40 |
| புடோல் | 120 | 50 | 80 | 100 | 100 |
| வாழைக்காய் | 60 | 30 | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 120 | 100 | 110 | 140 | 160 |
| பெரிய வெங்காயம் | 100 | 75 | 90 | 80 | 100 |
| பாகற்காய் | 150 | 120 | 140 | 150 | 120 |
| வெண்டிக்காய் | 120 | 60 | 80 | 100 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | 100 | 100 | 100 |
| பயற்றங்காய் | 160 | 100 | 120 | 140 | 120 |
| லீக்ஸ் | 140 | 100 | 140 | 200 | 160 |
| பீற்றூட் | 120 | 100 | 160 | — | 160 |
| கறிமிளகாய் | 100 | 120 | 140 | 100 | 160 |
| முருங்கைக்காய் | 200 | 120 | 100 | 100 | 200 |
| போஞ்சி | 200 | 180 | 200 | 180 | 240 |
| கத்தரிதம்புள்ள | 100 | 50 | 80 | 120 | 120 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 40 | 50 | 30 |
| தேசிக்காய் | 600 | 300 | 450 | 500 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 15-30 | 50 | 40 | 20-30 |
| இராசவள்ளி | 150 | 140 | 160 | 150 | 160 |
| வெங்காயப்பூ | — | — | — | — | — |
| முள்ளங்கி | 100 | 60 | 100 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 30 | 25 | 30 |
| வல்லாரை | 10 | 10 | 10 | 10 | 20 |
| ஈரப்பலா | 80 | — | — | — | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## முல்லைத்தீவு இராணுவ முகாமை விடுதலைப்புலிகள் கைப்பற்றினார்கள் 182

### இராணுவக் கப்பல் தகர்ப்பு

இதற்கிடையே முல்லைத் தீவு கடற்கரை அருகே இராணுவக் கப்பல் ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. ரணவிரு என்ற பெயர் கொண்ட அந்தக் கப்பல் 120 அடி நீளமானது ஆகும்.

19.07.1996 அன்று விடுதலைப்புலிகளின் தற்கொலைப் படை வீரர்கள் சிலர் ஒரு படகு நிறைய வெடிகுண்டுகளை ஏற்றிக்கொண்டு வேகமாக வந்து இராணுவக்கப்பல் மீது மோதினார்கள்.

இதனால் அந்தக் கப்பல் சுக்கு நூறாக வெடித்து சிதறியது. கப்பலில் இருந்த 40 சிப்பாய்களும் கொல்லப்பட்டனர்.

### தளபதி பலி

முல்லைத்தீவு முகாமில் சிக்கி இருந்த இராணுவத்தினரை மீட்க தளபதி பஷ்லி லாபிர் தலைமையில் அதிரடிப்படையினர் சென்றனர். அவர்களை நோக்கி விடுதலைப்புலிகள் சரமாரியாகச் சுட்டனர். இதில் இராணுவத் தளபதி கொல்லப்பட்டார். மேலும் பலர் படுகாயம் அடைந்தனர்.

முல்லைத்தீவு முகாம் தாக்குதல் பற்றி இராணுவ அதிகாரி சரதத்முனசிங்கே கூறியதாவது,

முல்லைத்தீவு முகாம் மீதான தாக்குதல் பற்றிய சரியான விவரம் எதுவும் இன்னும் கிடைக்கவில்லை.

இந்தத் தாக்குதலை பிரபாகரன் முன்னின்று நடத்தியதாகவும், அவர் காயம் அடைந்ததாகவும் கூறப்படுவது பற்றி எனக்கு எந்தத் தகவலும் வரவில்லை. இதுபோன்ற தாக்குதலைப் பிரபாகரனோ அல்லது அவரது இயக்கத்தைச் சேர்ந்த 2 ஆவது கட்டத் தலைவர்களோ முன்னின்று நடத்தியிருக்க மாட்டார்கள். இளைய தளபதிகள்தான் தலைமை தாங்க அனுப்பி வைக்கப்படுவார்கள் என்று கேள்விப்பட்டு இருக்கிறேன்.

இவ்வாறு இராணுவ அதிகாரி சரத்முனசிங்கே கூறினார்.

### ஓயாத அலைகள்

முல்லைத்தீவு இராணுவ முகாம்மீது நடந்த இந்தத் தாக்குதலுக்கு ஓயாத அலைகள் என்று விடுதலைப்புலிகள் பெயர் சூட்டி இருந்தனர். எதிர்த்து நின்ற இராணுவவீரர்களை முறியடித்து முகாமை முற்றிலுமாக அழித்து விட்டதாக விடுதலைப்புலிகள் அறிவித்தனர். பீரங்கி மற்றும் கனரக ஆயுதங்களையும் விடுதலைப்புலிகள் கைப்பற்றிக் கொண்டனர். கடந்த 13 ஆண்டுகளில் விடுதலைப் புலிகள் நடத்திய மிகப்பெரிய தாக்குதல் இதுவாகும்.

### 1,200 பேர் பலி

முல்லைத்தீவு போரில் 1,200 க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இறந்தவர்களின் உடலைச் சேகரித்து செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் ஒப்படைப்பதற்காக வடக்குப் பகுதியில் உள்ள கிளிநொச்சி நகருக்கு அனுப்பி வருகிறோம். உருக்குலைந்து போன 100 க்கும் மேற்பட்ட உடல்கள் முகாம் வளாகத்திலேயே தகனம் செய்யப்பட்டுவிட்டன.

### சேற்றில் மூழ்கடிப்பு

19.07.1996 அன்று இரவிலேயே முல்லைத்தீவு இராணுவ முகாம் விடுதலைப் புலிகளின் முழுக்கட்டுப் பாட்டுக்குள் வந்து விட்டது. முகாமை மீட்பதற்காக கூடுதல் இராணுவத்தினர் ஹெலிகொப்டர் மூலம் அனுப்பி வைக்கப்பட்டனர். விடுதலைப்புலிகளின் எதிர்த்தாக்குதல் காரணமாக அவர்களால் முகாமை நெருங்க முடியவில்லை.

முகாமில் இருந்து 10 கிலோ மீற்றர் துரத்தில் உள்ள அலம்பில் என்ற இடத்தில் இராணுவ ஹெலிகொப்டர் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டது. அதிகாரி உட்பட 37 வீரர்கள் அங்கு நடந்த போரில் கொல்லப்பட்டுச் சேற்றில் மூழ்கடிக்கப்பட்டனர்.

மேற்கண்டவாறு விடுதலைப்புலிகள் தரப்பில் கூறப்பட்டிருந்தது.

### இராணுவ அதிகாரி ஒப்புதல்

முல்லைத்தீவு போரில் உயிர் இழந்த இராணுவத்தினரின் எண்ணிக்கை அதிகம்தான் என்பதை முதன் முறையாக 21.07.1996 அன்று அதிகாரி ஒருவர் ஒப்புக் கொண்டார்.

நிருபர்களுக்கு பேட்டி அளித்த இராணுவ அதிகாரி ஒருவர், ஏற்கனவே அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டதை விட இராணுவ தரப்பில் சேதம் அதிகம்தான். ஆனால் விடுதலைப்புலிகள் கூறும் அளவுக்கு இல்லை என்று தெரிவித்தார்.

வானொலியும் வழக்கத்துக்கு மாறாக 21 ஆம் திகதி காலை போர் முனைச் செய்தி பற்றி எந்தவித தகவலையும் சொல்லாமல் மௌனம் சாதித்தது.

### உடல்கள் அனுப்பப்பட்டன

போரில் இறந்த இராணுவத்தினரின் உடல்களை ஒப்படைக்கும் பணி அன்று மாலை தொடங்கியது. இராணுவத்தினரின் உடல்களுடன் பல வாகனங்கள் கிளிநொச்சியில் இருந்து 70 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள வவுனியா நகருக்குள் அணிவகுத்துச் சென்றனர்.

செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி ஒருவர் அந்த வாகனங்களுக்குப் பாதுகாப்பாக சென்றார். எத்தனை பேர் உடல்கள் அனுப்பி வைக்கப்பட்டன என்ற விபரம் வெளியிடப்படவில்லை.



தாக்குதலுக்காக பீரங்கியில் செல்லும் விடுதலைப் புலிகள்.

(தொடரும்)

தனி மனிதர்களிடம் சரணடையாதே! அது உனக்கு அடிமைப்புத்தியைக் கற்பிக்கும்.
- காணோபஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# உயிரிழந்த எம் உறவுகளே! இங்கு யாரிடமும் நீதியில்லை

வன்னிப் பெரு நிலப்பரப்பில் கொன்றொழிக்கப்பட்ட எம் உயிரினும் மேலான உறவுகளே! வாழ வேண்டிய உங்களைச் சாகடித்த கொடூரம் எங்கள் இதயங்களை இன்னமும் கருகிக்கொண்டே இருக்கின்றது.

பெரும்பான்மை இனத்தின் குருதிப்பசிக்கு நீங்கள் பலியாகிப் போனீர்கள். இந்த உலகம் உங்கள் மீது மனித நேயத்தைக் காட்டியிருந்தால் இன்று நீங்களும் எங்களோடு வாழ்ந்திருப்பீர்கள்.

என்ன செய்வது? உங்களை இழந்து நாங்கள் கண்ணீர்விட்டுக் கருகிப் போவதுதான் விதி என்றாயிற்று.

முப்பது ஆண்டுகால போராட்டம். இதற்காக நாம் அனுபவித்த துன்பங்கள், இழந்து போன மனித உறவுகள் கொஞ்சமல்ல. இருந்தும் ஈனப்பிறப்புக்கள் இன்னமும் உங்களின் உயிரிழப்புகள் பற்றியோ, எங்களின் அவலங்கள் பற்றியோ கரிசனை கொண்டதாகத் தெரியவில்லை.

கௌதம புத்தபிரானின் போதனைகளைப் பின்பற்றுவதாக கூறும் மக்களால் – ஆட்சியாளர்களால் மனிதத்தை மனிதமாகப் பார்க்க முடியவில்லை.

தமிழினம் என்றாலே அவர்களுக்கு இயல்பான வெறுப்பு. இத்துணை அழிவுகள் நடந்தும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் சிங்களப் பேரினவாதம் விருப்புக் கொள்ளவில்லை. தமிழர்களை அழித்தால் அது பயங்கரவாத ஒழிப்பு.

தமிழர்கள் சமஷ்டி என்று கேட்டால், அது தனி நாட்டுக்கான கோரிக்கை. அப்படியானால் நீங்கள் எங்களுக்கு என்னதான் தரப்போகிறீர்கள்? அதை யாவது சொல்லுங்கள் என்றால்,

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முன்னதாக மகிந்த ராஜபக்ஷவின் எதிர்ப்புக்கு ஈடுகொடுக்க வேண்டும். விமல் வீரவன்ச போன்ற இனவாதிகளின் பலத்தை சமாளிக்க வேண்டும் என்றவாறு கதை அளக்கப்படுகிறது.

உண்மையில் எங்கள் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் உங்களுக்கு உடன்பாடில்லை என்பது தான் நிஜம்.

நீங்கள்தான் எங்களைக் கொன்றொழித்துக் கொடுமைப்படுத்தி நிட்டூரம் தந்தீர்கள்; தருகிறீர்கள் என்றால் நீதிமறந்த இந்த உலகமும் அதர்மத்திற்கு உடன்பட்டு எங்களுக்கு கிடைக்க வேண்டிய நீதியை பெற்றுத்தரவில்லை என்பதை நினைக்கும்போது நாங்கள் சபிக்கப்பட்டவர்களா? அல்லது நம் மண்ணில் நடந்த தியாகத்தை மறந்தவர்களா? அல்லது இனப்பற்று இல்லாதவர்களா? என்ற கேள்விகள் எழுகின்றன.

இந்தக் கேள்விக்குள் 30 ஆண்டு காலம் மண் மீட்பு போரை நடத்திய ஓர் இனத்தில் எங்களுக்கு இப்படியொரு அரசியல் தலைமை.

தமிழனை விலைக்கு விற்றுப் பதவிபெற்று பகட்டு வாழ்வு வாழ்கின்ற போக்கிலித்தனம்.

தேர்தலில் கூட வெற்றியை தோல்வியாக்கி, தோல்வியை வெற்றியாக்கி மக்களின் வாக்களிப்பையே அர்த்தமற்றதாக்கும் அராஜகத்தனங்கள்; நிலைமை இப்படியாக இருக்க,

சர்வதேச சமூகமோ செத்தவன் தமிழன். அதற்கு நீதி கொடுப்பதாக இருந்தாலும் எனக்குக் கிடைக்கும் இலாபம் என்ன என்று கேட்கின்ற அளவில் உயிரிழந்த எம் உறவுகளே! இங்கு யாரிடமும் நீதியில்லை – நியாயம் இல்லை. எங்கும் புகழ் வேண்டல், எங்கும் பதவியாசை.

சீ! இவ் உலகைவிட மறுமை உங்களுக்கு நிம்மதியைத் தரட்டும். காலமும் கடவுளும் கண்விழித்தால், தமிழருக்கு விமோசனம் கிடைத்தால் மட்டும் உங்கள் மறு பிறப்புப் பற்றி முடிவெடுங்கள். அதுவரை அமைதி கொள்க.

# நீதிக்கான நீண்ட போராட்டத்திற்கு தமிழினம் உணர்வுடன் தயாராக வேண்டும்

## தமிழ் சிவில் சமூகம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

பொறுப்புக்கூறல் தொடர்பான விடயத்தில் சர்வதேச ரீதியாக ஏற்பட்டுள்ள தேக்க நிலையை உணர்ந்து நீதிக்கான ஒரு நீண்ட கால போராட்டத்திற்கு நாம் தயாராக வேண்டும் என முள்ளிவாய்க்கால் நினைவு தின அனுஷ்டிப்பு தொடர்பான தனது அறிக்கையில் தமிழ் சிவில் சமூகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அமையத்தின் இணைப் பேச்சாளர்களான குமாரவடிவேல் குருபரன், எழில்ராஜன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ் மக்களுக்கெதிரான கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையின் உச்சக்கட்டமான முள்ளிவாய்க்கால் பேரவலம் இடம்பெற்று இவ்வாரத்துடன் 7 வருடங்கள் ஆகின்றன. முள்ளிவாய்க்காலிலும் அதற்கு முன்னரும பின்னரும் நடைபெற்ற, நடைபெற்றுக் கொண்டிருக்கும் குற்றங்களுக்கு நீதியை கண்டறியும் போராட்டம் ஒரு தேக்க நிலையை அடைந்துள்ளது என்பதே யதார்த்தம்.

தொடர்ந்து குற்றங்கள் தமிழ் மக்களுக்கெதிராக இழைக்கப்பட்டு வருவதும் குறைந்தபாடில்லை. கைதுகளும், வன்முறைகளும், நிலப்பறிப்புக்களும் தொடர்ந்து வருகின்றன. இராணுவமயமாக்கலும் தொடர்கின்றது. எமக்காக ஆயுதம் தாங்கி போராடியவர்கள் மீதான அரசின் வன்முறை தொடர்கின்றது. வெட்கி தலை குனிய வேண்டிய அளவிற்கு நாம் எமது போராளிகளை சமூகமாக அரவணைக்கவும் தவறி இருக்கிறோம்.

நினைவுகூரலின் பணிகளில் ஒன்று ஒரு தேசமாக நாம் மீண்டெழுதலை சாத்தியப்படுத்துவதற்கான அரசியல்வெளிக்கான புத்துணர்வை வழங்குவதாகும். இவ்வாரத்தை உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கும் வேளையில் நாம் எமக்கு முன்னிருக்கும் பணியை பற்றி ஆழமாக சிந்திக்க வேண்டும்.

பொறுப் புக்கூறல் தொடர்பான விஷயத்தில் சர்வதேச ரீதியாக ஏற்பட்டுள்ள தேக்க நிலையை உணர்ந்து நீதிக்கான ஒரு நீண்ட கால போராட்டத்திற்கு நாம் தயாராக வேண்டும். அப்போராட்டத்தில் நாம் இப்போது உடனடியாக செய்ய வேண்டியது ஓர் சமூகமாக நாம் எமக்கெதிரான இழைக்கப்பட்ட குற்றங்களை ஆவணப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுதல்.

மேலும் போராளிகளதும் அவர்களது குடும்பங்களினதும், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் மீட்சிக்கும் மறுவாழ்வுக்கும் முழுமையான சமூக ஒருங்கிணைப்பிற்கும் தேவையான சமூகத் திட்டங்களை வகுத்து செயற்பட வேண்டும். அத்தோடு எமது சுயநிர்ணய அரசியலை தக்க வைப்பதற்கான அரசியல் தகைமை விருத்தி செயற்பாடுகளில் கவனம் செலுத்த வேண்டும்.

இன்னும் பொதுவாக சொன்னால் தமிழ்த் தேசிய உட்கட்டமைப்பு புனருத்தாரண வேலைகளில் நாம் கவனம் செலுத்த வேண்டிய காலப் பகுதி இது. இம்முயற்சிகளில் எல்லோரும் கைகோர்க்க தமிழ் சிவில் சமூக அமையம் அழைப்பு விடுக்கின்றது.

எமக்காக மரணித்தவர்களை, படுகொலை செய்யப்பட்டவர்களை நினைவு கூரும் இந்த வேளையில் அவர்களது நம்பிக்கைகளை நாம் எமதாக வரித்துக் கொள்ள வேண்டும். அமைதியர்கவும், உணர்வுபூர்வமாகவும், கூட்டாகவும் எமது நீண்ட போராட்டத்தில் உயிர் நீத்த அனைத்து உறவுகளையும் இவ்வாரத்தில் நினைவுகூருவோமாக. என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-4)

# 34 இந்திய மீனவர்களை விடுதலை செய்வதற்கு அனுமதி

(யாழ்பாணம்)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றத்திற்காக இலங்கை சிறைச்சாலைகளில் ஒரு மாத காலமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த 34 இந்திய மீனவர்களையும் விடுதலை செய்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தால் நேற்றைய தினம் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது

அந்த வகையில் யாழ். மாவட்ட சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 13 இந்திய மீனவர்களும் ஊர்காவற்றுறை நீதிமன்றினால் நேற்றைய தினம் விடுதலை செய்யப்பட்டு யாழ் இந்திய துணைத்தூதரகத்தில் நீரியல் வளத்துறையினரால் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்

மேலும் மன்னார் மாவட்டத்தில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த 21 மீனவர்களையும் விடுதலை செய்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தால் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. அந்தவகையில் நீதிமன்றினால் இவர்களை இன்றைய தினம் விடுதலை செய்யப்படவுள்ளனர்

கடந்த ஏப்ரல் மாதம் 5,7 மற்றும் 27 ஆம் திகதிகளில் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட போது இலங்கை கடற்படையினரால் இவர்கள் கைது செய்யப்பட்டு நீரியல் வளத்துறை அதிகாரிகளால் நீதிமன்றங்களில் ஒப்படைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-9)

# பரிசளிப்பு விழா பிற்போடப்பட்டது

கிளி/ உருத்திரபுரம் மகா வித்தியாலயத்தில் இன்று செவ்வாய்க் கிழமை மு.ப. 10 மணிக்கு நடை பெற ஏற்பாடு செய்யப்பட்ட உருத்திரபுரம் மகா வித்தியாலயத்தின் 66 ஆவது ஆண்டு அகவை நிறைவும் பரிசளிப்பு விழாவும் தொடரும் சீரற்ற கால நிலை காரணமாக பிற்போடப்பட்டுள்ளதாக அதிபர் திருமதி மீனலோஜினி இதய சிவதாஸ் அறிவித்துள்ளார்.

இப் பரிசளிப்பு விழா தினம் தொடர்பாக பின்னர் அறியத் தரப்படும் என மேலும் தெரிவித்துள்ளார். (இ-309)

## குருதேவரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் ஸ்ரீமத் பகவத்கீதை வினாவிடைப் போட்டி (பாடசாலை மாணவர்களுக்கானது)

வினா இல.33
(அத்:2.ஸ்லோ:58)
ஞானியினுடைய புலன்கள் (இந்திரியங்கள்) எவ்வாறு செயற்படுகின்றன?

விடை: ஆமை தனது எல்லாப் பக்கங்களில் இருந்தும் தனது உறுப்புக்களை உள்ளிழுத்துக்கொள்வது போல ஞானி உலகப் பொருட்களில் இருந்து புலன்களை முற்றிலும் உள்ளிழுத்துக் கொள்கிறான்.

வினா இல.34
(அத்.6:ஸ்லோ.10)
தியானம் என்பது என்ன?

விடை: அலைந்து கொண்டிருக்கின்ற மனநிலையை ஓர் இடத்தில் இருத்துதல் (மனதை ஒடுக்குதல்)

ஸ்ரீமத் பகவத்கீதை வினாவிடைப் போட்டி
எழுத்துப்பரீட்சை
காலம்:22.05.206 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்: காலை 10 மணி முதல் 11 மணி வரை
இடம்: யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை

அனைத்து வடமாகாண பாடசாலை மாணவர்களும் பங்குபற்றலாம்.

மாணவர்களுக்கு: பதிவுகளை 18.05.2016 இற்கு முன் மேற்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளன.

தொடர்புகளுக்கு:
சின்மயாமிஷன்
இல.09, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 3447, 076 645 6920

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மறறும்பராமரிப்புவேலைகளுக்காக நாளை புதன்கிழமை யாழ்.பிரதேசத்தில உடுத்துறை, கொடுக்குளாய், ஆழிய வளை, வெற்றிலைக் கேணி, வெற்றிலைக்கேணி இராணுவ முகாம், கட்டைக்காடு, கட்டைக்காடு இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் குட்செட் வீதி பிர.தேசம், கோவில்குளம் சிவன் கோவிலடி பிரதேசம் ஆகிய இடத்திலும் மன்னார் பிரதேசத்தில் அரிப்பு, சவேரியார்குளம், வெள்ளிமலை, CECB ஆகிய பிரதேசங்களில் மின் தடைப்படும்.(இ-9)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



வழிபடுவதற்குரிய(பூஜைக்குரிய) ஒரே கடவுள் மனித உடலிலுள்ள மனித ஆன் மாவே. எல்லா விலங்குகளும் கோயில் களே என்பது உணமைதான். ஆனால் மனிதனோ அனைததிலும் உயர்ந்த கோயில். கோயில் களுள் தாஜ் மஹால் என்பதே. என்னால் அதில் வழிபட முடியாவிட்டால் வேறு எந்தக் கோயிலும் எந்தப் பயனும் தராது.

தினமும் நம் கண்முன்னே கீழ்நோக்கிச் சென்று கொண்டிருக்கும் முப்பது கோடி மக்களைக் கடைத்தேற்றும் பொருட்டு உங்கள் வாழ்நாள் முழுவதையும் ஈடுபடுத்தக் கங்கணம் கட்டிக் கொள்க.

யாருடைய நெஞ்சு ஏழை மக்களுக்காகத் துயரத்தில் அழுமோ அவனையே நான் மகாத்மா என்பேன். அன்றேல் அவன் துராத்மாவே.

இலட்சக்கணக்கான மக்கள் பசியாலும் அறியாமையாலும் உழலும் வரை அவர்களுடைய செலவில் கல்வி கற்றும் அவர்களை ஒரு சிறிதும் கவனிக்காத ஒவ்வொரு மனிதனையும் நான் துரோகி என்பேன்.

# நீலங்களின் கிரிக்கெட் சமர்

# கிளிநொச்சி இந்துக்கல்லூரி சம்பியன்



கிளிநொச்சி இந்துக்கல்லூரியும் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயமும் மோதிய வடக்கின் நீலங்களின் சமர் கிரிக்கெட் போட்டியில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி சமரின் வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது


நாணயச் சுழற்சியில் வெற்றி ஈட்டிய கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்து களமிறங்கியது .

இரண்டு நாட்களைக் கொண்டு நடத்தப்பட்ட டெஸ்ட் கடினப்பந்து போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கிளிநொ ச்சி மத்திய கல்லூரி 35 ஆவது பந்து பரிமாற்றத்தின் நான்காவது பந்து வீச்சில் அணி அனைத்து விக்கெட்களையும் இழந்து 132 ஓட்டங்களை பெற்றது.

அதனை தொடர்ந்து துடுப்பாட களமிறங்கிய இந்துக்கல்லூரி அணியினர் பதினாறாவது பந்து பரிமாற்றத்தின் மூன்றாவது பந்தில் மூன்று விக்கெட இழப்பிற்கு 71 ஓட்டங்களை அணி அடைந்த வேளை மழை குறுக்கிட்டமையால் ஆட்டம் இடை நிறுத்தப்பட்டு தொடர்ந்து ஆரம்பிக்கப்பட்ட போட்டியில் இந்துக்கல்லூரி அணியினர் மூன்று விக்கெட் இழப்பிற்கு 51 ஆவது பந்துப்பரிமாற்ற நிறைவில் 206 ஓட்டங்களை பெற்ற வேளை தமது வெற்றிக்கு ஓட்டங்கள் போதும் என அணி தலைவரால் தீர்மானிக்கப்பட்டு துடுப்பாட்டம் கிளிநொச்சி மத்திய கல்லூரி அணிக்கு வழங்கப்பட்டதை அடுத்து துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மத்திய கல்லூரி அணி 31 ஆவது பந்து பரிமாற்றத்தின் நான்காவது பந்து வீச்சில் அணி அனைத்து விக்கெட்களையும் இழந்து 70 ஓட்டங்களுக்குள் மட்டுப்படுத்தப்பட ஒரு இனிங்ஸ் மற்றும் நான்கு ஓட்டங்களால் இந்துக்கல்லூரி அணி அபார வெற்றியை ஈட்டிக் கொண்டது.







ஏழாவது தடவையாக நடத்தப்பட்ட இப் போட்டியில் கடந்த காலத்தில் இரண்டுக்கு என்ற சம நிலை வெற்றியையும் இரண்டு தடவை சமநிலையிலும் முடிவடைந்த இப் போட்டி இவ் வருடத்துடன் மூன்றுக்கு இரண்டு என்ற வெற்றி வீதத்தை இந்துக்கல்லூரி மாற்றி அமைத்துள்ளது.

இப் போட்டியின் ஆட்ட நாயகனாக இந்துக்கல்லூரி வீரன் அனுக்சன் தெரிவு செய்யப்பட்டார். இவர் 84 ஓட்டங்கள் மற்றும் மூன்று விக்கெட்டுக்களையும் வீழ்த்தி உள்ளார்.

சிறந்த பந்து வீச்சாளராக அதே அணியை சேர்ந்த பார்த்தீபன் இரண்டு இனிங்ஸ்களிலும் பதினொரு விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். (கு)

## சமநிலை தவிர்ப்பு உதையில்

# புத்தூர் எவரெஸ்ட்டை வென்றது வல்வை விளையாட்டுக்கழகம்







பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் ''வடமாகாண வல்லவன்'' உதைபந்தாட்ட தொடரின் முதலாம் சுற்றில் கடந்த வியாழக்கிழமை 12. 05.2016 நடைபெற்ற இரண்டாவது போட்டியில் வல்வை வி.க. எதிர்த்து புத்தூர் எவரெஸ்ட் வி.க. மோதியது. சமபலம் கொண்ட போட்டியாக காணப்பட்டதனால் இரு அணிகளும் தமது. முழு முயற்சியுடன் விளையாடின.

ஆட்டத்தின் 40 ஆவது நிமிடத்தில் எவரெஸ்ட் வீரர் சஜீவன் முதலாவது கோலினை பதிவு செய்ய ஆட்டவேகம் மேலும் அதிகரித்தது. அதன் பின்னர் 56 ஆவது நிமிடத்தில் வல்வை வி.க. கிடைத்த மூலை உதையினை தாஸ் சரிவர பயன்படுத்தி கோலினை செலுத்தினார்.

ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் 1:1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்ததால் சமநிலை தவிர்ப்பு உதைக்கு ஆட்டம் தள்ளப்பட்டது. சமநிலை தவிர்ப்பு உதையில், 4:2 என்ற கோல் கணக்கலில் வல்வை வி.க. வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாக வல்வை வி.க. தாஸ் தெரிவு செய்யப்பட்டதுடன் அவருக்கான பணப்பரிசு மற்றும் பதக்கத்தினை ஓய்வு நிலை பிரதி கல்விப் பணிப்பாளர் சி. சிவப்பிரகாசம் வழங்கி வைத்தார். (கு)

## சிவனடியார் நவரட்ணம் ஞாபகார்த்த உதைபந்தாட்டம்

### றெயின்போ வெற்றி



மறைந்த நேதாஜி விளையாட்டுக்கழக உறுப்பினர் சிவனடியார் நவரட்ணம் ஞாபகார்த்தமாக நடத்தப்படும் உதைபந்தாட்டப் போட்டியில் நடைபெற்ற ஆட்டத்தில் சைனிங்ஸ், றெயின்போ அணிகள் மோதின.

விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தின் முதல் பாதியில் இரு. அணிகளும் தலா ஒரு கோல்களை போட்டன. 2 ஆம் பாதியில் றெயின்போ அணி மேலுமொரு கோலை போட்டு 2 : 1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (கு)

# இன்றைய போட்டிகள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண வல்லவன் உதைபந்தாட்ட தொடரில் இன்று செவ்வாய் க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடை பெறும் போட்டியில் யாழ்ப்பாணம் பாரதி விளையாட் டுக்கழகத்தை எதிர்த்து ஞானமுருகன் விளையாட்டுக் கழமும் மாலை 4 மணிக்கு நடை பெறும் போட்டியில் பொம்மேர்ஸ் விளையாட் டுக் கழகத்தை எதிர்த்து தேவன் பிட்டி சென். சேவியர் விளை யாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (கு)

## தவறி வீழ்ந்து குடும்பஸ்தர் காயம்

(யாழ்ப்பாணம்)

மின் கம்பத்திலிருந்து தவறி கீழே விழுந்த குடும்பஸ்தர் ஒருவர் படு காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று மதியம் 12 மணியளவில் யாழ்.நகரப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் உரும்பிராய் தெற்கினை சேர்ந்த சிவலிங்கம் சிவதர்சன் (வயது 33) என்ற குடும்பஸ்தரே படுகாயமடைந்தவராவார்.

கே.பிள் வேலை தொடர்பாக மின் கம்பத்தில் ஏறும் போதே மேற்படி விபத்து ஏற்பட்டுள்ளது. (செ-30)

## அடைமழை காரணமாக...

பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் 3 வீடுகள் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதுடன் 139 வீடுகள் பகுதியளவில் பாதிப்படைந்துள்ளன.

மேலும் பிற்பகல் 4 மணிக்குப் பின்னர் கரவெட்டி அல்வாய்ப் பகுதியிலும் பருத்தித்துறை அல்வாய் வடக்கு பகுதியிலும் ஏற்பட்ட மினி சூறாவளி காரணமாக 35 வீடுகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் 711 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 186 பேர் பாதிக்கப்பட்டதுடன் அவர்களில் 3 பேர் ஒரு நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ளனர். 21 வீடுகள் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 55 வீடுகள் பகுதியளவில் பாதிப்படைந்துள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 289 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து ஒரு பேர் பாதிக்கப்பட்டதுடன் அவர்களில் 2 குடும்பங்களைச்சேர்ந்த 24 பேர் ஒரு நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ளனர்.

11 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதுடன் சுழல் காற்றினால் 38 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. அத்துடன் ஒட்டுசுட்டான் கடடைக்காட்டுகுளமும்உடைப்பெடுத்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் 58 குடும்பங்களைச் சேர்ந்த 257 பேர் பாதிக்கப்பட்டதுடன் அவர்களில் 8 குடும்பங்களைச்சேர்ந்த 33 பேர் உறவினர் வீடுகளில் தங்கியுள்ளனர்.

ஒரு வீடு முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கடும் காற்றினால் பேசாலைப்பகுதி கடற்கரையில் 47 றோலர் படகுகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 17 படகுகள் முற்றுமுழுதாக கடலில் மூழ்கியுள்ளன.

அதில் 30 படகுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் மாந்தை மேற்குப்பகுதியில் 7 படகுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

மல்வத்து ஓயா நீர்த் தேக்கம் 11.2 அடியாக உயர்வடைந்துள்ள காரணத்தால் தம்பனிக்கைக் குளம், நானாட்டான் மடுக்கரை கிராமங்களைச்சேர்ந்த மக்களை அவதானமாக இருக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மன்னாரில் இருந்து புத்தளம் நோக்கிச்செல்லும் பாதை மூடப்பட்டுள்ளது.

இதேவேளை நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு அந்தந்த மாவட்டங்களின் பிரதேச செயலகங்கள் ஊடாக 3 நேர சமைத்த உணவுகள் வழங்கப்பட்டு வருவதுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சீரற்ற காலநிலை தொடர்ச்சியாக காணப்படுவதால் சேத விபரங்கள் அதிகரிக்கக்கூடும் எனவும் அவற்றை எதிர்கொள்வதற்குரிய ஏற்பாடுகள் தயார்நிலையில் இருப்பதாகவும் அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (செ-9)

## முள்ளிவாய்க்கால் நினைவுநாள் நாளை...

கப்பட்டு வருகின்றது.

இதனை தாயகத்திலுள்ள தமிழ் மக்களும் புலத்திலுள்ள தமிழ் மக்களும் தமது உறவுகள் நினைவாக அனுஷ்டித்து வருகின்றனர். குறிப்பாக தாயகத்தில் உள்ள கட்சிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி, ஆகிய கட்சிகளும், வடக்கு மாகாண சபை, யாழ்.பல்கலைக்கழகம், தமிழ் சிவில் சமூக அமையம் ஆகியனவும் பரந்தளவில் அனுஷ்டிப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

இதே போல புலத்திலும், பிரித்தானிய தமிழர் பேரவை, அனைத்துலக தமிழர் பேரவை, கனடா, ஜேர்மன், பிரான்ஸ், இந்தியா, போன்ற நாடுகளிலும் முள்ளிவாய்கக்கால் நினைவு வாரம் மிகப்பெரும் அளவில் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையில், நாளைய தினமும் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிப்பதற்கு பொதுமக்களை ஒன்று திரளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி நாளையதினம் ஒன்பது மணியளவில் முள்ளிவாய்க்காலில வடக்கு மாகாண சபையினது ஏற்பாட்டில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் நினைவு சுடர் ஏற்றப்பட்டு உணர்வு பூர்வமாக அஞ்சலி நடைபெறவுள்ளது. இதில் வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள், அவைத்தலைவர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இதற்கு அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நினைவு தினம் முள்ளிவாய்கால் கிழக்கில் - பி.ப 3.30 மணி (புனித சின்னப்பர் ஆலய வீதியால் செல்லும் கடற்கரை- புதுக்குடியிருப்பு - முல்லை வீதியில் 46-வது கி.மீ இல் அமைந்துள்ள ஆண்டவர் சொருபத்திற்கு அருகில் செல்லும் வீதி) மற்றும் மட்டக்களப்பு வாகரையில் - மாணிக்கபுரம் ஆற்றங்கரையில் மு.ப 10.00 மணிக்கு இரு இடங்களில் நடைபெறவுள்ளன. இந்நிகழ்வுகளில் அனைத்து பொது மக்களையும் கலந்து கொண்டு உயிரிழந்த மக்களின் ஆத்ம சாந்திக்காக பிராத்திக்குமாறும் அழைபபு விடுத்துள்ளனர்.

வவுனியா பிரஜைகள் குழு, முல்லைத்தீவு மாவட்ட பிரஜைகள் உரிமைக்கான அமையம், தமிழர் தாயகத்தில் கையளிக்கப்பட்டு கடத்தபபட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடியறியும் குடும்பங்களின் சங்கங்கள் ஆகியவற்றின் நினைவேந்தல் நிகழ்வுகள் காலை 10.30 மணியளவில் முள்ளிவாய்க்காலில் நடைபெறவுள்ளது. இது தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை அரசாங்கமானது, ஐந்தரை இலட்சத்துக்கும் அதிகமான மக்களை ஒன்றரை கிலோமீற்றர்கள் நீரேந்து நிலப்பரப்புக்குள் (களப்புக்குள்) முற்றுகையிட்டு, கொத்துக்குண்டுகளாலும், பல்குழல் எறிகணைகளாலும், இரசாயன எரி அமில வாயுக்களாலும் நிகழ்த்திய மாபெரும்தமிழினப்படுகொலையை, மனிதப்பேரவலத்தை, மனித உரிமை மீறல்களைக் கண்டித்து, பெரும் மக்கள் கூட்டமாக ஒன்றுகூடி 'நீதி கேட்கும் பொறிமுறை நினைவேந்தல் எழுச்சி நிகழ்ச்சிக்கு மே 18 புதன் கிழமை அன்று காலை 10.30 மணிகக முள்ளிவாய்க்காலில் ஏற்பாடுகள் செய்துள்ளோம்.

2009-ம் வருடம் இறுதி யுத்த முற்றுகை வலயமாகவும், இலங்கை அரசின் கொலைக்களமாகவும் ஆக்கப்பட்டு, ஒன்றரை இலட்சத்துக்கும் அதிகமான தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்ட முள்ளிவாய்க்கால் மண்ணில் ஒன்றுகூடி, தமிழர் தேசியப்பெருந்துயரை உலகுக்கு பறைசாற்றுவதோடு, வீழ்ந்த இடத்தில் வீரத்தின் துவக்கமாக எழுச்சி கொள்ளும் தமிழ்த் தேசிய இனத்தின் ஒன்றுகூடலாகவே,

இம்முறை 'முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலை ஏழாம் வருட நினைவேந்தல்' நிகழ்ச்சியை பிரகடனம் செய்துள்ளோம். ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் அமர்வுகள் யூன் மாதம் தொடங்கவுள்ள காலச்சூழலில், இலங்கை அரசின் இனப்படுகொலைக்கு உட்பட்டும் தப்பியும் பிழைத்திருக்கும் தமிழ்த் தேசிய இனம், கந்தகத்தாலும் குருதியாலும் தோய்த்து எடுக்கப்பட்டு இனப்படுகொலை நிகழ்த்தப்பட்ட மண்ணில் நின்றுகொண்டு நீதி கேட்கும் குறித்த மே 18 தேசிய ஒனறுகூடலானது முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகின்றது.

எனவே இந்த உயரிய நோக்கத்தை சிதைக்கும் படியாக, தத்தமது சௌகரியங்களுக்காக சுயநலன்களுக்காக முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலை நினைவேந்தலை சிறு சிறு குழுக்களாக, உதிரிகளாக அங்கொன்றும் இங்கொன்றுமாக கூட்டங்களை நடத்தி, மே 18 புதன கிழமை அன்று முள்ளிவாய்க்காலில் இடம்பெறவுள்ள 'தமிழ்த் தேசிய இனத்தின் ஒன்றுகூடலுக்கு' மக்களை பெரும் கூட்டமாக கலந்துகொள்ள விடாது தடுக்கும் - குழப்பங்களை ஏற்படுத்தும் அனைத்து நிகழ்ச்சிகளையும் உடனடியாக இரத்து செய்யும்படியும் - தவிர்த்துக்கொள்ளும் படியும் தமிழர் தாயகத்தின் எட்டு மாவட்டங்களிலும் உள்ள சகல பிரஜைகளையும் அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

'முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலை ஏழாம் வருட நினைவேந்தல்' ஆனது, இம்முறை 'நீதி கேட்கும் பொறிமுறை நினைவேந்தல் எழுச்சி நிகழ்ச்சியாக, 'தமிழ்த் தேசிய இனத்தின் ஒன்றுகூடல் ஆக, அதுவும் இனப்படுகொலை நடத்தப்பட்ட முள்ளிவாய்க்கால் மண்ணில் மட்டுமே இடம்பெறும் என்பதையும் சிரத்தையோடு கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நான் நான் என்று தன்னிலை முன்னிறுத்தல்களை முற்றிலுமாகத் துறந்து, நாங்கள் அதாவது இனம் என்று ஒன்றுபடுமாறு அனைத்து தரப்புகளையும் வலியுறுத்துகின்றோம. மாவீரத் தெய்வங்களினதும் - மேன் மக்கள் ஆத்மாக்களினதும் உன்னத தியாகங்களை நலினப்படுத்தும் மலினப்படுத்தும் வகையில், 'அங்கு அவர்கள் காலை செய்கிறார்கள், இங்கு நாங்கள் மதியம் அல்லது மாலை செய்கிறோம்' எனும் குறுமனநிலை - குழுநிலை வாதங்களை உடனடியாக களைந்து,

அனைத்து அரசியல் கட்சிகளினதும் தலைவர்கள் - பிரமுகர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு கிழக்கு மாகாணசபைகளின் உறுப்பினர்கள் (தத்தமது ஆதரவாளர்களுடன்), மதத்தலைவர்கள், மனித உரிமை செயல்பாட்டாளர்கள், சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், மாணவர்கள், கல்வியாளர்கள், பேராளர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், சமூக ஆர்வலர்கள், பொது மக்கள் என்று சகல பிரஜைகளையும் மே 18 அன்று, முள்ளிவாய்க் காலை நோக்கி பெரும்மக்கள்கூட்டமாக உணர்வுபூர்வமாக திரண்டு வருமாறு அழைப்பு விடுக் கின்றோம்.

மே 18 புதன்கிழமை அன்று தமிழர் தேசியப்பெருந்துயரை உலகுக்கு பறைசாற்றுவதற்காக, தமிழர் தாயகத்தின் எட்டு மாவட்டங்களிலும் முழுமையான ஹர்த்தாலுக்கு (முழுநாள் கடையடைப்புக்கு) அனைத்து வர்த்தக சங்கங்களையும், தனியார் பேருந்து போக்குவரத்து சங்கங்களையும், வன்முறைகள் படுகொலைகளுக்கு உள்ளாக்கப்பட்டு உயிர்நீத்த எமது உறவுகளை வசுவாசமாகவும், நன்றியுணர்வாகவும் நினைவுகூர்ந்து அஞ்சலிப்பதை தமிழ் இனத்தின் (ஒவ்வொரு பிரஜையினதும்) தேசியக்கடமையாகக் கொண்டு முழுமையான ஒத்துழைப்பை உளத்தூய்மையோடு வழங்குமாறும் கேட்டுக்கொளகினறோம்.

பொதுச்சுடர் ஏற்றும் மரபு

நான் பெரிது, நீ பெரிது என்று தொடரும் குறுமன நிலைப்போக்கை களைந்து இனம் அதாவது நாடு பெரிது என்று வாழும் உணர்வை தமிழ்ச்சமூகத்தில் வளப்படுத்துவதறகாக இம்முறை, 'முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலை ஏழாம் வருட நினைவேந்தல்' நிகழ்ச்சியில் பொதுச்சுடரை, தமிழ் அரசியல் கைதிகளின் குடும்பங்களைச்சேர்ந்த ஒருவர, அல்லது முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலையை ஒளிப்பதிவு செய்து ஐ.நா சபை வரை இனப்படுகொலை ஆதாரமாக கொண்டு சென்று சேர்ப்பித்த களப்படப்பிடிப்பாளர் (ஊடகவயலாளர்) ஒருவர், அல்லது மருத்துவ பொருள்களுக்கு கடும் தட்டுப்பாடு நிலவிய அந்த அபாயகரமான சூழலில் மானுடநேய மருத்துவப் பணியாற்றி எஞ்சிய உயிர்களைக் காப்பாற்றிய மருத்துவர் ஒருவர், அன்றி முள்ளிவாய்க்கால் கொலைக்களத்தில் தாய் தந்தை இருவரையும் இழந்து சிறுவர் இல்லங்களில் பராமரிக்கப்பட்டுவரும் சிறுவர் சிறுமிகளில் ஒருவர் ஏற்றுவதே உசிதமானதாகவும், அதுவே எமது நிலைப்பாடாகவும் உள்ளது. என்பதையும் சகல பிரஜைகளுக்கும விநயமாக அறியத்தருகின்றோம். என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்காலில் வகைதொகையின்றி இன அழிப்பு செய்யப்பட்ட எமது மக்களின் ஆத்ம சாந்திவேண்டி மன்னர் பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் மே 18 ஆத்மசாந்தி பிரார்த்தனை மன்னார் நகர மண்டபத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் "2009-ம் ஆண்டிற்கு பின்னர் தமிழ் மக்கள் எதிர் நோக்கும் சவால்கள்" என்னும் தலைப்பில் சிறப்புரை இடம் பெறவுளளதுடன் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் மாணவர்களுக்கு கற்றல் உபகரணாங்களும் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் முள்ளிவாய்க்கால் நினைவுதினம் மாட்டீன் வீதியில் அமைந்துள்ள அலுவலகத்திலும், யாழ்.பல்கலையின் நினைவு தினம், பல்கலை முன்றலிலும் கைலாசபதி கலையரங்கிலும் நடைபெறவுள்ளது. (செ-4)

## அனர்த்தங்...

வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு காரணமாக இடம்பெயர்ந்தவர்களுக்கு உலர் உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்கு பதிலாக நாளொன்றுக்கு ஒதுக்கப்பட்டுள்ள கொடுப்பனவான 150 ரூபாயை 225 ரூபாயாக அதிகரிப்பதற்கும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

நாட்டில் தற்போது நிலவிவரும் சர்ற்ற காலநிலை காரணமாக பாதிப்புக்கு உள்ளான பொதுமக்களுக்கு மேற்கொள்ளவேண்டிய உதவிகள் தொடர்பாக ஆராயும் விசேட கலந்துரையாடலொன்று நேற்றுப் பிறபகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம் பெற்றபோதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த ஆலோசனைகளை வழங்கினார்.

சீரற்ற காலநிலை காரணமாக இடம் பெயர்ந்துள்ளவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள கொடுப்பனவை அதிகரிப்பது தொடர்பான அமைச்சரவைப் பத்திரமானது அவசரகால அமைச்சரவைப் பத்திரமாக இன்று அமைச்சரவை கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும்ஜனாதிபதி குறிபபிட்டார்.

நாடு முழுவதும் ஏற்படும் வெள்ளப்பெருக்கு, மண்சரிவு, சூறாவளி காரணமாக பாதிக்கப்படும் பொது மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவது முப்படையினர் மற்றும் பொலிசாரின் பணிகளில் ஒன்று என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அவ்வாறான அனர்த்தங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் தேவையான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென பாதுகாப்பு படைகளுக்கு அறிவுறுத்தினார்.

எந்தவொரு அவசரகால நேரத்திலும் தேவையான அறிவுறுத்தல்களை பெற்றுக்கொள்ள ஜனாதிபதியின் செயலாளர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை தொடரபுகொள்ள முடியும்.

எதிர்காலத்தில் இவ்வாறான சீரறற அவசரகால நிலைமைகளை தடுப்பதற்கு முறையான அனர்த்த முகாமைத்துவ வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

மண்சரிவு அபாயமுள்ள இடங்களை மக்கள் இலகுவில் அறிந்து கொள்வதற்கு மக்களை அறிவூட்டும் வேலைத்திட்டமொன்றை உடனடியாக முன்னெடுக்குமாறு கட்டிட ஆராய்ச்சி திணைக்களத்திற்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை சீரற்ற காலநிலை காரணமாக ஏற்படும் அனர்த்தங்கள் குறித்த விழிப்புணர்வினை மக்கள் மத்தியில் ஏற்படுத்துமாறு வளிமண்டலவியல் திணைக்களத்திற்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

கம்பஹா, கொழும்பு, கேகாலை, குருநாகல், கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்கள் உள்ளிட்ட நாட்டின் 11 மாவட்டத்தினைச் சேர்ந்த 31 ஆயிரத்து 62 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 28 ஆயிரத்து 428 பேர் தற்போது ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையினால் இதுவரையிலும் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

அத்தோடு தற்போது பாதிக்கப்பட்டவர்களுக்கு முன்னெடுக்கப்பட்டு வரும் நிவாரணப் பணிகளை மேலும் விரைவுபடுத்துமாறு ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

அனர்த்த முகமைத்துவ அமைசசர் அனுர பிரியதர்சன யாப்பா, ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.அபேகோன், நிதி மற்றும் பாதுகாப்பு அமைச்சுக்களின் செயலாளர்கள், முப்படைகளின் தளபதிகள் மற்றும் பாதுகாப்பு படைகளின் பிரதானிகள், அனர்த்த முகாமைத்துவ நிலையம், கட்டிட ஆராய்ச்சி திணைக்களம் மற்றும் வளிமண்டல வியல் திணைக்களங்களின் சிரேஷ்ட அதிகாரிகள், மாவட்ட அதிகாரிகள் மற்றும் அரசாங்கத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் உள்ளிட்டோர் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டிருந்தனர். (செ-11)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# கிளிநொச்சியில் அதிக மழை...

வட மத்திய மாகாணம், வடமேல் மாகாணங்களில் உள்ள பல்வேறு பிரதேசங்களில் பொதுவாக 100 தொடக்கம் 180 மில்லிமீற்றர் வரையான மழை வீழ்ச்சி சராசரியாக பதிவுசெய்யப்பட்டது.

வடமாகாணத்தில் இருந்து எமக்கு கிடைத்த தகவலின்படி நேற்று முன்தினம் காலை 8.30 மணி தொடக்கம் நேற்றைய தினம் காலை 8.30 மணிவரை திருநெல்வேலியில 178.9 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும், யாழ்ப்பாணத்தில் 118.8 மில்லிமீற்றரும், கல்வியங்காட்டில் 171 மில்லி மீற்றரும், அச்சுவேலியில் 146.2 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும், நயினாதீவில் 182.2 மில்லிமீற்றரும், நெடுந்தீவில் 158.5 மில்லிமீற்றரும், பருத்தித்துறையில் 129.0 மில்லி மீற்றரும், அலம்பிலில் 230.9 மில்லி மீற்றரும், வல்லிபுனத்தில் 286.7 மில்லி மீற்றரும், ஒட்டுசுட்டானில் 295 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளது. (செ-9)

## வடக்கின்...

த்து வடக்கு மக்களது முதுகில் பல முறை குத்தி விட்டதாகவும் குற்றம் சாடியுள்ளார்.

இது தொடர்பில் நேற்றைய தினம் மதியம் யாழ்ப்பாணம் யூ.எஸ். ஹோட்டலில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கட்சியின் செயலாளரும், சிரேஷ்ட சட்டத்தரணியுமான என்.ஸ்ரீகாந்தா தெரிவிக்கையில்,

ஜனாதிபதியால் வடக்கு மாகாணத்திற்கென புதிதாக நியமிக்கப்பட்டுள்ள ஆளுநர் ரெஜினோல்ட் கூரே வடக்கு மாகாண சபையையும், வடக்கு மாகாண முதலமைச்சரினையும் கொழும்பில் பத்திரிகையாளர் சந்திபில் வைத்து கடுமையாக விமர்சிப்பு செய்துள்ளார். இது அவரால் கூறப்பட்டதாக அல்லது கூற வைக்கப்பட்டதாகவும் இருக்கலாம்.

ஆனாலும் ஆளுநரின் இந்த விமர்சிப்பு நாட்டின் அரசியல் அமைப்பை மீறும் செயலாகவே இருக்கும். வடக்கு மாகாண முதலமைச்சர், வடக்கு மாகாணத்தை சுடுகாடாக மாற்ற முயலவதாகவும் ஆளுநர் விமர்சித்துள்ளார். அரசியல் ரீதியான விமர்சனங்களை அரசியல்வாதி ஒருவர் மேற்கொள்ள முடியும். ஆனால விசேட பொறுப்பில் உள்ள ஆளுநர் ஒருவரால் இவ்வாறான விமர்சனங்களை முன்வைக்க முடியாது.

ஆளுநர் ஒருவரின் பதவி சம்பிரதாய பூர்வமானது, அவர் மாகாண சபையுடனும், அம்மாகாணத்தின் முதலமைச்சருடனும் இசைந்து போக வேண்டிய பொறுப்பு உண்டு. உதாரணமாக இந்திய குடியரசு வரலாற்றில் மாநிலங்களுக்கு ஆளுநர்களாக நியமிக்கப்பட்டுள்ளவர்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் சட்டமன்றத்தினை ஒரு போதும் விமர்சித்தது இல்லை.

வடக்கு மாகாண ஆளுநர் வடக்கு மாகாண சபையினை விமர்சனம் செய்தல், அரசியல் சாசனத்தையும், அவருடைய கடமைகள் மற்றும் அதிகாரங்களை மீறும் செயலாகவே இருக்கும். வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே வடக்கு மாகாணத்தின் ஆளுநராக இருப்பதற்குரிய தகுதியை அவர் தற்போது இழந்துவிட்டார். இவர் இனிமேலும் ஆளுநராக இருக்க முடியாது.

உடனடியாக இந்த மனிதர் மீளப் பெறப்பட்டு புதிய ஆளுநர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். ஜனாதிபதி இதனை கவனத்தில் எடுக்க வேண்டும். இவரை ஜனாதிபதி மீளப் பெறாவிட்டால், நாங்கள் வெளியேற்ற வேண்டி வரும். இவர் புதிதாக பதவியேற்று கொண்ட போது, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனை வரவேற்று அனுசரித்து சென்றார்.

வடக்கு மாகாண மக்களின் கனவானாக எதிர்பார்க்கப்பட்ட இவர், தற்போது வடக்கு மக்களது முதுகில் பலமுறை குத்திவிட்டார். ஆகையால் ஜனாதிபதி இவரை பதவி நீக்கம் செய்ய வேண்டும். அல்லது நாங்களே இவரை வெளியேற்ற வேண்டி ஏற்படும். வடக்கு மாகாண சபையில் உள்ள மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வடக்கு மாகாண ஆளுநரினை வெளியேற்ற முடியும்.

அரசியல் சாசனத்தின் 13 ஆவது திருத்தத்தில் உறுப்புரை 154 இல் (ஆ) பிரிவில் உப பிரிவு 4 இல் திட்டவட்டமாக இது கூறப்பட்டுள்ளது. ஆளுநர் அரசியல் சாசனத்தை தெரிந்து கொண்டே மீறினால், அதிகாரம் சம்பந்தப்பட்ட விடயத்தில் ஊழல் மற்றும் ஒழுங்கற்ற நடவடிக்கைகளின் போது, தார்மீக ரீதியான விடயத்தில் குற்றவாளியாக காணப்படல் ஆகிய காரணங்களுக்காக ஆளுநர் ஒருவரை பதவி நீக்கம் செய்ய மாகாண சபையால் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மூலம் முடியும்.

வடக்கு மாகாண ஆளுநர் மீது இந்த முதலிரண்டு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து, மாகாண சபையில் தீர்மானம் இயற்றி 38 உறுப்பினர்களில் 26 உறுப்பினர்களது ஆதரவுடன் ஆளுநரினை மாற்றி அமைக்க கோர முடியும். வடக்கு மாகாண ஆளுநர் ஒன்றை விளங்கி கொள்ள வேண்டும். வடக்கு மாகாண சபையை விமர்சனம் செய்ய விரும்பினால் அவர் தனது பதவியை துறந்த பிற்பாடு அதனை செய்ய முடியும்.

வடக்கின் ஆளுநர் ரெஜினோல்ட் கூரே மீதான எமது குற்றச்சாட்டுக்கள் 13 ஆம் குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன. ஆகவே ஆதாரம் மிக்க எமது குற்றச்சாட்டுக்கள் குறித்து நடவடிக்க எடுக்கப்படாவிட்டால், சட்டத்தின் ஆட்சி மெல்ல மெல்ல செத்து போய்விடும்.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் எத்தகைய தீர்வையையும் மாகாண சபை கேட்பதற்கு அதிகாரம் உள்ளது. வடக்கு மாகாண சபை கோரியுள்ள சமஷ்டி தீர்வும் அவ்வாறானது ஒன்றே. மாகாண சபையினது இந்த தீர்வு திட்டத்தை கூட ஆளுநர் ரெஜினோல்ட் கூரே விமர்சித்து உள்ளமை கடும் கண்டனத்துக்கு உரியதாகும். வடக்கு ஆளுநரின் இந்த செயற்பாடுகள் குறித்து தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் ஏனைய கட்சிகளுடன் பேசி விரைவில் ஒரு முடிவு எட்டப்படும என்றார் அவர்.

இச்சந்திப்பில் கட்சியின் நிதிச் செயலாளரும் வடக்கு மாகாண சபையின் உறுப்பினருமான விந்தன் கனகரத்தினம், கட்சியின் உபதலைவரும், கல்முனை மாநகர சபையின் முன்னாள் எதிர்க்கட்சி தலைவருமான ஹென்றி மகேந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (செ-4)


**British College of Higher Studies**

BCHS

வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

Settlement Visa மூலமாக UK செல்பவர்களுக்கான

**IELTS** *Life Skills*

வடக்கு மாகாணத்திலேயே அதிகப்படியான மாணவர்களை பயிற்றுவித்து பரீட்சையிலே அனைவரையும் வெற்றிபெறச் செய்யும் ஒரேயொரு நிறுவனம்.

100% பயிற்சி → 100% வெற்றி

Student, Migration Visa மூலமாக UK செல்பவர்களுக்கான

**IELTS** (Academic / General)

ஆரம்பத்தில் பயில சிரமப்படுவர்களுக்கு பிரத்தியேக வகுப்புகள் மூலமாக கூடுதல் பயிற்சிகள் வழங்கப்படும்

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

(C-4624)

No.15 , Sirambiyady Lane (Off Stanley Road), Jaffna.
(Above Sathosa SM & Near Ariyakulam Junction) Tel : 021-2224550

**Hotlines: 0770365728, 0777585913, 0777222422, 0714299935**



# மணி விழா வாழ்த்து

## இராசையா சிவசுப்பிரமணியம்

நிறைவேற்று எந்திரி கட்டடங்கள் திணைக்களம்
கிளிநொச்சி



17.05.2016 அன்று மணிவிழாக் காணும் இராசையா சிவசுப்பிரமணியம் (நிறைவேற்று எந்திரி கட்டடங்கள் திணைக்களம், கிளிநொச்சி)

தமது சேவைக்காலத்தில் பல தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் உருவாகவும் பல் தொழில் நுட்பத்துறையில் முன்னேறவும் காரணமாய் இருந்தவரும் அவர்களுக்கு ஒரு முன்னுதாரணமாக சேவையாற்றிய மணியம் ஐயா அவர்கள் ஓய்வு பெறும் தருணத்தில் எமக்கு நல்லாசானாய், வழிகாட்டியாய், நண்பனாய் திகழ்ந்த எங்கள் மணியம் ஐயா அவர்களுக்கு எம் இனிய மணிவிழா வாழ்த்துக்களுடன் நல்லூரான் அருளால் நலம் பல பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

**தங்களின் கீழ் சேவையாற்றி பிற திணைக்களங்களில் கடமை புரியும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்.**

(459)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.05.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.